26.11.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### சீன உப்பில் கலந்துள்ளது பிளாஸ்டிக்!



புதுடில்லி: சீனாவிலிருந்து வரும் அரிசியில், பிளாஸ்டிக் அரிசிகள் கலப்படம் செய்யப்படுவது உறுதியான நிலையில், தற்போது, சீன உப்பில், பிளாஸ்டிக் துகள்கள் கலந்திருக்கும் அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.உலக அளவில், உப்பு உற்பத்தியில், சீனா முதலிடம் பெற்றுள்ளது. இங்கு, கடல், தாதுக்கள், நீரூற்றுகள் மற்றும் கிணற்று நீரில் இருந்து உப்பு எடுக்கப்படுகிறது. இவற்றில் பிளாஸ்டிக் துகள்கள் கலந்திருப்பது குறித்த ஆய்வுக்காக, நாடு முழுவதிலும் இருந்து, 15 நிறுவன தயாரிப்புகள் சேகரிக்கப்பட்டன.இவற்றை, ஷாங்காய் நகரில் உள்ள, கிழக்கு சீன பல்கலைக்கழக விஞ்ஞானிகள் ஆய்வு செய்ததில், பிளாஸ்டிக் நுண் துகள்கள் கலந்திருப்பது உறுதியானது. இந்த துகள்கள், 5 மி.மீ.,க்கும் குறைவான அளவில் இருந்தது. 1 கிலோ உப்பில், 550

முதல், 681 நுண் துகள்களும்; தாது உப்பு மற்றும் கிணற்று நீரில் இருந்து எடுக்கப்பட்ட உப்பில், 1 கிலோவுக்கு, 204 துகள்களும் இருந்தன. இந்த உப்புகளை மக்கள் பயன்படுத்தும் போது, பிளாஸ்டிக் துகள்கள் உடலில் செல்லும்.

இதற்கு காரணம் நாம் தான். நாம் அன்றாடம் பயன்படுத்தும் அழகு சாதனப் பொருட்கள், பேஸ் ஸ்கரப், ஷவர் ஜெல் மற்றும் டூத் பேஸ்டுகளில் பிளாஸ்டிக் துகள்கள் உள்ளன. இவை மட்டுமல்லாமல், பிளாஸ்டிக் பாட்டில்கள், கவர்கள் போன்ற பிளாஸ்டிக் பொருட்களை சரி வர அழிக்காததால், ஆண்டுதோறும், கடலில், 50 லட்சம் டன் பிளாஸ்டிக் பொருட்கள் செல்கின்றன.கடல் வாழ் உயிரினங்கள் இவற்றை உண்கின்றன. சமீப காலமாக, கடல் ஆமைகள், கடல் பறவைகள் மற்றும் திமிங்கலங்களின் வயிற்றிலும், பிளாஸ்டிக் காணப்படுகிறது. ஆழ்கடலில் உள்ள தாவரங்களிலும் பிளாஸ்டிக் ஊடுருவியுள்ளது. உலகின் பல நாடுகளின் கடற்கரை மணலிலும், பிளாஸ்டிக் துகள்கள் கலந்திருப்பதாக ஆய்வறிக்கைகள் வெளியாகியுள்ளன.

## கீழக்கரையில் விளையுது அமெரிக்கன் தட்டைப்பயறு



கீழக்கரை:கீழக்கரை அருகே ரெகுநாதபுரம் நயினாமரைக்கானைச் சேர்ந்த ஆனந்தன் என்பவரது தோட்டத்தில் குளிர் பிரதேசங்களில் வளரும் அமெரிக்கன் தட்டைப்பயறு விளைகிறது. அவர் அமெரிக்காவில் உள்ள தனது நண்பரிடம் இருந்து தட்டைப் பயறு விதையை வாங்கியுள்ளார். சோதனை முறையில் 10க்கும் மேல் செடிகளை

பயிரிட்டு உள்ளார். இது கொடி வகையை சேர்ந்தது. குளிர் சீதோஷ்ண நிலையில் வளரக் கூடியது. உள்நாட்டு ரகம் பயறு 25 செ.மீ., மட்டுமே வளரும். அமெரிக்கா தட்டைப்பயறு 60 செ.மீ., வரை வளர்ந்துள்ளது. இதில் 25 முதல் 30 வரை பயறுகள் உள்ளன. பயறுகள் திரட்சியாகவும், நிறமாகவும் இருக்கும்.விவசாயி ஆனந்தன் கூறுகையில், “அமெரிக்கன் தட்டை பயறுகளில் இனிப்பு, துவர்ப்பு இருப்பதால் சமைக்காமலே உண்ணலாம். இதில் அதிக புரதச் சத்து உள்ளது. 2 மாதங்களிலே விளைச்சலுக்கு வந்துவிட்டது. நல்ல விளைச்சல் உள்ளதால் விரைவில் பெரியளவில் சாகுபடி செய்ய திட்டமிட்டுள்ளேன்,” என்றார்.

## 'சிண்டிகேட்' வியாபாரிகளால் சிறுமலை விவசாயிகள் பாதிப்பு



திண்டுக்கல்: 'சிண்டிகேட்' அமைத்து செயல்படும் வியாபாரிகளால், சிறுமலை வாழை விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.சிறுமலையில்

விளையும் வாழைப்பழம் மணமும், மருத்துவ குணமும், இனிமையும் கொண்டது. கடினமான தோல் உள்ளதால், 20 நாட்களானாலும் கெட்டுப் போகாது. மத்திய அரசின் புவிசார் குறியீடும் பெறப்பட்டுள்ளது.இதை விவசாயிகளிடம் வாங்கும் வியாபாரிகள், வெளி மாவட்டங்கள், மாநிலங்களுக்கு அனுப்புகின்றனர்.

சிண்டிகேட் வியாபாரிகள்: சிறுமலையில் வாழை 2 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது. இது ஆண்டு முழுவதும் காய்க்கக் கூடியது. சிறுமலை விவசாயிகளிடம் ஒரு பழம் ரூ.2 முதல் ரூ.4 வரை தரத்திற்கு தகுந்த மாதிரி வாங்குகின்றனர். ஆனால் அவர்கள் வியாபாரிகள் ஒரு பழம் ரூ.10 முதல் ரூ.15 வரை விற்பனை செய்கின்றனர்.இதனால் இடைத்தரகர்களால் பாதிக்கப்படும் விவசாயிகள் வருமானத்தை இழக்கின்றனர். வியாபாரிகள் 'சிண்டிகேட்' அமைத்து செயல்படுவதால், விவசாயிகளுக்கு ஏமாற்றமே மிஞ்சுகிறது. இதனால் நஷ்டமடையும் விவசாயிகள் யாரிடம் முறையீடு செய்வது எனத்தெரியாமல் திணறுகின்றனர்.அரசு உதவவேண்டும்: விவசாயி முருகன் கூறியதாவது: சிறுமலை வாழைப்பழம் மலேசியா, இலங்கைக்கு அதிகம் ஏற்றுமதியாகிறது. இதற்கென்றே ஏராளமான வாடிக்கையாளர்கள் உள்ளனர். சிண்டி கேட் அமைத்து விலை பேசும் வியாபாரிகள், கூடுதல் விலை கொடுக்க முன்வரும் வியாபாரிகளை சங்கத்தில் சேர்ப்பதில்லை. இறுதியில் பாதிப்பது விவசாயிகள் தான். எனவே அரசே கொள்முதல் செய்தால் நல்லது, என்றார்.

## 3 நாட்களுக்கு கன மழை



சென்னை:'வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள காற்று அழுத்த தாழ்வு, குறைந்த காற்று அழுத்த தாழ்வு நிலையாக மாறுவதால், தமிழகம், புதுச்சேரியில், நாளை முதல் மூன்று நாள்களுக்கு கன மழை பெய்யும்' என, வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.வானிலை மையம் நேற்று வெளியிட்ட அறிக்கை:வங்கக் கடலில் அந்தமான் கடல் பகுதியில் உருவாகி உள்ள காற்று அழுத்த தாழ்வு, குறைந்த காற்று அழுத்த தாழ்வு நிலையாக மாறி வருகிறது. இதனால் அந்தமான் கடல் பகுதியில் மழை பெய்ய துவங்கி விட்டது.தமிழகம் நோக்கி: இந்த காற்று அழுத்த தாழ்வு தமிழகம் மற்றும் புதுச்சேரி கடலோர பகுதியை நோக்கி நகர்ந்து வருகிறது. இதனால் நாளை முதல் மூன்று நாட்களுக்கு, சென்னை உள்ளிட்ட வட மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் கன மழை பெய்யும்.தற்போதுள்ள வானிலை நிலவரப்படி அந்தமான் அருகே உருவாகியுள்ள காற்று அழுத்த தாழ்வு, வட சென்னை மற்றும் ஆந்திர மாநிலம் இடையே டிச., 1ல் கரையை கடக்கலாம் என, கணிக்கப்படுகிறது. எனவே அதுவரை கன மழைக்கு வாய்ப்பு உள்ளது.அமெரிக்க வானிலை கணிப்பு மையமும், வங்கக் கடலில் ஏற்பட்டுள்ள காற்று அழுத்த தாழ்வு குறித்து கணித்துள்ளது. அந்த கணிப்புப்படி தமிழகத்தின் வட கடலோர பகுதியில் டிச., 5 வரை கன மழை பெய்யும்.இவ்வாறு அறிக்கையில்

கூறப்பட்டுள்ளது.நிம்மதி: இரு நாட்களாக சென்னை உள்ளிட்ட தமிழகத்தின் பல பகுதிகளில் மழை தணிந்து வெயில் பதிவானது. இது தேங்கியிருந்த மழை நீர் வடிய வாய்ப்பாக இருந்தது. நேற்று காலை 8:30 மணி நிலவரப்படி அதிகபட்சமாக பாபநாசம் - 10; திருசெந்துார் - 2; ராமேஸ்வரம், குன்னுார் - 1 செ.மீ., மழை பெய்துள்ளது.குளிர் : தமிழகத்தின் சமவெளி பகுதிகளில் குளிர் துவங்கி உள்ளது. தர்மபுரி, வேலுார் மாவட்டம், திருப்புத்துாரில், நேற்று அதிகபட்ச வெப்பநிலை 19 டிகிரி செல்சியஸ் என பதிவானது.

### வைகை அணை நீர் மட்டம் 67.29 அடி

தேனி:தேனி மாவட்டத்தில் மழை குறைந்ததால், வைகை அணைக்கு நீர் வரத்து குறைந்துள்ளது. தற்போது அணையின் நீர்மட்டம் 67.29 (மொத்த உயரம் 71) அடியாக உள்ளது. தேனி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழையால் அணைகள், கண்மாய்களில் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. வைகை அணை நீர் மட்டம் நேற்று முன்தினம் காலை 67.06 அடியை எட்டியது. அணைக்கு வினாடிக்கு 2,787 கன அடி நீர் வரத்தும், 60 கன அடி நீர் குடிநீருக்காக வெளியேற்றம் இருந்தது. அணை நீர் மட்டம் 67 அடியை எட்டியதும் முதல் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டது.நேற்று முன்தினம் மாவட்டத்தில் மழை பொழிவு குறைந்ததால், வைகை அணைக்கு நீர் வரும் பெரியாறு, கொட்டக்குடி, மூலவைகை ஆறுகளில் மதியம் 12 மணிக்கு மேல் நீர்வரத்து குறைந்து வினாடிக்கு 2 ஆயிரம் கன அடியாக குறைந்தது. இதனால் அணை நீர் மட்டம் மதியம் 67.29 அடியாக மெதுவாக உயர்ந்து வருகிறது. அணைநீர் மட்டம் 68.50 அடியை எட்டியதும் 2 வது கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடப்படும்.பெரியாறு அணை நீர் மட்டம் நேற்று முன்தினம் 137.50 அடியாகவும், நீர்வரத்து வினாடிக்கு 1,925 கனஅடியாகவும்,வெளியேற்றம் 511 கன அடியாகவும் இருந்தது.

மஞ்சளாறு, சோத்துப்பாறை, சண்முக நதி அணைகள் நிரம்பிவிட்டன. மாவட்டத்தில் நேற்று பதிவான மழை அளவு (மி.மீட்டர்)விபரம்: கூடலூார் 2, சோத்துப்பாறை 4, தேக்கடி 0.04, உத்தமபாளையம் 0.06. மற்ற இடங்களில் மழை இல்லை.

**பாபநாசம், சேர்வலாறு அணைகள் நீர்மட்டம் உயர்வு**



திருநெல்வேலி:நெல்லை மாவட்டத்தில் தொடர் மழையினால் பாபநாசம்,மணிமுத்தாறு அணைகளின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்துவருகிறது

திருநெல்வேலி, துாத்துக்குடி மாவட்டங்களில் குடிநீர் மற்றும் விவசாயத்தின் நீர் ஆதாரமாக திகழ்வது மணிமுத்தாறு மற்றும் பாபநாசம், சேர்வலாறு அணைகள்.

தற்போது பெய்துவரும் பலத்த மழையினால் மூன்று அணைகளின் நீர்மட்டமும் உயர்ந்துவருகிறது. குறிப்பாக 143 அடி உயரம் கொண்ட பாபநாசம் அணைக்கு வினாடிக்கு 8 ஆயிரம் கனஅடிவீதம் தண்ணீர் வருகிறது. இதனால் கடந்த இரண்டு தினங்களாக எட்டு அடிகள் வீதம் தண்ணீர் மட்டம் உயர்கிறது. நேற்று காலையில் பாபநாசம் அணையின் நீர்மட்டம் 129 அடியாக உயர்ந்தது. 118 அடி உயரம் கொண்ட மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 88

அடியாக உயர்ந்தது. அணைக்கு சுமார் 3 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் வரத்து உள்ளது.

மணிமுத்தாறு அருவியில் தொடர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்கப்படவில்லை. பாபநாசம் அணைப்பகுதியில் உள்ள இன்னொரு அணை சேர்வலாறு. 156 அடி உயரம் கொண்ட இந்த அணையின் நீர்மட்டம் நேற்று காலை 150 அடியாக உயர்ந்தது. அணைக்கு 3 ஆயிரம் கனஅடி தண்ணீர் வரத்து இருந்தது. திடீரென நீர்வரத்து அதிகரித்தால் அணையை திறந்து தாமிரபரணியில் 3 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படும் என, கலெக்டர் கருணாகரன் அறிவித்திருந்தார்.

ஆனால் மழை குறைந்ததால் தண்ணீர் வரத்து குறைந்தது. இதனால் சேர்வலாறு திறக்கப்படவில்லை.இந்த மூன்று அணைகளிலும் கணிசமான அளவு நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் ஒரு ஆண்டுக்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படாது என, விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

**மழை வெள்ளத்தை பாதிப்புகளை ஆய்வு செய்ய தமிழகம் வந்தது மத்திய குழு**

சென்னை: தமிழகத்தில் பெய்த கனமழை காரணமாக பலத்த சேதம் ஏற்பட்டது. இதில், சென்னை, கடலூர், உள்ளிட்ட பல மாவட்டங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டன. இந்நிலையில், மழை மற்றும் வெள்ள சேதங்களை பார்வையிடும் மத்திய குழு நள்ளிரவு சென்னை வந்தடைந்தது. மத்திய உள்துறை இணைச்செயலர் டி.வி.எஸ்.என் பிரசாத் தலைமையில் 9 பேர் கொண்ட குழுவினர் தமிழகம் வந்தனர். இந்த குழுவினர் அளிக்கும் அறிக்கை அடிப்படையில் மத்திய அரசு நிதியுதவி செய்யும்.

**காஞ்சிபுரத்தில் மீண்டும் மழை**

காஞ்சிபுரம் : காஞ்சிபுரம், செங்கல்பட்டு, திருக்கழுக்குன்றம், மாமல்லபுரம், ஊரப்பாக்கம், கல்பாக்கம் உள்ளிட்ட பகுதிகளில் தற்போது மழை பெய்து வருகிறது.

### மேட்டூர் அணையின் நீர்மட்டம் 90 அடி

மேட்டூர் : மேட்டூர் அணையின் நீர்மட்டம் 90.32 அடியாகவும், நீர் இருப்பு 53.01 டி.எம்.சி.,யாகவும் உள்ளது. மேட்டூர் அணையின் நீர்வரத்து, 7,915 கனஅடியிலிருந்து 6,925 கனஅடியாக குறைந்தது. மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 500 கனஅடி நீரும், அணையிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 500 கனஅடி நீரும் திறக்கப்படுகிறது.

### அமராவதி புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு...தண்ணீர் திறங்க! கலெக்டரிடம் விவசாயிகள் முறையீடு



திருப்பூர் : "திருப்பூர் மாவட்டத்தில், மடத்துக்குளம், உடுமலை, தாராபுரம் ஆகிய தாலுகாக்களில், 25 ஆயிரம் ஏக்கரில், நெல் நடவு

துவங்கியுள்ளதால், அமராவதி புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு விரைந்து தண்ணீர் திறக்க வேண்டும்' என, விவசாயிகள் வலியுறுத்தினர்.

மாவட்ட அளவில் விவசாயிகள் குறைகேட்பு கூட்டம், திருப்பூர் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது; கலெக்டர் கோவிந்தராஜ் தலைமை வகித்தார். நேர்முக உதவியாளர் (வேளாண்மை) அல்தாப் வரவேற்றார். வேளாண் இணை இயக்குனர் (பொ) மகேந்திரன், கூட்டுறவு இணை பதிவாளர் குமார் முன்னிலை வகித்தனர். கோரிக்கைகளை வலியுறுத்தி, விவசாயிகள் பேசினர்.

அதன் விவரம்:உழவர் உழைப்பாளர் கட்சி மாவட்ட செயலாளர் ஈஸ்வரமூர்த்தி: அமராவதி பழைய பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டு, சாகுபடி நடந்து வருகிறது. புதிய ஆயக்கட்டு பகுதியில், 25 ஆயிரம் ஏக்கர் பரப்பில், நெல் நடவு துவங்கியுள்ளது. மடத்துக்குளம், உடுமலை, தாராபுரம் தாலுகாக்களில், நெல் நடவு துவங்கியுள்ளதால், புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு விரைந்து தண்ணீர் திறக்க வேண்டும். சின்ன புத்தூர், சின்னக்கரை ஓடையில் வீணாகும் தண்ணீரை தேக்க, தடுப்பணை அமைக்க வேண்டும். மக்காச்சோள பயிரை அழித்து வரும் காட்டுப்பன்றிகளை விரட்டியடிக்க வேண்டும்.

அமராவதி நதிநீர் பாசன பாதுகாப்பு இயக்க செயலாளர் லிங்கம் சின்னசாமி: கரும்பு விவசாயிகள் பயனடையும் வகையில், சர்வதேச தரத்துடன் சர்க்கரை தொழிலை விரிவுபடுத்த வேண்டும். அமராவதி அணையை தூர்வாரி, அதிக அளவு தண்ணீரை தேக்க வேண்டும். உப்பாறு அணைக்கு தண்ணீர் இல்லாததால், பி.ஏ.பி., தண்ணீர் வழங்க வேண்டும். திருந்திய நெல் சாகுபடிக்கான மானியத்தை சரியாக வழங்க வேண்டும்.

உடுமலை விவசாயி கனகராஜ்: ராவணாபுரம், தேவனூர்புதூர், கரட்டூர் ஆகிய கிராமங்களில், 5,000 ஏக்கர் நிலம், பி.ஏ.பி., பாசன வசதியின்றி, மானாவாரி நிலமாக உள்ளது. காண்டூர் கால்வாய் குறுக்கே வரும் மழைநீர், கால்வாயில் செல்வதை தடுக்கும் வகையில், "சூப்பர் பாஸேஜ்' என்ற பெயரில் பாலம் அமைக்க திட்டமிடப்பட்டது. பணிகள் முழு மையாகாமல் இருப்பதால், மழை நீர் அரித்து, காண்டூர் கால்வாய் பாதிக்கும். எனவே, பணியை விரைந்து முடிக்க வேண்டும்.

காங்கயம் விவசாயி நல்லசாமி: விவசாய பூமியில், உயரழுத்த மின்பாதை குறுக்கே செல்கிறது. சிறு, குறு விளைநிலங்களுக்கு இடையே செல்வதால், ஒட்டுமொத்த வாழ்வும் கேள்விக்குறியாகிறது. சட்டத்துக்கு புறம்பாக அமைத்த, மின்பாதையை ஆய்வு செய்ய வேண்டும்.

பி.ஏ.பி., முன்னாள் பகிர்மான குழு தலைவர் கோபால்: அழிந்துவரும் காங்கயம் இன காளைகளை காப்பாற்றும் வகையில், இனவிருத்தி செய்ய வேண்டும்; கால்நடைத்துறை மூலம், உறைவிந்து வழங்க வேண்டும். இவ்வாறு, விவசாயிகள் பேசினர்.

கலெக்டர் பதிலளிக்கையில், ""திருப்பூர் மாவட்டத்தில், ஒரு லட்சத்து, 360 எக்டர் பரப்பில் பயிர் சாகுபடி நடக்கும். தற்போது, 73 ஆயித்து, 786 எக்டர் அளவுக்கு சாகுபடி செய்யப்பட்டுள்ளன. தேவையான அளவு உரம், விதை இருப்பு வைக்கப்பட்டுள்ளன. மடத்துக்குளம், கணியூர், கல்லாபுரம் உள்ளிட்ட பகுதிகளில், நெல் அறுவடை நடப்பதால், கொள்முதல் மையங்கள் திறக்கப்படும். அமராவதி புதிய ஆயக்கட்டுக்கு தண்ணீர் திறக்க அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. காங்கயம் காளை உறைவிந்து அனைத்து இடங்களிலும் வழங்கப்படுகிறது; கால்நடை மருந்தகங்களில் அறிவிப்பு வெளியிடப்படும்,'' என்றார்.

**"அச்சப்பட தேவையில்லை'**

விவசாயிகள் குறைகேட்பு கூட்டத்தில், கலெக்டர் பேசுகையில், ""சின்னாண்டிபாளையம் பகுதியில், சிறுத்தை நடமாட்டம் இருந்ததாக தகவல் பரவியதும், வனத்துறை, போலீசார் தீவிர தேடுதல் வேட்டை நடத்தினர்.""வனத்துறை மூலம், நான்கு இடங்களில் கண்காணிப்பு கேமரா வைக்கப்பட்டது; இதுவரை எவ்வித விலங்கும் பதிவாகவில்லை. புலி, சிறுத்தை போன்றவை பாய்ந்து ஓடும்போது, கால்களில் உள்ள நகம் வெளியே வந்து மண் ணில் பதிவாகாது. ஆனால், சம்பந்தப்பட்ட பகுதிகளில், கால் நகம் பதிவாகியுள்ளது. புலி, சிறுத்தை போன்ற விலங்குகள், விலங்குகளை அழிக்கும்போது மட்டுமே நகங்களை பயன்படுத்துமென வனத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சின்னாண்டிபாளையத்தில், சிறுத்தை, புலி நடமாட்டம் இல்லை என, உறுதி செய்துள்ளதால், பொதுமக்கள் அச்சப்பட தேவையில்லை," என்றார்

## பாபநாசம், சேர்வலாறு அணைகள் நீர்மட்டம் உயர்வு



திருநெல்வேலி:நெல்லை மாவட்டத்தில் தொடர் மழையினால் பாபநாசம்,மணிமுத்தாறு அணைகளின் நீர்மட்டம் கிடுகிடுவென உயர்ந்துவருகிறது

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் குடிநீர் மற்றும் விவசாயத்தின் நீர் ஆதாரமாக திகழ்வது மணிமுத்தாறு மற்றும் பாபநாசம், சேர்வலாறு அணைகள்.

தற்போது பெய்துவரும் பலத்த மழையினால் மூன்று அணைகளின் நீர்மட்டமும் உயர்ந்துவருகிறது. குறிப்பாக 143 அடி உயரம் கொண்ட பாபநாசம் அணைக்கு வினாடிக்கு 8 ஆயிரம் கனஅடிவீதம் தண்ணீர் வருகிறது. இதனால் கடந்த இரண்டு தினங்களாக எட்டு அடிகள் வீதம் தண்ணீர் மட்டம் உயர்கிறது. நேற்று காலையில் பாபநாசம் அணையின் நீர்மட்டம் 129 அடியாக உயர்ந்தது.

118 அடி உயரம் கொண்ட மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 88 அடியாக உயர்ந்தது. அணைக்கு சுமார் 3 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் வரத்து உள்ளது.

மணிமுத்தாறு அருவியில் தொடர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதால் சுற்றுலா பயணிகள் குளிக்க அனுமதிக்கப்படவில்லை. பாபநாசம் அணைப்பகுதியில் உள்ள இன்னொரு அணை சேர்வலாறு. 156 அடி உயரம் கொண்ட இந்த அணையின் நீர்மட்டம் நேற்று காலை 150 அடியாக உயர்ந்தது. அணைக்கு 3 ஆயிரம் கனஅடி தண்ணீர் வரத்து இருந்தது. திடீரென நீர்வரத்து அதிகரித்தால் அணையை திறந்து தாமிரபரணியில் 3 ஆயிரம் கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்படும் என, கலெக்டர் கருணாகரன் அறிவித்திருந்தார்.

ஆனால் மழை குறைந்ததால் தண்ணீர் வரத்து குறைந்தது. இதனால் சேர்வலாறு திறக்கப்படவில்லை.இந்த மூன்று அணைகளிலும் கணிசமான அளவு நீர்மட்டம் உயர்ந்துள்ளதால் ஒரு ஆண்டுக்கு தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படாது என, விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## 10 டி.எம்.சி., நீர் வெளியேற்றம்?

சென்னைக்கு குடிநீர் வழங்கும், நான்கு ஏரிகளில் இருந்து, இதுவரை, 10 டி.எம்.சி., அதாவது, 12 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட, 230

லட்சம் லாரி தண்ணீர் வெளியேற்றப்பட்டுள்ளது; இதன் அளவு, 27,600 கோடி லிட்டர்; 10 மாதத் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியது. திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள புழல், சோழவரம், பூண்டி, செம்பரம்பாக்கம் ஏரிகள் மூலம், சென்னையின் குடிநீர் தேவை பூர்த்தியாகிறது. நான்கு ஏரிகளின் மொத்த கொள்ளளவு, 30,360 கோடி லிட்டர்; சென்னை நகரின், ஒரு மாத குடிநீர் தேவை, 1 டி.எம்.சி., அதாவது, 2,760 கோடி லிட்டர். வட கிழக்கு பருவ மழையால், நான்கு ஏரிகளும் முழு கொள்ளளவை எட்டும் நிலையை அடைந்துள்ளன. தற்போது, நான்கு ஏரிகளிலும், 9.40 டி.எம்.சி., நீர் இருப்பு உள்ளது. ஏரிகளின் பாதுகாப்பு கருதி, உபரி நீரை வெளியேற்றும் பணியை, பொதுப் பணித் துறையின் அங்கமான, நீர்வளத்துறை மேற்கொண்டுள்ளது. சென்னை மண்டல நீர்வளத் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:கடந்த, 17 முதல், ஏரிகளில் இருந்து உபரி நீர் வெளியேற்றப்படுகிறது. எவ்வளவு நீர் வெளியேறியது என்ற கணக்கெடுப்பை, சென்னை குடிநீர் வாரியம் மேற்கொள்கிறது. சராசரியாக, ஒரே அளவில் உபரி நீரை வெளியேற்றி இருந்தால், அளவீடு செய்வது எளிது. ஆனால், அதிகபட்சமாக வினாடிக்கு, 3.4 லட்சம் லிட்டர், குறைந்தபட்சம், 14 ஆயிரம் லிட்டர் என, நேரத்திற்கு தகுந்தபடி, உபரி நீர் வெளியேற்றும் அளவு மாறுபடுகிறது. எனவே, பருவ மழை முடிந்த பிறகு தான், மொத்தமாக எவ்வளவு தண்ணீர் வெளியேறியது என்ற கணக்கு தெரிய வரும். இதுவரை, 27,600 கோடி லிட்டருக்குக் குறையாமல் உபரி நீர் வெளியேறி இருக்க வாய்ப்புள்ளது.இவ்வாறு அவர் கூறினார். 1 டி.எம்.சி.எவ்வளவு? * 1 டி.எம்.சி., என்பது, 100 கோடி கனஅடி. லிட்டர் அடிப்படையில், 1 டி.எம்.சி., என்பது, 2,800 கோடி லிட்டர். ஒரு லாரியில், 12 ஆயிரம் லிட்டர் தண்ணீர் கொண்டு செல்லலாம்.

அதன்படி, 23 லட்சம் லாரிகள் மூலம், 2,800 கோடி லிட்டர் தண்ணீர் வினியோகிக்க முடியும். l 1 கனஅடி என்பது, 28 லிட்டர்.

## இயற்கை பாதுகாப்பு நாள்

புதுச்சேரி,: புதுச்சேரி அறிவியல் தொழில் நுட்பத் துறை மற்றும் என்.எஸ்.எஸ்., சார்பில் அன்னை சிவகாமி அரசு பெண்கள் மேல் நிலைப்பள்ளியில் இயற்கை பாதுகாப்பு நாள் கடை பிடிக்கப்பட்டது.

திட்ட அலுவலர் பக்கிரிசாமி வரவேற்றார். திட்ட ஒருங்கிணைப்பாளர் பூபதி நோக்க உரையாற்றினார். சுற்றுச் சூழல் பொறியாளர் ரமேஷ் இயற்கை பாதுகாப்பு குறித்து பேசினார். ஆசிரியை தெய்வசுந்தரி நன்றி கூறினார்.

## நிலவேம்பு கஷாயம் வழங்கல்

புதுச்சேரி: டெங்கு காய்ச்சல் வராமல் தடுக்க தவளக்குப்பம் ஆரம்ப சுகாதார மையத்தில் நிலவேம்பு கஷாயம் பொது மக்களுக்கு வழங்கப்பட்டது.

புதுச்சேரியில் பெய்து வரும் மழையால் பல்வேறு இடங்களில் மழைநீர் தேங்கி தொற்று நோய் மற்றும் டெங்கு காய்ச்சல் பரவும் அபாயம் உள்ளது. அதனை தடுக்க ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் அரசு மருத்துவமனைகளில் நிலவேம்பு கஷாயம் வழங்கப்பட்டு வருகிறது.

தவளக்குப்பம் ஆரம்ப சுகாதார மையத்தில் நடந்த நிகழ்ச்சியில் தலைமை சித்த மருத்துவ அதிகாரி ஸ்ரீதரன் பொதுமக்களுக்கு நிலவேம்பு கஷாயத்தை வழங்கினார். டாக்டர்கள் குமரவேல், ஷய்ஜா, ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டனர். இன்றும் நாளையும் நிலவேம்பு கஷாயம் வழங்கப்படுகிறது.

## மதுராந்தகம் ஏரியிலிருந்து வினாடிக்கு 17,600 கனஅடி நீர் வெளியேற்றம்

செங்கல்பட்டு:மதுராந்தகம் ஏரியிலிருந்து, வினாடிக்கு, 17,600 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது.காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள ஏரிகளில், குறிப்பிடத்தக்கது மதுராந்தகம் ஏரி. இதன் மொத்தக் கொள்ளளவு, 609 மில்லியன் கனஅடி; கரையின் நீளம், 12,900 அடி; ஐந்து மதகுகள் உள்ளன.

ஏரியின் மொத்த உயரம் 24.3 அடி. தற்போது, 23.9 அடி தண்ணீர் உள்ளது. திருவண்ணாமலை மாவட்டம், கிளியாற்று, நெல்வாய் மடுவிலிருந்து ஏரிக்கு நீர்வரத்து கூடியுள்ளது.இதனால், 23ம் தேதி, ஏரியிலிருந்து, 18 ஆயிரம் கனஅடி நீரும்; 24ம் தேதி ஏரியிலிருந்து, 20,400 கனஅடி நீரும் வெளியேற்றப்பட்டது.

நேற்று, கிளியாறு, நெல்வாய் மடுவிலிருந்து வினாடிக்கு, 17,600 கன அடி தண்ணீர் வந்ததால், அதே அளவு நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

## நீரில் மூழ்கிய நெற்கதிர்கள் அறுவடை பணிகள் துவக்கம்

வாலாஜாபாத்:வாலாஜாபாத் ஒன்றியத்தில், நீரில் மூழ்கிய நெற்கதிர்களை, அறுவடை செய்யும் பணியை, விவசாயிகள் நேற்று துவக்கி உள்ளனர்.

காஞ்சிபுரம் மாவட்டம் முழுவதும், 11 ஆயிரம் ஏக்கர் நிலத்தில், நெற்கதிர்கள் தண்ணீரில் மூழ்கி இருந்தன. வேளாண் துறை நிர்வாகத்தின் அறிவுரையின்படி, விவசாயிகள் வயலில் தேங்கி இருந்த தண்ணீரை, மழை நின்ற பிறகு நேற்று முன்தினம் வெளியேற்றினர்.

இருப்பினும், நேற்று, கோவிந்தவாடி அகரம், பரந்துார், மணியாட்சி உள்ளிட்ட பல்வேறு கிராமங்களில், விவசாயிகள் கூலி ஆட்கள் மூலமாக, நெல் அறுவடை பணியை துவக்கி உள்ளனர்.

இதுகுறித்து, கோவிந்தவாடி அகரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி வி.எம்.மணி கூறுகையில், "நீரில் மூழ்கி முளைத்துப் போன நெற்பயிரை, கூலி ஆட்கள் மூலமாக, அறுவடை செய்து வருகிறோம். தண்ணீரில் மூழ்கிய நெற்பயிராக இருப்பதால், 5,000 ரூபாய் கூலி கேட்கின்றனர். இருப்பினும், வேறு வழியின்றி, அறுவடை செய்து வயலில் இருந்து நெற்பயிரை அகற்றி வருகிறோம்," என்றார்.

## நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவள்ளூர்:திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், ஆட்சியர் வீரராகவ ராவ் தலைமையில், நாளை (27ம் தேதி) விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் நடக்கிறது. இதில், வேளாண்மை துறை, தோட்டக்கலை துறை, வருவாய் துறை, மின்வாரியம், பொதுப்பணி துறை, தோட்டக்கலை மீன்வள துறை, கால்நடை பராமரிப்பு துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிக துறை மற்றும் இதர வேளாண் சார்ந்த துறை அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகள் குறைகளுக்கு தீர்வு காண உள்ளனர். இதில், மாவட்ட விவசாயிகள் கலந்து கொள்ள வேண்டும் என, ஆட்சியர் கேட்டுக் கொண்டு உள்ளார்.

## 75 இடங்களில் நிலவேம்பு கஷாயம்

திருவள்ளூர்:திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள, 75 அரசு மருத்துவமனை மற்றும் சுகாதார மையங்களில், நிலவேம்பு கஷாயம் வழங்கும் பணி துவங்கியது.

திருவள்ளூர் மாவட்டத்தில், மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை மற்றும் ரயில் நிலையத்தில், நிலவேம்பு கஷாயம் வழங்கும் திட்டம், நேற்று துவங்கியது. ஆட்சியர் வீரராகவ ராவ் முகாமை துவக்கி வைத்து, பொதுமக்களுக்கு கஷாயத்தை வழங்கினார்.

நிகழ்ச்சியில், அரசு மருத்துவமனை இணை இயக்குனர் மருத்துவர் மோகனன், மாவட்ட சுகாதார துணை இயக்குனர் மருத்துவர் பிரபாகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.திருவள்ளூர் மாவட்டத்தில், உள்ள, 13 அரசு மருத்துவமனைகள், 62 ஆரம்ப சுகாதார நிலையங்களில் நிலவேம்பு கஷாயம் மற்றும் வயிற்று போக்கை கட்டுப்படுத்தும் ஓ.ஆர்.எஸ்., கரைசல் ஆகியவை தொடர்ந்து ஐந்து நாட்கள் வழங்கப்பட உள்ளன.

## பிச்சாட்டூர் ஏரி உபரி நீர் வெளியேற்றம் நிறுத்தம்

ஊத்துக்கோட்டை:பிச்சாட்டூர் ஏரிக்கு நீர்வரத்து குறைந்ததால், உபரி நீர் வெளியேற்றம் நிறுத்தப்பட்டதால், ஆரணி ஆற்றில் வெள்ளப் பெருக்கு குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக - ஆந்திர மாநிலங்களில் பெய்து வந்த கன மழையால், பிச்சாட்டூர் ஏரி நிறைந்து, உபரி நீர் திறந்து விடப்பட்டது.

இதனால், ஆரணி ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, ஊத்துக்கோட்டையில் இருந்து, திருவள்ளூர் செல்லும் தரைப்பாலம் மூழ்கியது. இதனால், 11 நாட்களாக போக்குவரத்து நிறுத்தப்பட்டது. இதன் காரணமாக, ஆற்றின் மறு கரையில் உள்ள அனந்தேரி, பேரிட்டிவாக்கம், மாம்பாக்கம், போந்தவாக்கம், கச்சூர், சீத்தஞ்சேரி மற்றும் 20க்கும் மேற்பட்ட கிராம மக்கள், தங்களின் அத்தியாவசிய தேவைக்கு அவதிப்படுகின்றனர்.

நேற்று காலை 8:00 மணிக்கு, நீர்வரத்து நின்றதால், பிச்சாட்டூர் ஏரியின் மதகுகள் மூடப்பட்டன. இதனால், ஆரணி ஆற்றில் வெள்ளப் பெருக்கு குறையும் என, எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது ஆரணி ஆற்றின் தரைப்பாலத்தில், தரையை ஒட்டிச் செல்லும் நீர், நாளை பாலத்தின் கீழே கணு வழியாக செல்லும் என, எதிர்பார்க்கப்படுகிறது.

அப்போது தான், இவ்வழியே போக்குவரத்து துவக்கப்படும். இந்த பகுதியில் போக்குவரத்து துவக்கினால் மட்டுமே, ஊத்துக்கோட்டையில் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளிகள் இயங்கும் நிலை உள்ளது.

### பூண்டியிலிருந்து வினாடிக்கு 15,050 கன அடி நீர் வெளியேற்றம்

திருவள்ளூர்:பூண்டி நீர்த்தேக்கத்தில் இருந்து, வினாடிக்கு, 15,050 கன அடி நீர் கொற்றலை ஆற்றில் வெளியேற்றப்படுகிறது.

ஆந்திர மாநிலம் சித்துார் மாவட்டம், கிருஷ்ணாபுரம் அணைக்கு, தொடர்ந்து நீர்வரத்து உள்ளதால், நீர்வரத்திற்கு ஏற்ப, வினாடிக்கு, 500 முதல், 1,500 கன அடி வரை, தண்ணீர் திறக்கப்படுகிறது. இந்த தண்ணீர், லவகுசா ஆறு வழியாக, திருத்தணியைக் கடந்து, கொற்றலை ஆற்றில் கலந்து, பூண்டி நீர்த்தேக்கத்திற்கு வந்து கொண்டிருக்கிறது.

நேற்று மாலை, நிலவரப்படி பூண்டி நீர்த்தேக்கத்திற்கு, வினாடிக்கு, 12,735 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. நீர்த்தேக்கத்தில், 2,690 மில்லியன் கன அடி தண்ணீர் உள்ளது. தொடர்ந்து நீர்வரத்து இருப்பதால், வினாடிக்கு, 15,050 கன அடி உபரி நீர், ஷட்டர்கள் வழியாக, கொற்றலை ஆற்றில் வெளியேற்றப்படுகிறது. இதனால், கொற்றலை ஆற்றின் கரையோர பகுதிகளில் வசிப்பவர்கள், பாதுகாப்பான இடத்திற்கு செல்லுமாறு, மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தி உள்ளது.

### உளுந்துார்பேட்டை சந்தையில் ஆடுகள் வரத்து சரிந்தது

உளுந்துார்பேட்டை: உளுந்துார்பேட்டை வார சந்தைக்கு, ஆடுகளின் வரத்து குறைந்தது.

விழுப்புரம் மாவட்டம், உளுந்துார்பேட்டை நடக் கும் வாரச்சந்தையில், கள்ளக்குறிச்சி, ஆத்துார், விருத்தாசலம், பண்ருட்டி, விழுப்புரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து ஆடுகள் விற்பனைக்கு கொண்டு வரப்படும்.

தற்போது பெய்துவரும் மழையால், கால்நடைகளை கட்டுவதற்கு இடமின்றி, உரிமையாளர்கள் தவித்து வருகின்றனர். மழையால் கால்நடைகளுக்கு நோய் ஏற்படும் அச்சமும் உள்ளது.

இந்நிலையில், நேற்று சந்தைக்கு கொண்டுவரப் பட்ட ஆடுகளுக்கு போதிய விலை கிடைக்காமல் குறைந்த பட்சம் ரூ. ஆயிரம் முதல் ரூ.8 ஆயிரம் என குறைந்த விலைக்கு விற்பனையானது.

இதனால், பலர் தங்கள் ஆடுகளை விற்காமல் திரும்பிச் சென்றனர். வழக்கத்தைவிட, ஆடுகள் வரத்தும் குறைவாக இருந்தது.

### சாத்தனுார் அணையிலிருந்து 2,989 கன அடி நீர் திறப்பு

திருவண்ணாமலை: சாத்தனுார் அணை முழு கொள்ளளவை எட்டவுள்ள நிலையில், அணையில் இருந்து வினாடிக்கு, 2,989 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில், கடந்த, 15 நாட்களுக்கும் மேலாக கன மழை பெய்து வருகிறது. இதனால், தென் பெண்ணை ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. சாத்தனுார் அணை மொத்த கொள்ளளவான, 119 அடியில், 117அடியை நேற்று முன்தினம் எட்டியது. அணைக்கு வினாடிக்கு, 6,875 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்துள்ளது. அணையின் பாதுகாப்பு கருதி, அணையிலிருந்து வினாடிக்கு, 2,989 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. இதனால் திருவண்ணாமலை, விழுப்புரம், கடலுார் மாவட்டங்களுக்கு ஏற்கனவே வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. தென் பெண்ணையாற்று கரையோரம் வசிக்கும் பொதுமக்கள், பாதுகாப்பான இடத்திற்கு செல்ல

அறிவுறுத்தப்பட்டுள்ளனர். ஆற்றின் அருகே யாரும் செல்ல வேண்டாம். ஆற்றை கடக்க வேண்டாம் என, கலெக்டர் ஞானசேகரன் எச்சரித்துள்ளார்.

## விவசாயி பெற்ற வங்கி கடன் தள்ளுபடி நுகர்வோர் நீதிமன்றம் அதிரடி உத்தரவு

விழுப்புரம்,: விவசாயிக்கு கடன் கொடுப்பதில் மோசடி செய்த இந்தியன் வங்கிக்கு அபராதம் விதித்து விழுப்புரம் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

விழுப்புரம் மாவட்டம், வெட்டுக்காடு கிராமத்தை சேர்ந்தவர் சதாசிவம்(70); விவசாயி. இவர், ஆட்டு பண்ணை வைப்பதற்காக, 2006ம் ஆண்டு ராதாபுரம் இந்தியன் வங்கியில் கடன் கேட்டு விண்ணப்பித்தார்.

3 லட்சம் ரூபாய் கடன் தருவதாக கூறிய வங்கி அதிகாரிகள், ஒரு லட்சம் ரூபாய் மட்டும் மூன்று தவணையில் வழங்கினர். மீதி பணத்தைக் கேட்டபோது, 'பண்ணை வைக்கும் அளவுக்கு உங்களுக்கு வசதியில்லை. அதற்கான ஏற்பாடுகளை செய்துவிட்டு, மீதி பணத்தை வாங்கிக் கொள்ளுங்கள்' என வங்கி அதிகாரிகள் கூறியுள்ளனர்.

வங்கி அதிகாரிகள் கூறிய ஏற்பாடுகளை செய்துவிட்டு, 2007ம் ஆண்டு மீதி பணத்தை கேட்டபோது, தர மறுத்ததுடன், கடன் தொகை ஒரு லட்சத்தை திருப்பி செலுத்தும்படி வங்கி அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதனால் மன உளைச்சலுக்கு ஆளான அவர், கடன் வழங்குவதாக கூறி மோசடி செய்துவிட்டதாக, இந்தியன் வங்கி ராதாபுரம் கிளை மீது, விழுப்புரம் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கில் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கப் பட்டது. நீதிபதி கலியமூர்த்தி, சதாசிவம் வங்கியில் பெற்ற ஒரு லட்சம் ரூபாய் கடனை

தள்ளுபடி செய்து, மன உளைச்சல், வீண் அலைச்சலுக்கு 10 ஆயிரம் ரூபாய், செலவுத் தொகை 2,000 ரூபாய் என மொத்தம் 12 ஆயிரம் ரூபாயை, இந்தியன் வங்கி ராதாபுரம் கிளை அதிகாரிகள் இரு மாதங்களுக்குள் சதாசிவத்திற்கு வழங்க வேண்டும் என உத்தரவிட்டார்.

### நிலவேம்பு கஷாயம் வழங்கல்

விக்கிரவாண்டி: விக்கிரவாண்டி வட்டார அரசு மருத்துவ மனையில் நோயாளிகளுக்கு நிலவேம்பு கஷாயம் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது.

விக்கிரவாண்டி அரசுமருத்துவமனையில் நடந்த நிகழ்ச்சிக்கு லட்சுமணன் எம்.பி., தலைமை தாங்கி, பொதுமக்களுக்கு நிலவேம்பு கஷாயத்தை வழங்கினார். சுகாதார துணை இயக்குனர் டாக்டர் மீரா, வட்டார மருத்துவ அலுவலர் வினோத், விழுப்புரம் எம்.பி., ராஜேந்திரன், மாவட்ட சேர்மன் அலமேலு வேலு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

அ.தி.மு.க., ஒன்றிய செயலாளர் சிந்தாமணி வேலு, தொகுதி செயலாளர் கலியமூர்த்தி, நகர செயலாளர் பூர்ணராவ், நிர்வாகிகள் குமாரசாமி, ஆனந்த், சரவணக்குமார், பன்னீர், மலர்விழி, செங்கேணி அய்யனாரப்பன், கண்ணன், அற்புத வேலு, மாவட்ட கவுன்சிலர் செங்குட்டுவன், பிரகாஷ், வழக்கறிஞர் முருகன், பலராமன், ரவிக்குமார், அய்யனாரப்பன், வாசு, சுப்பிரமணி ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுகாதார மேற்பார்வையாளர் சிஸ்ரோ நடேசன், ஆய்வாளர் உதயகுமார், பாபு, வி.சாலை இ.எஸ்., செவிலியர் கல்லூரி மாணவிகள் ஆகியோர் நோயாளிகளுக்கு நிலவேம்பு கஷாயத்தினை வழங்கும் பணியில் ஈடுபட்டனர் .

### அவலூர்பேட்டை பகுதியில் பல ஏரிகள் நிரம்பவில்லை

அவலூர்பேட்டை: அவலூர்பேட்டை பகுதியில் மழையின் அளவு குறைந்ததால், பல ஏரிகளின் தண்ணீர் நிரம்பவில்லை.

மேல்மலையனூர் ஒன்றியத்தில் 30 ஏரிகள் சில தினங்களுக்கு முன்னர் பொழிந்த கனமழையின் போது நிரம்பி வழிந்தது. இதில் மேல்மலையனூர், அவலூர்பேட்டை பகுதிகளில் போதிய அளவு மழை பொழியவில்லை. இதனால் ஏரிகளில் வெட்டு, பள்ளங்களில் மட்டும் நீர் நிரம்பியுள்ளது.

இந்த தண்ணீரில் அதிக பட்சமாக ஒரு பயிரை வைக்கலாம் என விவசாயிகள் கூறுகின்றனர். இப்பகுதியில் அவலூர்பேட்டை, மேல்மலையனூர், குந்தலம்பட்டு, எதப்பட்டு,ரவணாம்பட்டு, மேல்செவலாம்பாடி, கோட்டப்பூண்டி, கப்ளாம்பாடி, நொச்சலூர், தொரப்பாடி, மேல்மாம்பட்டு உள்ளிட்ட ஏரிகள் நிரம்பவில்லை.

ஒரு சில ஏரிகளில் தண்ணீர் நிரம்பாததால், வழக்கம் போல் இளைஞர்கள் கிரிக்கெட் விளையாடி வருகின்றனர். குறைந்த மழை ஒரு புறமிருந்தாலும் ஏரிகளில் ஆக்கிரமிப்புகளை அகற்றப்படவில்லை என்றும், மதகுகளை பராமரிக்க வில்லை என பல கிராமங்களிலும் விவசாயிகள் புகார் கூறுகின்றனர்.

மேலும், வெள்ளம் கரைபுரண்டு ஓடுவதை கிராம மக்கள் சென்று பார்வையிடுவதற்கும் சில இடங்களில் சரியான வழியில்லை. முட்புதர்கள் மண்டிக்கிடக்கிறது. இது போன்ற ஏரிப்பகுதியில் திடீரென கரையோ அல்லது மதகுகளோ பலமிழந்து உடைந்தால், சீரமைப்பதில் காலதாமதமும், சிக்கலும் ஏற்படுகிறது.

கிராமங்களில் உள்ள பொதுப்பணி துறைக்கு சொந்தமான ஏரிகளை அதிகாரிகள் முறையாக கண்காணித்து பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

## மாவட்ட விவசாயிகள் குறைதீர்ப்பு கூட்டம்

விழுப்புரம்: விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம், நாளை (27ம் தேதி) விழுப்புரத்தில் நடக்கிறது.

மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம், விழுப்புரம் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், நாளை காலை நடக்கிறது. கூட்டத்திற்கு கலெக்டர் லட்சுமி தலைமை தாங்கி, விவசாயிகளின் குறைகளை கேட்டறிகிறார்.

இக்கூட்டத்தில், விவசாய சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் கலந்து கொண்டு, தங்களது குறைகள் மற்றும் கோரிக்கைகளை மனுவாக அளித்து பயன் பெறலாம். இவ்வாறு கலெக்டர் அலுவலக செய்தி குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பருவ மழையில் முன்னெச்சரிக்கை மின்துறை பொறியாளர் ஆலோசனை**

விழுப்புரம்: பருவ மழையை யொட்டி பொதுமக்கள் மின் சார்ந்த பொருட்களிடம் இருந்து முன் எச்சரிக்கையாக செயல்பட வேண்டுமென மின்துறை அறிவித்துள்ளது.

விழுப்புரம் மின் பகிர்மான வட்டத்தில் உள்ள களப்பணியாளர்கள் இயற்கை இடர்பாடுகளின் போது துரிதமாக செயல்படும் வகையில் தளவாட பொருட்கள் மற்றும் வாகனங்கள் தயார் நிலையில் இருக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொதுமக்கள் தங்கள் பகுதியில் ஏற்படும் மின்தடை மற்றும் மின் பொருட்கள் சேதம் ஆகிய புகார்களை தங்கள் பகுதிக்கு உட்பட்ட பிரிவு அலுவலர் மற்றும் உதவி செயற்பொறியாளரிடம் தெரிவிக்கலாம்.

அறுந்து தரையில் விழுந்து கிடக்கும் மின் கம்பிகள், தாழ்வு மற்றும் தொய்வான மின் கம்பிகளை பொதுமக்கள் தொடக் கூடாது. மின்சார்ந்த

பொருட்களில் தனிச்சையாக செயல்படாமல் மின்வாரிய பிரிவு அலுவலருக்கு தெரியப்படுத்த வேண்டும்.

இடி அல்லது மின்னலின் போது டிவி, மிக்சி, கிரைண்டர், கணினி மற்றும் தொலைபேசியை பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும். திறந்த நிலையில் உள்ள ஜன்னல், கதவு ஆகியவற்றின் அருகே இருக்க கூடாது. ஈரம் படிந்த கைகளோடு சுவிட்ச், பிளக்குகளை இயக்குதல் கூடாது.

மின்கம்பம் மற்றும் அவற்றை தாங்கும் கம்பிகளில் கால்நடைகளை கட்ட கூடாது. மின்பகிர்வு பெட்டிகள் அருகே செல்ல கூடாது. அவசர நேரங்களில் மின் இணைப்பை விரைந்து துண்டிக்கும் வகையில் மின் கருவிகள் சுவிட்சுகள் இருப்பிடம் அமைய வேண்டும் .

பொதுமக்கள் முன் எச்சரிக்கையோடு செயல்பட்டு, மின் விபத்துகளை தவிர்க்க வேண்டும்.

இத்தகவலை, விழுப்புரம் மின் மேற்பார்வை பொறியாளர் ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார்.

## இயற்கை உரங்களை கூட்டுறவு சங்கங்களில் விற்க கோரிக்கை

பனமரத்துப்பட்டி: சேலம் மாவட்டத்தில் பெய்த பருவ மழையால், நெல் நடவு உள்ளிட்ட விவசாய பணிகள் நடந்து வருகிறது. இயற்கை உரங்களை, தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் விற்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சேலம் மாவட்ட விவசாய உற்பத்தி குழு உறுப்பினர் சண்முகம் கூறியதாவது: விவசாயிகள், அதிகமாக ரசாயன உரங்கள் பயன்படுத்தியதால், மண் வளம் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், இயற்கை முறை விவசாயத்திற்கு திரும்புகின்றனர். இதற்கு,

வேப்பம்புண்ணாக்கு, ஜிப்சம், மண்புழு உரம் ஆகியவை அவசியம் தேவை. தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் இவை கிடைப்பது இல்லை. தனியார் கடைகளில் விலை சற்று கூடுதலாகவும், தரம் இன்றியும் உள்ளது. அதனால், தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகளில், இவைகளை விற்பனை செய்ய, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

இது குறித்து, தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்க செயலாளர் ஒருவர் கூறியதாவது: கூட்டுறவு சங்கத்தில், வேப்பம் புண்ணாக்கு விற்பனை செய்வதில்லை. நிலக்கடலை உள்ளிட்ட ஒரு சில பயிர்களின் சீசன் சமயத்தில், ஜிப்சம் விற்பனைக்கு வரும். யூரியா, டி.ஏ.பி.,கலப்பு உரங்கள் தேவையான அளவிற்கு, இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

## தொப்பையாற்றில் உபரிநீர் திறப்பு: தண்டோரா போட்டு எச்சரிக்கை

மேச்சேரி: நீர்தேக்கத்தில் இருந்து உபரி நீர்திறக்கப்பட்டதால், தொப்பையாறு கரையோர கிராம மக்கள் பாதுகாப்பாக இருக்கும்படி, நேற்று தண்டோரா போட்டு வருவாய்த்துறையினர் எச்சரித்தனர்.

தர்மபுரி தாலுகா, செக்காரப்பட்டியில்,தொப்பையாறு குறுக்கே, 50 அடி உயரம் கொண்ட நீர்த்தேக்கம் கட்டப்பட்டுள்ளது. நீர்ப்பிடிப்பு பகுதியில் பெய்த பலத்த மழையால், பத்து ஆண்டுக்கு பின் நிரம்பிய நீர்த்தேக்கத்தில் இருந்து நேற்று முன்தினம் வினாடிக்கு, 240 கனஅடி உபரி நீர் தொப்பையாற்றில் திறக்கப்பட்டது. உபரி நீர் மேச்சேரி ஒன்றியம், வெள்ளாறு, தெத்திகிரிபட்டி, மல்லிகுந்தம், கூனான்டியூர் வழியாக, மேட்டூர் அணையை சென்றடையும். உபரி நீர்திறந்ததால் நேற்று, தொப்பையாற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால், வெள்ளாறு பஞ்சாயத்தில் தொப்பையாறு கரையோரத்திலுள்ள வெள்ளாறு, எருமப்பட்டி பகுதி பொதுமக்கள் பாதுகாப்பாக

இருக்கும்படியும், ஆற்றில் இறங்க வேண்டாம் எனவும் வருவாய்த்துறையினர் நேற்று கிராமங்களில் தண்டோரா போட்டு எச்சரிக்கை செய்தனர்.

### கால்நடை மருத்துவமனை அமைக்கப்பட வேண்டும்

குமாரபாளையம்: குமாரபாளையம் மற்றும் அதை சுற்றியுள்ள கிராமப்புற பகுதிகளான தட்டான்குட்டை, வேமன்காட்டுவலசு,கல்லங்காட்டுவலசு, வீ.மேட்டூர், வீரப்பம்பாளையம்,, குப்பாண்டபாளையம், குள்ளநாயக்கன்பாளையம், சவுதாபுரம், பல்லக்காபாளையம், சத்யா நகர், அருவங்காடு உள்ளிட்ட பகுதிகளில் கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக மழை பெய்து வருகிறது. இதனால் கால்நடைகளுக்கு கோமாரி நோய் உள்ளிட்ட பல்வேறு தொற்று நோய் பரவும் அபாயம் உள்ளது. 3,000க்கும் மேற்பட்ட கால்நடைகள் உள்ள தட்டான்குட்டை ஊராட்சி பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### நிலவேம்பு கஷாயம் வழங்கல் முகாம்

ராசிபுரம்: ராசிபுரம் அடுத்து பிள்ளாநல்லூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில், மழைக்கால சிறப்பு சித்த மருத்துவ முகாம் நடந்தது. டவுன் பஞ்சாயத்து தலைவர் மலர்கொடி தலைமை வகித்தார். நிலைய உதவி சித்த மருத்துவ அலுவலர் பாலாமணி, நிலவேம்பு கஷாயம் குறித்து பேசினார். தொடர்ந்து, பிள்ளாநல்லூர் சுற்று வட்டார பகுதிகளைச் சேர்ந்த பொது மக்களுக்கு, நிலவேம்பு கஷாயம் வழங்கப்பட்டது.

* திருச்செங்கோடு அரசு மருத்துவமனையில் உள்ள சித்த மருத்துவ பிரிவில், நிலவேம்பு கசாயம் வழங்கும் முகாம் நடந்தது. நகர்மன்றத் தலைவர் பொன்சரஸ்வதி முகாமை துவக்கி வைத்தார். அரசு மருத்துவமனை மருத்துவ அலுவலர் (பொறுப்பு) பழனிசாமி, சித்த

மருத்துவர் சிதம்பரலட்சமி உட்பட பலர் பங்கேற்றனர். நேற்று, 600க்கும் மேற்பட்டோர் நிலவேம்பு கஷாயம் பெற்றுச் சென்றனர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**இலை மடக்குப் புழுவின் பாதிப்பில் இருந்து நெற்பயிரைக் காக்கும் வழிகள்**



தற்போதுள்ள பருவத்தில், இலை மடக்குப் புழுக்களால் நெற்பயிர்கள் அதிக சேதத்துக்கு உள்ளாகின்றன' என்று திரூர் நெல் ஆராய்ச்சி நிலைய பூச்சியியல் துறை திட்ட ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் சுமதி தெரிவித்தார்.

இதுகுறித்து, அவர் மேலும் கூறியதாவது: தற்போதுள்ள காலகட்டத்தில், விவசாயம் செய்வது மிகவும் சிரமமான காரியமாக உள்ளது. இதில், விவசாயிகள் பல்வேறு போராட்டங்களைச் சந்திக்க வேண்டியுள்ளது. இந்த நிலையில் பாடுபட்டு வளர்க்கும் நெற்பயிர்களை, இலை மடக்குப் புழுக்கள் சேதப்படுத்துகின்றன. தற்போதுள்ள பருவத்தில், தமிழகத்தில் இலை மடக்குப் புழுக்களால் பரவலாக பாதிப்புகள் ஏற்படுகின்றன. இதில், இளம் புழு தன் உமிழ்நீரைக் கொண்டு மெல்லிய பட்டு நூல் போன்ற இழைகளால் இலையின் ஓரங்களைப் பிணைத்து அல்லது

இலையின் நுனிப்பகுதியை அடிப்பகுதியுடன் மடக்கி இணைத்து அதனுள் இருந்துகொண்டு பச்சையத்தைச் சுரண்டி உண்பதால் அப்பகுதி வெண்மையாக மாறிவிடும். அதிக அளவு பாதிக்கப்பட்ட பயிரில், இலைகள் வெண்மையான சருகு போலக் காணப்படும். இதனால், இலைகள் ஒளிச்சேர்க்கை செய்வதும் பாதிக்கப்பட்டு வளர்ச்சி குன்றி விடும்.

பராமரிப்பு, மேலாண்மை முறைகள்: வயல்களில் உள்ள களைச் செடிகளை அகற்ற வேண்டும். விளக்குப் பொறி அமைக்க வேண்டும். (மாலை 6 மணி முதல் இரவு 11 மணி வரை)

நிழல் படும் இடங்களில், தாக்குதல் அதிகமாவதால் கூடுதல் பாதுகாப்பு அவசியம்.

எம்டியு 3 இரகம், இப்பூச்சிக்கு மிதமான எதிர்ப்புத் திறன் கொண்டது.

மண்பரிசோதனைப் பரிந்துரைப்படி, தழைச்சத்து உரத்தினை 2-3 முறை பிரித்து இட வேண்டும். டிரைக்கோகிரம்மா கைலோனிஸ் என்ற முட்டை ஒட்டுண்ணியை, ஒரு எக்டேருக்கு 5 சிசி வீதம் நடவு நட்ட 37, 44, 51-ஆவது நாள் என (மூன்று முறை) வெளியிட வேண்டும்.

பொருளாதார சேத நிலையை அடைந்தவுடன் கீழ்க்கண்ட பூச்சிக் கொல்லிகளுள் ஏதேனும் ஒன்றை, ஒரு எக்டேருக்குத் தெளிக்க வேண்டும்:

குளோர்பாரிபாஸ் 20 இசி - 1250 மி.லி., டைகுளோர்வாஸ் 76 எஸ்.சி - 625 மி.லி., ப்ளூபென்டிமைடு 39.35 எஸ்சி - 50 மி.லி., கார்டாப்ஹைட்ரோ குளோரைடு 50 எஸ்பி - 1000 கிராம், அசிப்பேட் 76 எஸ்.பி - 625 கிராம் இட்டு பாதுகாக்க வேண்டும் என்றார்.

**நிரம்பியது சேர்வலாறு அணை: மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 6 அடி உயர்வு**



மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் சேர்வலாறு அணை புதன்கிழமை நிரம்பியது. மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 6 அடி உயர்ந்தது. பாபநாசம் அணை ஓரிரு நாளில் நிரம்பும் என எதிர்பார்க்கப்படுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் அணைகளின் நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை தொடர்ந்து பெய்து வருகிறது. கருப்பாநதி, கடனாநதி, ராமநதி, குண்டாறு, நம்பியாறு, அடவிநயினார் அணைகளை தொடர்ந்து, 153 அடி கொள்ளளவு கொண்ட சேர்வலாறு அணையின் நீர்மட்டம் புதன்கிழமை காலை 9 மணியளவில் 150 அடியை எட்டியது. அணையின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு 150 அடிக்கு மேல் நீரை சேமித்து வைப்பதில்லை. எனவே, அணைக்கு வந்து கொண்டிருந்த நீர், சுரங்கம் வழியாக பாபநாசம் அணைக்கு செல்வதாக அதிகாரிகள் தெரிவித்தனர். பாபநாசம், சேர்வலாறு அணைகளுக்கு நொடிக்கு 8,000 கனஅடி நீர்வரத்து இருந்தது. பாபநாசம் அணையின் நீர்மட்டம் 130 அடியை எட்டியது. தொடர்ந்து நீர்வரத்து இருந்ததால் சேர்வலாறு அணையில் உபரி நீர் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், அடுத்த ஒரு

மணி நேரத்தில் நீர்வரத்து 3,000 கனஅடியாக குறைந்ததால் உபரிநீர் திறக்கவில்லை என அணை வட்டாரங்கள் தெரிவித்தன.

வடகிழக்குப் பருவத்தில் இந்த இரு அணைகளும் வழக்கமாக நிரம்பும். தற்போது சேர்வலாறு அணை நிரம்பியதையடுத்து, பாபநாசம் அணையும் ஓரிரு நாளில் நிரம்பும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மணிமுத்தாறு அணைக்கு நொடிக்கு 4,784 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையின் நீர்மட்டம் 6 அடி உயர்ந்து 88.50 அடியாகவும், கடனாநதி அணையின் நீர்மட்டம் 83.50 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 82 அடியாகவும், கருப்பாநதி அணையின் நீர்மட்டம் 70.86 அடியாகவும், கொடுமுடியாறு அணையின் நீர்மட்டம் 48 அடியாகவும் இருந்தது.


பதிவான மழை: புதன்கிழமை காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): அதிகபட்சமாக பாபநாசம் அணை - 96, பாபநாசம் கீழ் அணை - 44, சேர்வலாறு அணை - 49, மணிமுத்தாறு அணை - 29.2, கடனாநதி அணை - 5, ராமநதி அணை - 3, நம்பியாறு அணை - 2, குண்டாறு அணை - 1.1.

மின் உற்பத்தி நிறுத்தம்: பலத்த மழையால் பாபநாசம், சேர்வலாறு அணைகளுக்கு நீர்வரத்து கணிசமாக அதிகரித்த காரணத்தால் பாபநாசம், சேர்வலாறு மின் உற்பத்தி நிலையங்களில் புதன்கிழமை மின் உற்பத்தி நிறுத்தப்பட்டது.

உபரிநீர் கடனாநதி அணையில் 573.85 கனஅடி, ராமநதி அணையில் 88.80 கனஅடி, அடவிநயினார் அணையில் 52 கனஅடி, கருப்பாநதி அணையில் 220 கனஅடி, நம்பியாறு அணையில் 800 கனஅடி திறந்து விடப்படுகிறது. பாபநாசம் கீழ் அணையில் இருந்து உபரிநீர் 1000 கனஅடி ஆற்றில் செல்கிறது. புதன்கிழமை காலை நிலவரப்படி ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டில் 13,454 கனஅடி உபரிநீர் கடலுக்கு

செல்கிறது. மழை குறைந்ததால் தாமிரவருணி ஆற்றில் நீர்வரத்து குறைந்தது.

**மண்டபம் கடல் பகுதியில் மீனவர் வலையில் சிக்கிய நட்சத்திர மீன்கள்**



மண்டபம் பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர் வலையில் அரிய வகை நட்சத்திர மீன்கள் புதன்கிழமை கிடைத்தன.

மண்டபம் சிறுவர் பூங்கா பகுதியில் இருந்து புதன்கிழமை அதிகாலை மண்டபம் காந்தி நகர் பகுதியைச் சேர்ந்த உமயராஜூக்குச் சொந்தமான படகில் 4 மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றனர்.

இவர்கள் தென்கடல் பகுதியில் மீன்களை பிடித்துக் கொண்டு பகலில் கரை திரும்பினர்.

இவர்கள் பிடித்து வந்த மீன்களோடு அரிய வகை நட்சத்திர மீன்களும் இருந்தன.

இந்த வகை மீன்கள் சிவப்பு நிறத்தில் அழகான தோற்றத்திலும் காணப்பட்டது. இந்த வகை மீனை உணவுக்குப் பயன்படுத்த முடியாது. பிடிபட்ட நட்சத்திர மீன்கள் உயிருடன் இருந்ததால் மீனவர்கள் அவற்றை மீண்டும் கடலில் விட்டனர்.

## துவரையில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள்...



தருமபுரி: தருமபுரி மாவட்டத்தில், நிகழாண்டு சுமார் 23,000 ஏக்கர் பரப்பளவில் துவரை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதில், 180 ஏக்கர் பரப்பு விதைப் பண்ணையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.

தற்சமயம், துவரை பயிர் பூக்கும் தருவாயில் உள்ளதால், உடனடியாக விவசாயிகள், பூச்சி நோய்களால் ஏற்படும் பாதிப்புகளைப் போக்கி நல்ல மகசூலைப் பெற, மேற்கொள்ள வேண்டிய ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகள் குறித்து தருமபுரி விதைச் சான்று உதவி இயக்குநர் எம்.ஆர்.அசோகன் கூறும் வழிமுறைகள்:

கோடை உழவு செய்வதன் மூலம் மண்ணிலுள்ள கூட்டுப்புழுக்கள், பூஞ்சான வித்துக்களை அழிக்கலாம். டிரைக்கோடெர்மா விரிடி 5 கிலோ, சூடோமோனஸ் புளுரோசன்ஸ் 5 கிலோவை 125 கிலோ, மக்கிய தொழு உரத்துடன் கலந்து ஒரு ஹெக்டேர் பரப்புக்கு இடுதல் நோய், நூற்புழுவின் தாக்குதலைக் குறைக்க உதவும்.

டிரைக்கோடெர்மா விரிடி 4 கிராம் என்ற அளவில் விதைநேர்த்தி செய்வது பயிரின் ஆரம்ப கட்டத்தில் மண் மூலம் பரவும் நோய்

பாதிப்பைத் தவிர்க்க உதவும். நூற்புழு தென்படும் இடங்களில் 1:1 என்ற விகிதத்தில் சோளத்தை ஊடுபயிராக விதைப்பது சிறந்த பலனைத்தரும். நோய், பூச்சித் தாக்குதலை எதிர்க்கும் ரகங்களை பயிர்செய்வது சிறந்தது. துவரையில் காய்ப்புழுவின் பாதிப்பைக் கண்காணிப்பது மிகவும் அவசியமாகும். இனக் கவர்ச்சிப் பொறியை ஹெக்டேருக்கு 55-10 வரை வைப்பதன் மூலம் ஆண் தத்துப்பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்கலாம். ஒரு நாளில் 4-5 தாய் அந்துப் பூச்சிகள் இனக் கவர்ச்சிப் பொறியில் விழுந்தால் மேலாண்மை முறைகளைக் கையாள்வது அவசியமாகும். மலட்டு தேமல் நோய் பாதிக்கப்பட்ட செடிகளை உடனே அப்புறப்படுத்த வேண்டும். மலட்டு தேமல் நோய் செம்பேனால் பரவுவதால் செம்பேனைக் கட்டுப்படுத்த புரோபர்கைட் 1.5 மி.லி. ஒரு லிட்டர் தண்ணீருக்கு அல்லது ஸ்பைரோசிரொன் 0.5 மி.லி. ஒரு லிட்டர் தண்ணீருக்கு அல்லது அவர்மெக்டின் ஒரு மி.லி. ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஏதேனும் ஒன்றைத் தெளிக்கலாம். பச்சைப் புழு, புள்ளிக்காய்ப் புழுவின் பாதிப்பு அதிகமானால் ஹெக்கோவெர்பா என்.பி.வி 450 எல்இ என்ற அளவிலும் அல்லது வேப்பங்கொட்டைச் சாறு 5 சதம் தெளிக்கலாம்.

பூச்சி மருந்துகளை உபயோகப்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படின், இண்டாக்சாகார்ப் 1 மி,லி. ஒரு லிட்டர் தண்ணீருக்கு அல்லது ப்ளூபென்டமைடு 0.5 மி.லி. ஒரு லிட்டர் தண்ணீருக்கு அல்லது ஸ்பைனோசேட் ஒரு மி.லி. ஒரு லிட்டர் தண்ணீருக்கு அல்லது குளோர்நைட்ரோப்ரோனோல் 0.3 மி.லி. ஒரு லிட்டர் தண்ணீருக்கு அல்லது எமாமெக்டின் பென்ஜோவேட் 0.5 மி.லி. ஒரு லிட்டர் தண்ணீருக்கு ஏதேனும் ஒன்றைத் தெளிக்கலாம். சாறு உறிஞ்சும் பூச்சிகள்

பயிரின் ஆரம்ப காலத்தில் வளர்ச்சியைப் பாதிக்கும். இதைத் தவிர்க்க, மஞ்சள் ஒட்டுப் பொறி அல்லது மஞ்சள் வண்ண அட்டைகள் 25-ஐ ஒரு ஹெக்டேருக்கு வைப்பது சிறந்த பலனைத் தரும். பாதிப்பு அதிகமானால், வேப்பங்கொட்டைச் சாறு 5 சதம் அல்லது வேப்பெண்ணெய் 3 சதம் அல்லது இமிடாகுளோபிரிட் 0.5 மி.லி. ஒரு லிட்டர் தண்ணீருக்கு, தயோமீத்தாக்சம் 0.5 மி.லி. ஒரு லிட்டர் தண்ணீருக்கு, தயோகுளோபிரிட் ஒரு மி.லி. ஒரு லிட்டர் தண்ணீருக்கு, இவற்றில் ஏதேனும் ஒன்றைத் தெளிக்கலாம்.

வாடல் நோய், வேர் அழுகலைத் தவிர்க்க விவசாயிகள் சூடோமோனஸ்,டிரைக்கோடெர்மாவை உபயோகப்படுத்தலாம். பாதிப்பு அதிகமானால், தயோபினைட் மீதைல் 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு, அல்லது கார்பண்டாசிம் 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு அல்லது காப்பர் ஆக்ஸிகுளோரைட் 2 கிராம் ஒரு லிட்டர் தண்ணீருக்கு என்ற அளவில் உபயோகிக்கலாம். இந்த வழிமுறைகளைப் பின்பற்றினால், விவசாயிகள் நல்ல மகசூலைப் பெற்று பயனடையலாம் என்றார். "துவரையில் காய்ப்புழுவின் பாதிப்பைக் கண்காணிப்பது மிகவும் அவசியமாகும். இனக் கவர்ச்சிப் பொறியை ஹெக்டேருக்கு 55-10 வரை வைப்பதன் மூலம் ஆண் தத்துப்பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணிக்கலாம்."

**பயிர் இழப்பீடு பெறுவதற்கான வழிகாட்டுதல்களை எளிதாக்க வேண்டும்**

வறட்சியால் சேதமடைந்த பயிர்களுக்கான இழப்பீடுகளை விவசாயிகளுக்கு வழங்குவதில் தடையாக இருக்கும் வழிகாட்டுதல்களை மாற்ற வேண்டும் என்று, மஜத சட்டப்பேரவைக் குழுத் தலைவர் குமாரசாமி கேட்டுக் கொண்டார்.

கர்நாடக சட்டப்பேரவையில் புதன்கிழமை மாநிலத்தில் நிலவும் வறட்சி குறித்த விவாதத்தில் பங்கேற்று அவர் பேசியது:

கர்நாடகம் உள்பட தேசிய அளவில் விவசாயிகளின் நிலை மோசமாக உள்ளது. வறட்சி, வெள்ளம் எதுவானாலும் பாதிக்கப்படுவது

விவசாயிகள்தான். விவசாயிகளின் நலனில் மத்திய, மாநில அரசுகளுக்கு அக்கறையில்லை. வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர் இழப்பீடு வழங்குவதில் மத்திய அரசு மீது பழிபோடுவதன் மூலம் தனது பொறுப்பை மாநில அரசு தட்டிக்கழிக்கக் கூடாது. விவசாயிகளின் பிரச்னைகளுக்குத் தீர்வு காணும் பொறுப்பு மத்திய,மாநில அரசுகளுக்கு உள்ளது.

கடும் வறட்சி, மக்களை குடிநீர் இல்லாமல் தவிக்கவிட்டுள்ளது, கால்நடைகளுக்கு தீவனம் இல்லை. பசு மாடங்கள் திறக்கப்படவில்லை. கர்நாடகத்தில் 93 லட்சம் கால்நடைகள் இருப்பதாகக் கூறும் அரசு, பசு மாடங்களில் வெறும் 8 ஆயிரம் பசுக்களை வைத்திருப்பதாகத் தெரிவித்துள்ளது.

கால்நடைகளுக்கு போதிய தீவனம் இல்லை. 2011-15-ஆம் ஆண்டுகளில் ரூ.23 ஆயிரம் கோடி மதிப்புள்ள பயிர்கள் நாசமடைந்துள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது. வறட்சி மறுவாழ்வுப் பணிகளை மேற்கொள்ள வெறும் ரூ.500 கோடி மட்டுமே மாநில அரசு ஒதுக்கியுள்ளது.

இது எந்த வகையில் நியாயம்? விவசாயிகளுக்கு பயிர் இழப்பீடு வழங்குவதற்காக மாநில அரசு வகுத்துள்ள வழிகாட்டுதல்கள் விவசாயிகளின் பிரச்னைகளைத் தீர்ப்பதாகவும் இல்லை, நம்பிக்கையூட்டுவதாகவும் இல்லை.

விவசாயிகளுக்கு வழங்கப்படும் பயிர் இழப்பீடுக்கான வழிகாட்டுதல்களை மாற்றியமைக்க வேண்டும். அப்போதுதான் பயிர்களை இழந்துள்ள விவசாயிகள் தற்கொலை செய்து கொள்ளும் எண்ணம் எழாது.

கர்நாடகத்தில் 800 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். ஆனால், 240 பேரின் குடும்பங்களுக்கு மட்டுமே இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டுள்ளது. கடன் தொல்லையால்தான் விவசாயிகள்

தற்கொலை செய்து கொண்டுள்ளனர். எனவே, வட்டி தள்ளுபடியை போல கடன் தள்ளுபடி செய்ய அரசு முன்வர வேண்டும்.

கடன் தள்ளுபடி மட்டுமே விவசாயிகளின் பிரச்னைக்குத் தீர்வாகாது. விளை பொருள்களுக்கு நல்ல விலை, சீரான கடனுதவி, விற்க சந்தை இருந்தால் விவசாயிகளின் பிரச்னைகள் ஓரளவு சீராகும் என்றார்.

**"அரசு நிதியைக் கையாளுவதில் அதிகாரிகள் முறைகேடு'**

அரசு நிதியை அதிகாரிகள் தவறாகக் கையாளப்படுவதாக கர்நாடக முன்னாள் முதல்வர் குமாரசாமி குற்றஞ்சாட்டினார்.

சட்டப்பேரவையில் புதன்கிழமை கர்நாடகத்தில் நிலவும் வறட்சி நிலை குறித்து விவாதம் நடைபெற்றது.

எச்.டி.குமாரசாமி(மஜத): ஊரக குடிநீர்த் திட்டத்திற்கு 2009-10 முதல் 2015-16-ஆம் ஆண்டு வரை ரூ.57 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டு செயல்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் 3.2 லட்சம் வேலைகள் செய்வதற்கு திட்டமிட்டு, இதுவரை 1.69 லட்சம் வேலைகள் மட்டுமே செயல்படுத்தப்பட்டுள்ளன. இதற்காக ரூ.14,198 கோடி செலவழிக்கப்பட்டுள்ளது. ஆனால், ஒப்பந்ததாரர்களுக்கு வெறும் ரூ.6,100 கோடி மட்டுமே விடுவிக்கப்பட்டுள்ளது. இதனால் குடிநீர்த் திட்டங்களில் வேலைசெய்ய எந்த ஒப்பந்ததாரும் முன்வரவில்லை.

2015-16-ஆம் ஆண்டில் குடிநீர்த் திட்டத்திற்கு ரூ.1659 கோடி ஒதுக்கப்பட்டு, அதில் ரூ.1,500 கோடியை மத்திய அரசிடம் இருந்து எதிர்பார்த்து காத்திருக்கிறது அரசு. ரூ.1500 கோடியில் ரூ.130 கோடியை மட்டுமே மத்திய அரசு அளித்துள்ளது.

அரசு திட்டங்களுக்காக ஒதுக்கப்படும் நிதி, வங்கி வைப்புகளில் வைத்து அதில் அதிகாரிகள் லாபம் அடைந்து வருகின்றனர். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையில் ரூ.400கோடி வைப்புவைக்கப்பட்டுள்ளதை ஏற்கெனவே நான் தெரிவித்திருந்தேன்.

அதுகுறித்து விசாரணை நடைபெற்று வருகிறது. விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண உதவிகளை வழங்க நிதி இல்லை என்று கைவிரிக்கும் அரசு, திட்டப் பணிகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை வங்கியில் வைப்பு வைத்து அதில் கிடைக்கும் லாபத்தை அதிகாரிகள் கொள்ளை அடித்து வருகின்றர்.

இதுபோல வங்கியில் வைப்புவைத்துள்ள அனைத்து நிதி தொகுப்பையும் கருவூலத்திற்கு மாற்றுமாறு உத்தரவிட்டால், எங்கெங்கு எவ்வளவு நிதி வைப்பு வைக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வரும்.

இதுபோன்ற சட்டவிரோத செயல்களில் ஈடுபடும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

எச்.கே.பாட்டீல் (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அமைச்சர்): சட்ட விரோதமாக வங்கிகளில் வைப்பு வைக்கப்பட்டுள்ள நிதி ஆதாரங்கள் குறித்து விசாரணை நடந்துவருகிறது. தவறு நடந்திருந்தால் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். இந்த விவகாரம் குறித்து முதல்வர் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு, ஆய்வறிக்கை கேட்டிருக்கிறார். விரைவில் இதுதொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

### இது யார் செய்த குற்றம்?

கடந்த இருபது ஆண்டுகளில் இல்லாத அளவில் இந்த ஆண்டுக்குரிய பருவமழை தமிழ்நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் கொட்டித் தீர்த்துவிட்டது. குறிப்பாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர் மாவட்டங்களில் தீபாவளிக்குப் பின் பல ஊர்களில் ஒரே நாளில் 25 முதல் 40 செ.மீ. என்ற அளவில் மழை பெய்து வெள்ளக் காடாயின. மனித உயிர்களும் கால்நடைகளும் பறிபோயின. வெள்ளச் சேதத்தைக் கணக்கிடும் பணி அவ்வளவு எளிதல்ல.

விவசாயத்தைப் பொருத்தவரை மழை மகிழ்ச்சியான விஷயம். வறட்சியால் ஏற்படும் துயரங்களைவிட மழையால் ஏற்படும் துயரங்கள் குறைவு. கடலூரைப் பொருத்தவரை வெள்ளநீர் கடலுக்குள் கடத்த

முடிந்ததைப்போல் சென்னை நகரில் கடத்த முடியவில்லை. இது ஓரளவுக்கு மட்டுமே சாத்தியம்.

ஏனென்றால், சென்னை நகரம் ஒரு ஃப்ளேட் சிட்டி (Flat City). சென்னையும் சென்னைப் புறநகர்களையும் சேர்த்துக் கணக்கிட்டால் சுமார் 200 சதுர கி.மீ. நிலப்பரப்புடையது. கடல் மட்டத்திலிருந்து 5 முதல் 10 மீட்டர் உயரமே. அதாவது தாழ்வான நிலம். சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும் புழலேரி, பூண்டி, செம்பரம்பாக்கம் ஆகியவை புறநகர்ப் பகுதிகளில் உள்ளன. கூவம், அடையாறு, பக்கிங்காம் கால்வாய் ஆகிய ஆறுகள் வழியே மழைநீர் கடலில் விழ வேண்டும்.

இந்திய விடுதலைக்கு முன்பு ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் சென்னை உண்மையில் அழகுள்ள நகரமாயிருந்தது. கூவம் நதியிலும் அடையாறிலும் குளித்துக் களித்தவர்கள் உண்டு. பழைய நகரப் பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட பாசன ஏரிகள் இருந்தன. தெற்கே சைதாப்பேட்டையிலிருந்து செங்கல்பட்டு வரை நெல் வயல்கள். மற்றொரு திசையில் பரங்கிமலையிலிருந்து பூந்தமல்லி வரை நெல் வயல்கள். வடக்கில் கும்மிடிப்பூண்டி வரையிலும், மேற்கில் திருவள்ளூர் வரையிலும் பசுமைக் காட்சி.

சென்னையில் சங்கமமாகும் கூவத்தின் தோற்றம் திருவள்ளூர் அருகே தொடங்கி மழைநீரை ஒவ்வொரு ஏரிக்கும் வழங்கி சென்னை - சென்னைப் புறநகர்களில் அமைந்துள்ள ஏரிச் சங்கிலிகளாக இணைத்த வண்ணம் ஓடியது. கூவத்தைவிட அற்புதம் அடையாறு. இங்கு எப்போதும் படகு சவாரி உண்டு. இன்று போட் கிளப் தெரு மட்டுமே எஞ்சியுள்ளது.

மாங்குரோவ் என்று சொல்லப்படும் அலையாத்தி மரங்களும் பசுமைத் தாவரங்களும் அடையாறின் இரு கரைகளிலும் மனத்தைக் கொள்ளை கொள்ளும். அநேகமாக இப்படிப்பட்ட இயற்கைச் சூழலில் மனத்தைப் பறிகொடுத்த அன்னிபெசன்ட் அம்மையார் அடையாறில் உள்ள அற்புதமான வனப் பகுதியைத் தனக்கு சொந்தமாக்கிக் கொண்டு

ஆழ்நிலை தியானத்திற்குரிய தியசாஃபிகல் சொசைட்டியை உருவாக்கியுள்ளனர்.

எந்த ஆக்கிரமிப்புக்கும் ஆளாகாமல் சென்னையில் ஓர் அற்புத வனமாக இன்றும் எஞ்சியுள்ளது. அதுபோல் ஆளுநர் மாளிகை, ஐ.ஐ.டி. வளாகம், கிண்டி உயிரியல் பூங்காவிலும் வனப்பகுதி எஞ்சியுள்ளது. வட சென்னைப் பகுதியில் உள்ள அம்பத்தூர் ஏரி, கொடுங்கையூர், ஆதம்பாக்கம், மதுரவாயல் ஏரிகள் இன்று காணாமல் போய்விட்டன.

அவ்வாறே தென் சென்னைப் பகுதியில் நுங்கம்பாக்கம் ஏரி, கோடம்பாக்கம் ஏரி, மாம்பலம் ஏரி, பழவந்தாங்கல் ஏரி, பல்லாவரம் ஏரி, தாம்பரம் ஏரியும் காணாமல் போய்விட்டன. 1950-இல் நான் பார்த்த சென்னைக்கும் 2015-இல் நான் பார்க்கும் சென்னைக்கும் எவ்வளவு மாற்றங்கள்? சுருக்கமாகச் சொல்வதானால், திருவள்ளூரில் தொடங்கி சென்னை வரை இடையில் உள்ள ஆயிரக்கணக்கான ஏரிகளின் வடிநீர் கூவம் வழியே சென்னையில் கலக்கிறது. அதாவது, ஒட்டுமொத்த சென்னை நகரமே தாழ்வான நிலப் பகுதி என்பதுதான்.

சென்னை நகரைச் சுற்றியுள்ள வயல்களில் கிச்சலிச் சம்பா நெல்லும், நெல்லூர் சம்பா, வையக்குண்டான், பெருங்கார் விளைந்தபோது வேகமாக வெள்ளம் வடிந்தது. மேற்கிலுள்ள மேட்டுப் பகுதியிலிருந்து கிழக்கில் உள்ள தாழ்வான பகுதிக்கு ஓடும் நீர் தங்கு தடையில்லாமல் ஓட வேண்டுமே. அப்படி ஓடினால்தானே நீர் வடியும்.

ஒரு காலத்தில் ஏரியாகவும், நெல் வயலாகவும் விளங்கிய சென்னை பொன் விளையும் பூமியில் வீடுகளும், கட்டடங்களும், விமான நிலையங்களும், தேசிய நெடுஞ்சாலைகளும், புதிய புதிய நகர்களில் உயர உயரப் பல்லடுக்கு மாளிகைகளும் எழும்பிவிட்டதால், நீரோட்டம் நின்று வயல்களில் மிதக்க வேண்டிய நீர், மாளிகைகளில் மிதந்து, வயல்வெளிகளில் உள்ள எலி, தவளைகளைத் தின்னும் பாம்புகள் மனிதர்களைத் தீண்ட மாளிகைக்குள் பிரவேசிப்பது யார் குற்றம்?

பத்தாண்டுகளுக்கு ஒரு முறை சென்னையில் கனமழை பெய்வது இயற்கையே. சென்னை வானிலை நிலையம் வழங்கும் தகவல் அடிப்படையில் 1976-இல் பெய்த கனமழையைவிட 2015-இல் சென்னை கனமழை குறைவுதான்.

1976-இல் அம்பத்தூர் பகுதியில் ஒரே நாளில் 52 செ.மீ. மழை பெய்துள்ளது. சராசரி அளவு 45 செ.மீ. 2015-இல் அதாவது ஒரு நாள் மழை 24 செ.மீ.தான். 1969, 1976, 1985, 1996, 1998, 2005 பின் 2015 ஆகியவை சென்னை கனமழை ஆண்டுகள். எனினும், இன்றைய சென்னை 24 செ.மீ. மழையைக் கூட தாங்க இயலாமல் போனதின் காரணம், புதிய நெடுஞ்சாலைகளும் மெட்ரோ ரயில் தடங்களும் நீர்வடிப் பகுதிகளை ஆங்காங்கே தடுத்துவிட்டன. வெள்ளநீர் வடியாமல் சென்னை நகர் நரக வேதனையையும் நாராச வேதனையையும் அனுபவிக்க வேண்டியிருந்தது. அவை தொடர்கின்றன.

ஒரு காலகட்டத்தில் எம்.ஜி.ஆர். முதல்வராயிருந்தபோது தமிழ்நாட்டின் தலைநகராக இருக்கும் தகுதி சென்னைக்கு இல்லை என்று கருதி தலைநகரைத் திருச்சிக்கும் தஞ்சைக்கும் நடுவில் மாற்ற வேண்டுமென்று திட்டமிட்டார். அதற்குக் காரணம் வெள்ளத்தின் தாக்கமே. செங்கிப்பட்டியிலிருந்து சிறிது தூரத்தில் இடம் தேர்வானது. இப்படிப்பட்ட யோசனைக்கு ஏராளமான எதிர்ப்புகள் வந்தன.

மழை, தாழ்வான பகுதி என்ற காரணத்திற்கு மேல், மாநிலத் தலைநகர் வடகோடி எல்லை என்பதால் தென்கோடியில் உள்ள குமரி, நெல்லை, மதுரை; மேற்கில் கோவை, ஈரோடு போன்ற மாவட்ட மக்களுக்குப் புதிய தலைநகர் தூரம் குறைவாக இருக்கும். தலைநகர் மாற்ற விஷயத்தில் எம்.ஜி.ஆர். உறுதியாக இருந்தும்கூட எதிர்க்கட்சியினர் அவரை "துக்ளக்' என்று ஏசினர். அப்போது தலைமைச் செயலகத்தில் பணிபுரிந்த மேல்மட்ட அதிகாரிகளும் போர்க்கொடி தூக்கியதால் ஒரு நல்ல திட்டம் கிடப்பில் போடப்பட்டது. இது யார் செய்த குற்றம்?

அடையாறைத் தாண்டி மாமல்லபுரம் வரை, தாம்பரத்தைத் தாண்டி செங்கல்பட்டு வரை, ஆவடியைத் தாண்டி திருவள்ளூர் வரை, எண்ணூரைத் தாண்டி பொன்னேரி வரை விவசாயம் செய்தவர்கள் ரியல் எஸ்டேட் மாஃபியாக்களிடம் அற்பப் பணத்திற்கு நிலத்தை விற்று சென்னை நகரில் பிழைக்க வந்துவிட்டனர். நெல் வயல்களை மனைக் கட்டுகளாகப் பிளாட் போட்டு விற்றவர்கள் கரை வேட்டிகளுடன் திரியலாம்.

ஒரு கால கட்டத்தில் வயல்களாயிருந்த இடங்கள் பட்டா நிலங்களாயிருக்கலாம். பல கை மாறி, மனை நிலங்களாகியிருக்கலாம். நத்தம், புறம்போக்கு, ஏரி, வாய்மடை, நீர்வரத்து, மறுகால் நிலங்கள் சட்டப்படி அரசுக்குத்தானே சொந்தம்? அப்படியிருக்க, அந்த நிலங்களில் கட்டடங்கள் வந்த கதை என்ன?

நில வரி, ரயத்துவாரி, செட்டில்மெண்ட் தொடர்பான வருவாய்த் துறை சட்டங்களில் உள்ள ஓட்டைகள்தாம் காரணம். அந்த ஓட்டைகளை சாமர்த்தியமாகப் பயன்படுத்திய ரியல் எஸ்டேட் தரகர்கள் நத்தம் புறம்போக்கு நிலங்களுக்குப் பட்டா பெற்றுள்ளனர்.

ஆங்கிலேயர் ஆட்சியில் அரசு வருமானம் நிலவரி என்பதால் அரசு நிலத்தை ஆக்கிரமித்துப் பின் அனுபவப் பாத்தியதை கொண்டாடி நிலத்திற்கு வரி கட்டுவதாக ஒப்புக் கொண்டு பீமம் பெறுவார்கள். பீமம் ரசீதைக் காட்டிப் பின்னர் பட்டா பெறப் பத்தும் வேலை செய்யும். கணக்குப் பிள்ளையில் தொடங்கி வட்டாட்சியர் வரைப் பத்துப் பேரைப் பணம் கொடுத்து கவனித்தால் போதுமானது!

இப்படி அரசு நிலங்களை உடமையாக்கி அரசுக்கே விற்ற கெட்டிக்காரக் கேடிகளும் இந்தக் கதையில் உண்டு. "கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம்' என்பது போல் புறநகர் வளர்ச்சியைப் பற்றி 50 ஆண்டுகளுக்கு முன்பே யோசிக்க மறந்துவிட்டு இன்று யோசித்து என்ன பயன்? எனினும், இதற்கெல்லாம் ஆளும் கட்சி மீது குற்றப் பத்திரிகை வாசிப்பது எதிர்க்கட்சிகளுக்கு இயல்பு.

ஏரிப் புறம்போக்கு ஆக்கிரமிப்பு போன்றவை பக்தவத்சலம் முதல்வராயிருந்த காலத்தில் பிள்ளையார் சுழி போடப்பட்டது. பின்னர், மாறி மாறி ஆண்ட கழக ஆட்சிகளில் புறநகர்ப் பகுதிக் கட்டுமானங்கள் நீர் நிலைகள் மீதும், தூர்ந்துவிட்ட நீர்வரத்துக் கால்வாய்கள் மீதும் கட்டப்பட்டு கூவம் நதியின் ஓட்டம் பல நூற்றுக்கணக்கான இடங்களில் தடையுற்றதால் கூவத்தின் வாசனையை (?) ஏறத்தாழ 70 ஆண்டுகளாக சென்னை மக்கள் அனுபவிக்கிறார்கள்.

சுற்றுச்சூழலையும் சுகாதாரத்தையும் புறக்கணித்துப் பொன் விளைந்த சென்னை பட்டினத்தைக் கட்டுமானங்கள் கொண்டு அழகு பார்த்தது யார் குற்றம்? வெளி மாவட்டங்களிலிருந்து வேலை தேடி வந்தவர்களும், வேலை பெற்று வந்தவர்களும் நடுத்தர வர்க்கத்தினர். இவர்கள் குறைந்த விலைக்கு வீடு வாங்க ஆசைப்பட்டது இயல்புதான்.

ஏரிகள் மீது கட்டப்பட்ட அடுக்கு மாளிகைகளில் சொந்த இடம் கிட்டியபோது, இப்படி எல்லாம் அவரவர் மாளிகைகளைச் சுற்றி மழைநீர் சேமிப்பு நிகழும் என்று எண்ணிப் பார்க்கவில்லை! இப்படி மழை வெள்ளம் வீடுகளைச் சுற்றி நின்றால் எப்போது சுவர் இடியும் என்று பயத்தில் வாழ்வோரும் உண்டு.

இப்படி மனம் நொறுங்கி வாழும் மக்களுக்குத் தேர்தல் நெருக்குவதால் வெள்ளச் சேத மீட்பு, நிவாரணப் பணிகளில் எல்லா அரசியல் கட்சிகளும் வரிந்து கட்டிக் கொண்டு உணவுப் பொட்டலங்கள், ரொட்டி, பாய், போர்வை, வாளி, வேட்டி, சேலை, அரிசி, காய்கறி, வீட்டுக்கு வீடு பணம் என்று வழங்குவது ஓட்டுக்குத்தான் என்றாலும் வரவேற்க வேண்டிய விஷயமே. மழைக்காலம் முடிந்து விடும். நீர் வற்றி விடும். சித்திரை வந்துவிடும். வெயிலை வரவேற்று விரிந்த சுவர்களில் சிமெண்டுப் பூசிப் பின் வண்ணம் பூசி மக்கள் வாழலாம்.

அடுத்த பத்தாண்டிலோ, ஐந்தாண்டிலோ மீண்டும் சென்னைப் புறநகர்கள் மிதந்தால்? அது மழையின் குற்றமல்ல. வாழ்வின் குற்றமல்ல.

மெட்ரோ நகர் வளர்ச்சியில் கவனம் செலுத்தும் மனிதர்களின் குற்றமே.

**மோடி அடுத்த வாரம் பேச்சுவார்த்தை**

பருவநிலை மாற்ற விவகாரம் தொடர்பாக அமெரிக்க அதிபர் ஒபாமாவும், பிரதமர் நரேந்திர மோடியும் அடுத்த வாரம் சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர்.

பிரான்ஸ் தலைநகர் பாரீஸில் பருவநிலை மாற்ற விவகாரம் தொடர்பாக வரும் 30ஆம் தேதி முதல் 2 வாரங்களுக்கு சர்வதேச மாநாடு நடைபெறுகிறது. இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக அமெரிக்க அதிபர் ஒபாமா, பிரதமர் நரேந்திர மோடி, சீன அதிபர் ஜீ ஜின்பிங், பிரான்ஸ் அதிபர் ஹொலாந்த் உள்ளிட்ட உலக நாடுகளின் தலைவர்கள் பலரும் பாரீஸ் வருகை தரவுள்ளனர்.

இந்நிலையில், பாரீஸ் மாநாட்டின் முதல் நாளில் (நவ.30) அமெரிக்க அதிபர் ஒபாமாவும், பிரதமர் நரேந்திர மோடியும் சந்தித்து முக்கிய பேச்சுவார்த்தை நடத்தவுள்ளனர். இதுகுறித்து வாஷிங்டனில் அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்பு துணை ஆலோசகர் பென் ரோட்ஸ் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

அமெரிக்க அதிபர் ஒபாமா, பிரதமர் நரேந்திர மோடியை, வரும் 30ஆம் தேதி சந்தித்துப் பேசவுள்ளார். சீன அதிபர் ஜீ ஜின்பிங்கையும் சந்தித்து அவர் முக்கிய ஆலோசனை நடத்தவுள்ளார். இதேபோல, பிரான்ஸ் அதிபரையும் சந்திக்கவுள்ளார்.

சீனா, இந்தியா, பிரான்ஸ் தலைவர்களுடனான சந்திப்பின் மூலம் பருவநிலை மாற்ற விவகாரத்தில் சக்திவாய்ந்த ஒப்பந்தம் ஏற்படுத்துவது குறித்து உலகின் முக்கிய நாடுகளுடன் சேர்ந்து பணியாற்றி வருவதை திட்டவட்டமாக வெளிப்படுத்த அமெரிக்கா விரும்புகிறது.

பிரதமர் நரேந்திர மோடியை அமெரிக்க அதிபர் ஒபாமா கடந்த ஆண்டு

முதல் இதுவரை 6 முறை சந்தித்துள்ளார். பாரீஸில் நடைபெறவிருக்கும் சந்திப்பானது, இருவருக்கும் இடையேயான 7ஆவது சந்திப்பாகும்.

பருவநிலை மாற்றம் தொடர்பான பாரீஸ் சர்வதேச மாநாட்டில் சுமுகமான முடிவு ஏற்படுவதற்கு எப்படி தனது பங்களிப்பை அளிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிப்பது குறித்து இந்தியாவுடன் அமெரிக்கா கடந்த ஓராண்டாகவே பணியாற்றி வந்தது. பாரீஸ் மாநாடு வெற்றியடைவதற்கு மாசு ஏற்படுத்தும் வாயுக்களை அதிக அளவில் வெளியேற்றும் நாடுகளான சீனா மற்றும் இந்தியாவின் ஒத்துழைப்பு மிகவும் உதவியாக இருக்கும் என்றார் ரோட்ஸ்.

நியூயார்க் நகரில் நடைபெற்ற ஐ.நா. பொதுச் சபை கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக பிரதமர் நரேந்திர மோடி அமெரிக்காவுக்கு கடந்த செப்டம்பர் மாதம் சென்றிருந்தபோது, அமெரிக்க அதிபர் ஒபாமாவை கடைசியாகச் சந்தித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## வரும் 29-இல் சர்க்கரை நோய் இலவச பரிசோதனை முகாம்

உலக சர்க்கரை நோய் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு, இலவச சர்க்கரை நோய் பரிசோதனை முகாம், சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள புஷ்பா நகர் குடியிருப்பில் வருகிற 29-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

சூளைமேடு எக்ஸ்னோரா தன்னார்வ அமைப்பு, அருணா சர்க்கரை நோய் சிகிச்சை மையம் ஆகியவை இணைந்து இந்த முகாமுக்கு ஏற்பாடு செய்துள்ளன. அன்றைய தினம் காலை 8 மணி முதல் நண்பகல் 12 மணி வரை நடைபெறவுள்ள இந்த முகாமில் சர்க்கரை நோய் சிகிச்சை நிபுணர் ஏ.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு, நோய் குறித்த பரிசோதனைகளை மேற்கொள்ளவுள்ளார்.

இதில் 110-ஆவது மாமன்ற உறுப்பினர் நுங்கை மாறன், எக்ஸ்னோரா அமைப்பின் செயலர் எஸ்.கஸ்தூரி ரங்கன் உள்ளிட்டோர் கலந்து கொள்கின்றனர்.

## "முதலைப் பண்ணையில் இருந்து முதலைகள் எதுவும் தப்பிக்கவில்லை'

வடநெம்மேலி முதலைப் பண்ணையில் இருந்து முதலைகள் எதுவும் கடல் வழியாக தப்பிக்கவில்லை என முதலைப் பண்ணை இயக்குநர் கூறினார்.

மாமல்லபுரத்தை அடுத்த வடநெம்மேலியில் முதலைப் பண்ணை உள்ளது.

இங்கு ஆப்பிரிக்க முதலை, ஊசி மூக்கு முதலை, 5 அடி நீள, 10 அடி நீள ராட்சத முதலை உள்ளிட்ட பல வகையான 3000-க்கும் மேற்பட்ட முதலைகள் உள்ளன. இங்கு தினமும் ஆயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர்.

இந்த முதலைப் பண்ணையில் இருந்து 50 முதலைகள் கடல் வழியாக தப்பிச் சென்றுவிட்டதாக கட்செவி அஞ்சலில் தகவல் பரவியது.

இதையடுத்து இங்கு செய்தி சேகரிக்க ஏராளமான நிருபர்கள் சென்றனர். அப்போது முதலைப் பண்ணையில் இருந்து முதலைகள் எதுவும் தப்பிக்கவில்லை எனவும், இது வதந்தி என்பதும் தெரியவந்தது. இதையடுத்து வடநெம்மேலி முதலைப் பண்ணை இயக்குநர் ஜாய் விட்டேகர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

வடநெம்மேலி முதலைப் பண்ணையில் ஆயிரக்கணக்கான முதலைகளை நாங்கள் பராமரித்து பாதுகாத்து வருகிறோம்.

முதலைகள் ஏழு அடி உயர சுவர்களுக்கு மத்தியில் உள்ள குடில்களில் அடைக்கப்பட்டுள்ளன. இவற்றின் மேல் பாதுகாப்புக்காக கம்பி வலைகளும் பொருத்தப்பட்டுள்ளன.

மேலும் இங்குள்ள முதலைகள் நன்னீரில் வாழும் தன்மை கொண்டவை. கடல் நீரில் வாழும் தன்மை இவைகளுக்கில்லை. அப்படி கடலுக்கு தப்பிச்சென்றாலும் அந்த சீதோஷ்ன நிலை இவற்றுக்கு ஒத்துவராது. முதலைகள் இறந்துவிடும்.

யாரோ சில விஷமிகள் வீண்வதந்தியை பரப்பி விட்டுள்ளனர். இங்கிருந்து முதலைகள் தப்பிச் செல்ல ஒரு சதவீதம் கூட வாய்ப்பில்லை என்றார் ஜாய் விட்டேகர்.

**மழையால் பாதிக்கப்பட்டோருக்கு நிவாரண உதவி**

மதுராந்தகம் வட்டத்தில் 20-க்கும் மேற்பட்ட கிராமங்களில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரசின் நிவாரண நிதி அண்மையில் வழங்கப்பட்டது.

மதுராந்தகம் வட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு மதுராந்தகம் தொகுதி எம்எல்ஏ கணிதா சம்பத் தலைமை வகித்தார். மதுராந்தகம் வட்டாட்சியர் ஜெயதீபன் வரவேற்றார்.

இதில் மழையால் வீடுகள், கால்நடை இழந்தவர்களுக்கும், பல்வேறு வகையில் பாதிக்கப்பட்டோருக்கும் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டது. ரூ.14,35,700 தொகை நிவாரண உதவிகளாக வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் வருவாய் ஆய்வாளர் ராமலிங்கம், கணேசன், கிராம நிர்வாக அலுவலர் அன்புக்கரசி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

வெள்ளாரை பகுதியில் 150 ஏக்கர் பரப்பில் பயிர்கள் சேதம்



தொடர் மழை காரணமாக குண்டுபெரும்புதூர் ஏரியில் இருந்து வெளியேறும் உபரிநீரால் வெள்ளாரை பகுதியில் பயிரிடப்பட்டுள்ள சுமார் 150 ஏக்கர் பரப்பளவிலான நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியம் கொளத்தூர் ஊராட்சிக்கு உள்பட்ட வெள்ளாரை கிராமத்தில் சுமார் 500 ஏக்கர் பரப்பளவிலான விவசாய நிலம் உள்ளது. இந்தப் பகுதியில் தற்போது சுமார் 300 ஏக்கர் பரப்பளவில் விவசாயம் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் கடந்த சில நாள்களாக பெய்த பலத்த மழையால் குண்டுபெரும்புதூர் ஏரி நிரம்பியது.

இதையடுத்து அதிலிருந்து வெளியேற்றப்பட்ட உபரிநீர் வெள்ளாரை வயல்வெளிகள் வழியாகச் சென்று மணிமங்கலம் ஏரியில் கலக்கிறது. வெளியேறும்போது 5 அடி உயரத்துக்கு மழைநீர் சென்றதால், வெள்ளாரை பகுதியில் பயிரிடப்பட்டுள்ள நெல் வயல்களில் சுமார் 150 ஏக்கர் பரப்பளவிலான நெற்பயிர்கள் முற்றிலும் சேதமடைந்தன. மேலும் கடந்த சில நாள்களாக மழையின்றி வெயில் காய்ந்த போதிலும் வயல்வெளியில் தேங்கியுள்ள மழைநீர் வடியாததால் நீரில் மூழ்கிய நெற்பயிர்கள் அழுகத்தொடங்கியுள்ளன. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

தொடர் மழை காரணமாக குண்டுபெரும்புதூர் ஏரியில் இருந்து வெளியேறும் உபரிநீரால் வெள்ளாரை பகுதியில் பயிரிடப்பட்டுள்ள சுமார் 150 ஏக்கர் பரப்பளவிலான நெற்பயிர்கள் நீரில் மூழ்கின. ஸ்ரீபெரும்புதூர் ஒன்றியம் கொளத்தூர் ஊராட்சிக்கு உள்பட்ட வெள்ளாரை கிராமத்தில் சுமார் 500 ஏக்கர் பரப்பளவிலான விவசாய நிலம் உள்ளது. இந்தப் பகுதியில் தற்போது சுமார் 300 ஏக்கர் பரப்பளவில் விவசாயம் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் கடந்த சில நாள்களாக பெய்த பலத்த மழையால் குண்டுபெரும்புதூர் ஏரி நிரம்பியது.

இதையடுத்து அதிலிருந்து வெளியேற்றப்பட்ட உபரிநீர் வெள்ளாரை வயல்வெளிகள் வழியாகச் சென்று மணிமங்கலம் ஏரியில் கலக்கிறது. வெளியேறும்போது 5 அடி உயரத்துக்கு மழைநீர் சென்றதால், வெள்ளாரை பகுதியில் பயிரிடப்பட்டுள்ள நெல் வயல்களில் சுமார் 150 ஏக்கர் பரப்பளவிலான நெற்பயிர்கள் முற்றிலும் சேதமடைந்தன. மேலும் கடந்த சில நாள்களாக மழையின்றி வெயில் காய்ந்த போதிலும் வயல்வெளியில் தேங்கியுள்ள மழைநீர் வடியாததால் நீரில் மூழ்கிய நெற்பயிர்கள் அழுகத்தொடங்கியுள்ளன. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**காய்ச்சலைத் தடுக்கும் நில வேம்பு குடிநீர்: கோவையில் 53 இடங்களில் வழங்கப்படுகிறது**

உடலின் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து காய்ச்சல், தொற்று நோய்கள் வராமல் தடுக்கும் நில வேம்பு குடிநீர் கோவை மாவட்டத்தில் 53 அரசு சித்த மருத்துவமனைகளில் வழங்கப்படுகின்றன.

மழைக் காலங்களில் ஏற்படும் டெங்கு உள்ளிட்ட காய்ச்சல், தொற்று நோய்கள் போன்றவற்றைக் கட்டுப்படுத்த தமிழகம் முழுவதிலும் உள்ள அரசு மருத்துவமனை சித்த மருத்துவப் பிரிவுகளில் நில வேம்பு கஷாயத்தை பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, கோவை மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு சித்த மருத்துவ பிரிவுகளிலும் புதன்கிழமை தொடங்கி வரும் 29-ஆம் தேதி வரையிலும் நில வேம்பு குடிநீர் வழங்கும் சிறப்பு முகாமிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைந்துள்ள சித்த மருத்துவப் பிரிவில் இந்த சிறப்பு முகாமை புதன்கிழமை தொடங்கி வைத்து ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் கூறியது:

தமிழக முதல்வரின் ஆணைப்படி, மக்களுக்கு காய்ச்சல், நோய்த் தொற்று ஏற்படாமல் கட்டுப்படுத்தவும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் அரசு மருத்துவமனைகள், வட்டார மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மழைக் கால சிறப்பு மருத்துவ முகாம்களில் 5 நாள்களுக்கு நில வேம்பு குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

கோவை மாவட்டத்தில் உள்ள 53 அரசு சித்த மருத்துவப் பிரிவுகளில் நில வேம்பு குடிநீர் பொதுமக்களுக்கு வழங்கப்படும்.

இந்தக் குடிநீரை பெரியவர்கள் 30 மில்லி முதல் 50 மில்லி வரையும் 1 முதல் 12 வயது வரை உள்ள குழந்தைகள் 10 மில்லி வரையும் தினசரி 5

நாள்களுக்கு அருந்த வேண்டும். மாவட்டத்தில் உள்ள அனைத்து பொதுமக்களும் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டு நில வேம்பு குடிநீரை பருகி நோய்களிலிருந்து தங்களை காத்துக் கொள்ள வேண்டும் என்றார்.

இதேபோல், பெரியநாயக்கன்பாளையம் அரசு மருத்துவமனையில் நிலவேம்புக் குடிநீரை சித்த மருத்துவர் சிவராமகிருஷ்ணன் பொதுமக்களுக்கு வழங்கினார்.

**பவானிசாகர் அணைக்கரையை அழகுபடுத்தும் பணி தீவிரம்**

பவானிசாகர் அணையின் நீர்ப்பிடிப்புப் பகுதி அணைக்கரையில் உள்ள புல், செடிகளை அகற்றி அழகுபடுத்தும் பணி நடைபெற்று வருகிறது.

ஈரோடு மாவட்டத்தின் முக்கிய நீராதாரமாக உள்ள பவானிசாகர் அணையில் நீர்மட்ட கொள்ளளவு 120 அடியாகும். இங்குள்ள அணைப் பூங்காவுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியில் உள்ள 8 கி.மீ. நீளமுள்ள அணைக்கரையில் படர்ந்துள்ள புல், செடிகளை அகற்றி அழகுபடுத்தும் பணி நடைபெற்று வருகிறது. 100 நாள் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் தொட்டம்பாளையம், கோடேபாளையம், அம்மாபாளையம், வெள்ளாளபாளையம், தொப்பம்பாளையம் உள்ளிட்ட 5 கிராமங்களைச் சேர்ந்த 95 ஊழியர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். தற்போது, மழை பெய்து வருவதால் அணைக்கரையில் கொரியன் புல் வைக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

**தொடர் மழை: நெற்பயிர்கள் சேதம்**

தொடர் மழை காரணமாக, கோபி அருகே டி.என்.பாளையம் ஒன்றியம், நன்செய் புளியம்பட்டி ஊராட்சிப் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலப்பரப்பில் சாகுபடி செய்யப்பட்ட நெற்பயிர்கள் சேதமடைந்தன.

நன்செய் புளியம்பட்டி ஊராட்சி பகுதியில் 500-க்கும் மேற்பட்ட ஹெக்டேரில் பயிரிடப்பட்ட நெற்பயிர் தற்போது அறுவடைக்கு வந்துள்ளன. அடுத்த, 15 நாள்களில் அறுவடை செய்வதற்கு விவசாயிகள் தயாராக இருந்தனர்.

இந்நிலையில், டி.என்.பாளையம் பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வந்ததால், நெல் வயல்களில் நீர் தேங்கியது. விவசாயிகள் வயல் ஓரங்களில் தனி வடிகால் அமைத்து மழை நீரை வெளியேற்றினர். தினமும் விட்டு விட்டு மழை பெய்ததால் பயிர் அழுகி தண்டுப் பகுதி வலுவிழந்து கதிர்களை தாங்கி நிற்க முடியாமல் சாய்ந்து விட்டன.

இதுகுறித்து, விவசாயிகள் கூறியதாவது: இந்த ஆண்டு நெல்லில் போதிய லாபம் கிடைக்காது. மழையால் உற்பத்தி செலவு அதிகமாகிவிட்டது. அதே நேரத்தில் மகசூலும் குறைந்துள்ளது. தற்போது மழையால் பெரும்பகுதி நெற்பயிர்கள் சாய்ந்து விட்டன. சில நாள்களில் அவற்றில் முளைப்பு வந்துவிடும். இனிமேலும் மழை தொடர்ந்தால் ஆயிரக்கணக்கான ஹெக்டேர் நெற்பயிர்கள் மேலும் பாதிக்கப்படும். நெற்பயிரை அறுவடை செய்தாலும் ஈரத் தன்மையுள்ள புல்லும் விற்பனையாகாது என்றனர்.

**தொடர் மழை: மலர்ச் செடிகள் பாதிப்பு**

குன்னூரில் பரவலாக மழை பெய்து வருவதால் பூங்காக்களில் உள்ள மலர்ச் செடிகள் அழுகி வருகின்றன.

குன்னூர் சுற்று வட்டாரப் பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருவதால் மலைத் தோட்டக் காய்கறி பயிர்கள் அழுகத் துவங்கி உள்ளன. இதனால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

மேலும், 2-ஆவது சீசனையொட்டி குன்னூர் சிம்ஸ்பூங்காவில் நடவு செய்யப்பட்டிருந்த மலர்கள் அனைத்தும் பூத்துக் குலுங்கி வந்த

நிலையில், தொடர் மழை காரணமாக மலர்ச் செடிகள் அழுகி வருகின்றன. இதனால், சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

தினகரன்

**தண்ணீர் வரத்து அதிகரிப்பால் மேட்டூர் அணை நீர்மட்டம் 90 அடியை எட்டியது**




மேட்டூர்: மேட்டூர் அணையில் இருந்து ஆண்டுதோறும் ஜூன் மாதம் 12ம் தேதி காவிரி டெல்டா பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்படும். இந்த ஆண்டில் தண்ணீர் இருப்பு இல்லாததால் ஆகஸ்ட் மாதம் 10ம் தேதி காவிரி டெல்டா பாசனத்திற்காக அணை திறக்கப்பட்டது. கடந்த சில

மாதங்களாக அணையின் நீர்மட்டம் சரிந்து வந்தது. இதையடுத்து டெல்டா பாசனத்திற்காக திறக்கப்பட்ட தண்ணீர், வினாடிக்கு 500 கனஅடியாக குறைக்கப்பட்டது. இந்நிலையில் வட கிழக்கு பருவமழையின் காரணமாகவும், காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளிலிருந்து நீர்வரத்து அதிகரித்ததன் காரணமாகவும், வரத்தைவிட திறப்பு குறைவாக இருந்ததாலும் அணையின் நீர்மட்டம் படிபடியாக உயர்ந்து வந்தது.

நேற்று மதியம் 12 மணிக்கு இந்த பாசன ஆண்டில் 2வது முறையாக அணையின் நீர்மட்டம் 90 அடியை எட்டியுள்ளது. நேற்று முன்தினம் வினாடிக்கு 9234 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று காலை வினாடிக்கு 7915 கனஅடியாக குறைந்ததுதற்போது அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு 500 கனஅடியும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்கு 300 கனஅடியும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. ஒகேனக்கல் மெயின் அருவியில் 22 நாட்களுக்கு பின்னர் குளிப்பதற்கான தடை நேற்று முன்தினம் விலக்கி கொள்ளப்பட்டுள்ளது. ஆனால், பரிசல் இயக்க தொடர்ந்து தடை நீடிக்கிறது.

**மழைக்கால தொற்றுநோயை கட்டுப்படுத்த 1061 இடங்களில் நிலவேம்பு குடிநீர்**




சென்னை: தண்டையார்பேட்டை புறநகர் மருத்தவமனையில் நிலவேம்பு குடிநீர் மையத்தை அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர் துவக்கி வைத்து பொதுமக்களுக்கு நிலவேம்பு குடிநீரை வழங்கினார். அப்போது, அவர் பேசியதாவது: மழைக்காலத்தில் தொற்று நோய்களை கட்டுப்படுத்திட மாவட்ட தலைமை மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள், வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்களில் சித்த மருத்துவ பிரிவின் மூலம் தமிழ்நாடு முழுவதும் 1061 இடங்களில் இன்று முதல் 5 நாட்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கப்படுகிறது. அனைத்து பொதுமக்களும் தங்கள் அருகில் உள்ள அரசு சித்த மருத்துவப் பிரிவுகள் மற்றும் மழைக்கால சிறப்பு முகாம்களில் நிலவேம்பு குடிநீரை இலவசமாக பருகி காய்ச்சல்கள் மற்றும் தொற்று நோய்களிலிருந்து தங்களை தற்காத்துக் கொள்ளலாம் என்றார்.

**பருவமழைக்கு பலியானவர் குடும்பத்திற்கு ரூ.4 லட்சம் : ஜெயலலிதா அறிவிப்பு**




சென்னை: பருவ மழை பாதிப்பில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ரூ.4 லட்சம் வழங்கி முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார். தமிழக முதல்வர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: வடகிழக்கு பருவமழை காரணமாக சென்னை, பட்டாளத்தை சேர்ந்த ராஜி என்பவர், வீட்டு சுவர் இடிந்து விழுந்ததில் உயிரிழந்தார். அவரது குடும்பத்துக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். உயிரிழந்தவரின் குடும்பம்பத்துக்கு ரூ.4 லட்சம் பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உடனடியாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**அந்தமான் அருகே காற்றழுத்தம் நாளை முதல் 4 நாட்களுக்கு கனமழை**



சென்னை: வங்கக் கடலில் ெதற்கு அந்தமான் அருகே புதிய காற்றழுத்தம் நிலை உருவாகியுள்ளது. எனவே, நாளை முதல் தமிழக கடலோர மாவட்டங்களில் பலத்த மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்தியப் பெருங்கடல் பகுதியில் அந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை மையம் கொண்டு இருந்ததால் தென் மாவட்டங்களில் கனமழை கொட்டி பெருத்த வெள்ள பாதிப்பு ஏற்பட்டது. அந்த குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை தற்போது வலுவிழந்து மறைந்தது. இருப்பினும் தமிழகத்தில் அனேக இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்தது. அதிகபட்சமாக அம்பாசமுத்திரத்தில் 240 மிமீ மழை பெய்துள்ளது. பாபநாசம் 100 மிமீ, மணிமுத்தாறு, மண்டபம் 30 மிமீ, திருச்செந்தூர், அறந்தாங்கி 20 மிமீ, ராமேஸ்வரம், சேரன்மாதேவி, குன்னூர் 10 மிமீ மழை பெய்துள்ளது.

இந்நிலையில், தென் கிழக்கு வங்கக் கடலில் இலங்கை அருகே நேற்று முன்தினம் மேலடுக்கு சுழற்சி உருவானது. அது நேற்று மேலும் வலுப்பெற்று குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலையாக மாறியது. இன்று அது குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக மாறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு பிறகு அது வடக்கு அல்லது வட மேற்கு திசையில் நகர்ந்து வந்தால் தமிழக கடலோரப் பகுதியில் நாளை முதல் 4 நாட்களுக்கு பலத்த மழை பெய்யும். சில இடங்களில் பலத்த கனமழை பெய்யும். சென்னையில் இன்று பொதுவாக மேகமூட்டம் காணப்படும். மாலை நேரத்தில் மழை பெய்யும். சென்னையில் நேற்று மழை பெய்யவில்லை. மாறாக வெயில் நன்றாக அடித்தது. மாலையில் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. ஆனாலும் புறநகர் பகுதிகளில் வெள்ள நீர் வடியாததால், மக்கள் தொடர்ந்து அவதியுற்று வருகின்றனர்.

**பூ விலை 2 மடங்காக உயர்வு**



சென்னை: சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு திருவள்ளூர் மாவட்டத்தின் ஊத்துக்கோட்டை, ஆரம்பாக்கம், திண்டுக்கல் மாவட்டத்தின் நிலக்கோட்டை, அதனை சுற்றியுள்ள பகுதிகள், ஓசூர், கிருஷ்ணகிரி சேலம், ஆந்திரமாநிலம் கடப்பா ஆகிய பகுதிகளில் இருந்து பூக்கள் கொண்டு வரப்படுகிறது. கடந்த சில நாட்களாக பெய்த தொடர் மழையால், கோயம்பேடு மார்க்கெட்டில் பூ வியாபாரம் மந்தமாக இருந்தது.

நேற்று முன்தினம் மழை நின்றது. இதனால், பூக்களின் வரத்து கொஞ்சம் கொஞ்சமாக தொடங்கியுள்ளது. மேலும், நேற்று கார்த்திகை தீபம் என்பதால், பூக்களின் விலை 2 மடங்காக விற்பனை செய்யப்பட்டது. கிலோ வீதத்தில் விலை விவரம்.

**பருவநிலை பாதிப்பு இந்தியாவுக்கு அதிகம்**



புதுடெல்லி: பருவநிலையால் மிக அதிக பாதிப்பை அடைந்தவை இந்தியாவும், சீனாவும்தான் என்று ஐ.நா தெரிவித்துள்ளது. கடந்த 1995 முதல் 2015 வரை இந்த இரு நாடுகளிலும் 300 கோடிக்கும் மேற்பட்டோர் பருவநிலையால் பாதிப்பு அடைந்துள்ளனர். உலக அளவில் பருவநிலைகளால் சுமார் 410 கோடி பேர் பாதிப்பு அடைந்துள்ளனர். இந்தியாவில் 80.5 கோடி பேரும், சீனாவில் 227.4 கோடி பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்தியாவில் 288 பருவநிலை சீற்றங்கள் கடந்த 20 ஆண்டில் நிகழ்ந்துள்ளன. இதில் இந்தியா மூன்றாம் இடத்தில் உள்ளது. பாரீசில் வரும் 30ம் தேதி நடைபெற உள்ள மாநாட்டையொட்டி இந்த ஆய்வறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தி இந்து

தமிழால் இணைவோம்

## 4-வது நாளாக வெள்ளம் வடியவில்லை: தொற்று நோய் பரவும் அபாய நிலையில் தூத்துக்குடி



தூத்துக்குடியில் பல இடங்களில் குடியிருப்புகளை 22-ம் தேதி முதல் 4-வது நாளாக மழை வெள்ளம் சூழ்ந்து நிற்பதால் தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டத்தில் கடந்த வாரம் பெய்த பலத்த மழை காரணமாக 22-ம் தேதி முத்தம்மாள் காலனி, ஆதிபராசக்தி நகர், தாமோதரன் நகர், ஐயப்பன் நகர், அந்தோணியார்புரம், அத்திமரப்பட்டி, காலாங்கரை, வீரநாயக்கன்தட்டு, முத்தையா புரம், முள்ளக்காடு, முடுக்குகாடு, திருவிக நகர், இந்திரா நகர், தபால் தந்தி காலனி பகுதிகளில் குடியிருப்புகளை வெள்ளம் சூழ்ந்தது.

வெள்ளம் முழுமையாக வடிவதற்குள் கடந்த 22-ம் தேதி இரவு பெய்த பலத்த மழையால் 23-ம் தேதி அதிகாலையில் காட்டாற்று வெள்ளம் ஏற்பட்டது. இதனால் இந்த பகுதிகள் மீண்டும் வெள்ளத்தில் தத்தளித்தன.

காட்டாற்று வெள்ளம் நின்று 2 நாட்களாகியும் பல பகுதிகளில் வெள்ளம் வடியவில்லை. புறநகர் பகுதிகளில் தேங்கிய மழை வெள்ளம் அனைத்தும் நகர்ப்பகுதிக்குள் புகுந்தது. இதனால் 3-ம் மைல், பசும்பொன் நகர், முருகேசன் நகர், திரவியரத்தினம் நகர், மடத்தூர், ராஜீவ் நகர், சாந்தி நிகிலேசன் நகர், புஷ்பா நகர், கதிர்வேல் நகர், கணேஷ்நகர், மில்லர்புரம், அன்னை தெரசா நகர், ராஜகோபால் நகர், பால்பாண்டி நகர், அண்ணாநகர், குறிஞ்சி நகர், ஸ்டேட் பேங்க் காலனி பகுதிகளில் வீடுகளை சூழ்ந்து இடுப்பளவுக்கு மேல் தண்ணீர் தேங்கியுள்ளது.

நாய், பன்றி போன்றவை இறந்து மிதப்பதாலும், குப்பைக் கூழங்கள், சாக்கடை கலந்திருப்பதாலும் பல இடங்களில் துர்நாற்றம் வீசுகிறது. இதனால் தொற்று நோய்கள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இடுப்பளவுக்கு மேல் நிற்கும் தண்ணீரை கடந்து வெளியே வரமுடியாமல் மக்கள் வீடுகளுக்கு உள்ளேயே முடங்கி கிடக்கின்றனர். சிறப்பு நிவாரண முகாம்களில் உள்ள மக்களும் வீடுகளுக்கு திரும்ப முடியவில்லை.

தூத்துக்குடி மாநகரம் பூகோள ரீதியாக கடல் மட்டத்தைவிட சற்று தாழ்வாக இருப்பதால் மழைநீர் வேகமாக வடிந்து கடலுக்கு செல்ல

முடியாமல் ஆங்காங்கே தேங்கி நிற்கிறது. மழை நீரை வெளியேற்றும் பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

தண்ணீர் முழுமையாக வடிய மேலும் சில நாட்கள் ஆகும். மீண்டும் மழை பெய்தால் நிலைமை இதைவிட மோசமாகிவிடும் என, அதிகாரிகள் தெரிவித்தனர்.

நிலவேம்பு குடிநீர் விநியோகம் தமிழகம் முழுவதும் தொடங்கியது



தமிழகம் முழுவதும் 1,061 சித்த மருத்துவப் பிரிவுகளில் 5 நாட் களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கும் பணி நேற்று தொடங்கியது.

தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகள், மாவட்ட தலைமை மருத் துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனை களில் 1,061 சித்த மருத்துவப் பிரிவு கள் செயல்படுகின்றன. பொது மக்களுக்கு மழைக் காலங் களில் ஏற்படும் காய்ச்சல், தொற்று நோய்களை கட்டுப்படுத்த முன்னெச் சரிக்கை நடவடிக்கையாக அனைத்து சித்த மருத்துவப் பிரிவு களிலும் 5 நாட்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, சென்னை தண்டை யார்பேட்டை புறநகர் மருத் துவமனையில் நிலவேம்பு குடிநீர் மையத்தை அமைச்சர் சி.விஜய பாஸ்கர் நேற்று

தொடங்கிவைத்து பொதுமக்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கினார். அப்போது அமைச்சர் பேசியதாவது:

தொற்று நோய்களை குணப்படுத்த நிலவேம்பு குடிநீர், பப்பாளி இலைச்சாறு ஆகியவற்றை பொதுமக்களுக்கு வழங்க முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார். அதன்படி, சித்த மருத்துவத் துறை சார்பில் 9 வகையான மூலிகைகள் கலந்த நிலவேம்பு குடிநீர் தமிழகம் முழுவதும் அரசு மருத்துவமனைகளில் வழங்கப்பட்டு வருகிறது. மழைக் காலத்தில் தொற்றுநோய்களை கட்டுப்படுத்த தமிழகம் முழுவதும் 1,061 சித்த மருத்துவப் பிரிவுகளில் 5 நாட்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கப்படும். இதன்மூலம் தினமும் சுமார் 1.20 லட்சம் பேர் பயன்பெறுவர். தொற்று நோய்கள் பரவுவது கட்டுப்படுத்தப்படும்.

பொதுமக்கள் தங்கள் பகுதியில் உள்ள அரசு சித்த மருத்துவப் பிரிவுகள் மற்றும் மழைக்கால சிறப்பு முகாம்களில் நிலவேம்பு குடிநீரை இலவசமாக பருகி காய்ச்சல், தொற்று நோய்களிலிருந்து தங்களை தற்காத்துக் கொள்ளலாம்.

இவ்வாறு அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் சுகாதாரத்துறை செயலாளர் ஜெ.ராதாகிருஷ்ணன், அரசு ஸ்டான்லி மருத்துவமனை டீன் ஐசக் கிறிஸ்டியன் மோசஸ், சென்னை அரும்பாக்கம் அரசு சித்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனை டாக்டரும், தமிழ்நாடு சித்த மருத்துவ அலுவலர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவருமான டாக்டர் எம்.பிச்சையா குமார் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

## தமிழகத்தில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில்_ மத்திய குழுவினர் இன்று ஆய்வு



தமிழகத்தில் வெள்ளம் பாதித்த பகுதிகளை மத்திய குழுவினர் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்கின்றனர்.

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர் மாவட்டங் களிலும், புதுச்சேரியிலும் 2 நாட்கள் இந்த ஆய்வு மேற் கொள்ளப்படுகிறது. சமீபத்தில் பெய்த வடகிழக்கு பருவமழை யால் தமிழகத்தின் கடலோர மாவட்டங்களில் வெள்ள பாதிப்பு ஏற்பட்டது. குறிப்பாக கடலூர், சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்கள் கடுமையான பாதிப்புக்குள்ளாகின. புதுச்சேரியும் மழை சேதத்திலிருந்து தப்பவில்லை.

தமிழக அரசு சார்பில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உடனடி சீரமைப்புப் பணிகளுக்காக ரூ.500 கோடி ஒதுக்கி முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார். மேலும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மூத்த ஐஏஎஸ் அதிகாரிகள் ஆய்வு செய்து சேத விபரங்கள் குறித்த அறிக்கையை அரசிடம் சமர்ப்பித்தனர்.

இந்த அறிக்கையின் அடிப்படையில் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக ரூ.8,481 கோடி தேவைப்படுவதாகவும் இதில் ரூ.2 ஆயிரம் கோடியை உடனடியாக வழங்க வேண்டும் எனவும் கேட்டு பிரதமர் நரேந்திர

மோடிக்கு முதல்வர் ஜெயலலிதா கடிதம் எழுதியிருந்தார். தமிழக வெள்ள சேதங்களை ஆய்வு செய்ய மத்திய குழுவை உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும் எனவும் கோரியிருந்தார்.

முதல்வரின் கோரிக்கையை ஏற்று தமிழகத்துக்கு உடனடி நிவாரணத் தொகையாக ரூ.939 கோடியே 63 லட்சத்தை ஒதுக்கீடு செய்து பிரதமர் நரேந்திர மோடி உத்தரவிட்டார். மேலும் வெள்ள சேத விபரங்களை ஆய்வு செய்ய ஒரு குழுவை தமிழகத்துக்கு அனுப்பி வைப்பதாக நேற்று முன்தினம் மத்திய அரசு அறிவித்தது.

மத்திய உள்துறை அமைச்ச கத்தின் இணை செயலாளர் டி.வி.எஸ்.என்.பிரசாத் தலைமையில் விவசாயம், ஊரக வளர்ச்சி, குடிநீர் மற்றும் எரிசக்தி துறை அதிகாரிகள், சென்னையில் உள்ள தேசிய நெடுஞ்சாலை, சாலை போக்குவரத்து, சுகாதாரத்துறை பிரதிநிதிகள், பெங்களூருவில் உள்ள மத்திய நீர்வளத் துறை பிரதிநிதி ஆகியோர் இந்தக் குழுவில் இடம்பெறுவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவினர் தமிழகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை இன்று பார்வையிட்டு ஆய்வு செய்ய உள்ளனர். அவர்களுடன் தமிழக அரசு அதிகாரிகளும் செல்கின்றனர்.

இந்தக் குழுவினர் தமிழகத்தில் 2 நாட்கள் ஆய்வு செய்து, சேத விவரங்களை மத்திய அரசுக்கு அனுப்பி வைப்பார்கள் என கூறப்படுகிறது.

விகடன்

**'தமிழகத்தில் மீண்டும் 3 நாட்களுக்கு கனமழை பெய்யும்!'**

**சென்னை:** தமிழக கடலோர மாவட்டங்களில் 27 முதல் 29-ம் தேதி வரை 3 நாட்கள் கனமழை பெய்யும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரி ரமணன் கூறுகையில், " வங்க கடலின் தென் மேற்கில் நேற்று உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி வலுவிழந்து விட்டது. மேலும், கடந்த இரண்டு நாட்களாக தெற்கு அந்தமான் கடலில் மேலடுக்கு சுழற்சி நிலவி வருகிறது. இதனால், தமிழகத்தில் ஒருசில இடங்களில் மழை பெய்து வருகிறது.

இந்நிலையில், இந்த மேலடுக்கு சுழற்சி அடுத்த 48 மணி நேரத்தில் (27-ம் தேதி) குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக மாறும். இதனால் வரும் 27, 28, 29 ஆகிய மூன்று நாட்களுக்கும் சென்னை உள்பட தமிழகம் மற்றும் ஆந்திர கடலோர மாவட்டங்களில் கனமழையும், மிக கனமழையும் பெய்யும்" என்றார்.

**'முதலைகள் பத்திரமாக இருக்கின்றன... வதந்தியை நம்ப வேண்டாம்!- முதலை பண்ணை நிர்வாகம்**

**சென்னை:** "எங்கள் பண்ணையிலிருந்து எந்த முதலைகளும் தப்பிச் செல்லவில்லை. முதலை தப்பியதாக சொல்லப்படும் தகவல் யாரோ

கிளப்பி விட்ட வதந்தி. அதை யாரும் நம்ப வேண்டாம்" என்று சென்னை முதலை பண்ணை நிர்வாகம் சார்பில் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.



வெள்ளத்தில் சிக்கி விழிப்பிதுங்கி நிற்கும் சென்னை, காஞ்சிபுரம் மாவட்ட மக்களுக்கு, மேலும் ஒரு அதிர்ச்சியாக வந்தது அந்த வாட்ஸ்அப் தகவல். கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள முதலை பண்ணையிலிருந்து 20 முதலைகள் தப்பி விட்டது என்பதுதான் அந்த தகவல். இது வைரலாக பரவியது. தப்பிய முதலைகள் வேளச்சேரி, மேடவாக்கம், சோழிங்கநல்லூர், பெரும்பாக்கம், கிழக்கு கடற்கரை சாலை, ஓ.எம்.ஆர் பகுதிகளில் வர வாய்ப்புள்ளதாகவும் குறிப்பிடப்பட்டு இருந்தது. இதனால் இந்த பகுதி மக்கள் பீதியில் உறைந்தனர். சில சேனல்களில் இதுதொடர்பாக செய்தியும் ஒளிபரப்பப்பட்டது.

ஆனால் இந்த தகவலை முற்றிலும் மறுத்துள்ளார் சென்னை முதலை பண்ணையின் இயக்குனர் நிகில்.

அவரை செல்போனில் தொடர்பு கொண்டு பேசினோம். "எங்கள் பண்ணையில் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முதலைகள் உள்ளன. அவைகளை பராமரிக்கவும், கண்காணிக்கவும் போதிய அளவில் ஊழியர்கள் உள்ளனர். இதனால் எங்கள் பண்ணையிலிருந்து எந்த முதலைகளும் தப்பிச் செல்லவில்லை. முதலை தப்பியதாக சொல்லப்படும் தகவல் யாரோ கிளப்பி விட்ட வதந்தி. அதை யாரும் நம்ப வேண்டாம். ஒவ்வொரு மழையின் போதும் இதுபோன்று வதந்திகளை பரப்பி விடுவது சிலருக்கு வாடிக்கையாக உள்ளது" என்றார்.



அதே நேரத்தில் அப்பகுதி மக்கள் கூறுகையில், "கிழக்கு கடற்கரை சாலையில், கோவளத்திலிருந்து 3 கி.மீட்டர் தூரத்தில் இந்த முதலை பண்ணை பல ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. முதலைகளை பார்க்க தினமும் சுற்றுலா பயணிகள் வருவதுண்டு. இந்த பண்ணையில் பாம்புகளும் உள்ளன. பண்ணையை சுற்றி நூற்றுக்கணக்கான குடியிருப்புகளும் இருக்கின்றன.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட மழைவெள்ளத்தை தொடர்ந்து, சோழிங்கநல்லூர் கிராம நெடுஞ்சாலையில் அமைந்துள்ள குளத்தில் முதலை இருப்பதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

அதன்பேரில் அந்த முதலையை வனத்துறையினர் பிடித்தனர். இந்த முதலை எங்கிருந்து வந்தது என்று தெரியவில்லை. முதலையை கண்டு யாரும் பயப்பட வேண்டும். அது நமது முதலாளிகள் என்று பண்ணை தரப்பில் சொல்வதை நாங்கள் கேட்டு இருக்கிறோம்.

அவர்களுக்கு வேண்டும் என்றால் அது முதலாளி. ஆனால் முதலை ஊருக்குள் புகுந்ததால் எல்லோரும் பயம்தான். முதலைகள் வெளியேறாமலிருக்க தகுந்த பாதுகாப்பு வசதிகளை ஏற்படுத்தி இருப்பதாக பண்ணை நிர்வாகம் தரப்பில் சொல்கிறார்கள். முதலை வெளியேறாமல் இருந்தால், எல்லோருக்கும் நிம்மதி. வாட்ஸ்அப்பில் முதலை வெளியேறியதாக ஓர் தகவல் உலாவுகிறது. அதை நம்பவும், நம்பாமலும் இருக்க முடியவில்லை. முதலை பண்ணையையொட்டி உள்ள பகுதி மக்கள் எல்லோரும் இந்த தகவலால் பீதியில் உறைந்து போய் இருக்கிறார்கள்" என்றனர்.

**வானிலையை கணிப்பது எளிது:ரூ.1000 செலவழித்தால் பாமரனும் 'ரமணண்' ஆகலாம்!**

**வா**னிலையை ரமணன் மட்டுமல்ல சாதாரண பாமரனும் கணிக்கலாம் அந்த அளவுக்கு இன்றைய விஞ்ஞான வளர்ச்சி மேலோங்கி இருக்கிறது. இது உங்கள் மொபைல் மற்றும் கணினியில் இணையத்தில் இயங்கும் செயலி அல்ல இந்த கணிப்பு முறை .நேரடியாக செயற்கைக்கோள் வாயிலாக கிடைக்கப்பெறும் படங்களால் என்பதால் கணிப்பும் தவறாக இருக்காது.இதை பெறுவதற்கு சாதாரண கணினி அறிவு போதுமானதே.

**ஆயிரம் ரூபாயில் ஒரு கருவி**

RTL-SDR எனப்படும் ஒரு USB DONGLE மற்றும் ஒரு QHF (Quadrifilar Helix Antennas) ஆன்ட்டனா இரண்டையும் இணைக்க கொஞ்சம் கேபிள் வயர் என மொத்தமே ஆயிரம் ரூபாய்க்குள் தான் செலவாகும். இந்த கருவியானது வெளிநாடுகளில் மிகப்பிரபலம்.இது வானிலைக்கு

மட்டுமல்ல உங்கள் அலுவலக கதவை தொட்டால் உங்க ஸ்மார்ட் போனுக்கு தகவலை சொல்லும் கையில் ஒரு ட்ரில் இயந்திரத்தை இயக்கினால் அதன் வேகம் என்ன? என்பதை சொல்லும் இன்னும் பல பயன்கள் குறித்தும் ஆராய்சிகளும் நடந்துகொண்டு இருக்கின்றன.




ஜெர்மனியில் உள்ள பேருந்துநிறுத்தங்களில் இந்த RTL-SDR கொண்டு எந்த பேருந்து எங்கு வந்து கொண்டு இருக்கிறது.இன்னும் எவ்வளவு நேரத்தில் இந்த பேருந்துநிலையத்தை அடையும் என்பதுவரை கணித்துக்கொண்டு இருக்கிறது.இதில் ஆர்.டி.எல். என்பது அந்த கருவியில் பயன்படுத்தப்படும் பிராஸசர். எஸ்.டி.ஆர் என்றால் software defined radio ஆகும்.

## சாதாரண ரேடியோ போல செயல்பாடு

இப்ப வானிலைக்கு வருவோம் .பொதுவாக நீங்க ரேடியோ பயன்படுத்தி இருப்பீர்கள் ஏன் செல்போன் எப்படி வேலை செய்கிறதோஅதே தொழில்நுட்பம் தான் இது. செல்போன் கோபுரத்தில் இருந்து வரும் ஒலிஅலைகள் எப்படி உங்கள் போன் வாயிலாக செவிகளுக்கு

கேட்க்கிறதோஅதே போல நம் பூமியை சுற்றிவரும் இந்த வானிலை செயற்கைக்கோள்கள்(WXsat)அனுப்பும் ஒலிஅலைகளை QHF ஆன்ட்டனா
ஒயர் வாயிலாக RTL SDR கருவியை அடையும் .அந்த ஒலி அலையை SDR SHARP என்ற செயலி வாயிலாக நீங்கள் நேரடியாக பார்க்கவும் கேட்கவும் செய்யலாம்.வெறும் இரைச்சல் சத்தம் மட்டுமே கேட்க்கும். அந்த ஒலியை VIRTUAL CABLE வாயிலாகWXtoImg என்ற செயலிஒலியை நேரடியாக படமாக
மாற்றித்தரும். WX என்பது WEATHER FAX என்பதை குறிக்கும். அமெரிக்கா ரஷ்யா போன்ற நாடுகள் லியோசர் செயற்கைக்கோள்களை (Low-Earth Orbiting Search And Rescue)அனுப்பியுள்ளனர்.



இந்த லியோசர் என்றால் பூமியை சுற்றிகொண்டே இருக்கும் செயற்கைக்கோள் அதனால் உலகின் எந்த ஒரு நாட்டின் வானிலையையும் இதன் மூலம் அறியலாம்.Gpredict என்ற செயலி உதவியோட இந்த நொடியில் செயற்கைக்கோள் எந்த இடத்தில்

இருக்கிறது என்பதை பார்த்து தரவுகளை பெறலாம்.NOAA,Meteor,போன்றவை பிரபலமான லியோசர் வானிலை செயற்கைக்கோள்கள். இந்த செயற்கைக்கோள்களை யார் வேண்டுமானாலும் பயன்படுத்தலாம்.


**அலைவரிசை எண் தகவல்கள்**

NOAA 15 – 137.6200 MHz

NOAA 18 – 137.9125 MHz

NOAA 19 – 137.1000 MHz

Meteor - 137.100 or 137.900 MHz



இந்தியாவில் கல்பனா 1,இன்சாட் 3D போன்ற ஜியோசர் செயற்கைக்கோள்கள். (Geostationary Earth Orbit Search And Rescue)ஜியோசர் என்றால் பூமி எந்த வேகத்தில் சுற்றுகிறதோ அதே வேகத்தில் இந்த செயற்கைக்கோள்களும் சுற்றும் அதனால்இந்த நொடி நம் நாட்டின் வானிலைவானிலை நிலை என்ன? என்பதை உடனடியாக தெரிந்துகொள்ள முடியும். இவை வானிலை ஆய்வு மையம் மட்டுமே பயன்படுத்த முடியும். மக்களுக்கு அனுமதி கிடையாது.

சென்னை பள்ளிகரணையில் செயல்பட்டுவரும் தென் இந்திய தன்னார்வ வானொலி சமூகம் (Siars) இது குறித்த விழிப்புணர்வு

ஏற்படுத்திவருகிறார்கள். அண்ணா பல்கலைக்கழகத்தில் சில பேராசிரியர்கள் இது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றனர்.

தின நமி

மழைக்கால காய்ச்சலை தடுக்க 1061 இடங்களில் இலவசமாக நிலவேம்பு குடிநீர்: விஜயபாஸ்கர் தகவல்



சென்னை: முதல்வர் ஜெயலலீதா ஆணைக்கிணங்கமழைக்காலங்களில் ஏற்படும் காய்ச்சல் மற்றும் தொற்று நோய்களை கட்டுப்படுத்த தமிழ்நாடு முழுவதும் அனைத்து அரசு சித்த மருத்துவ பிரிவுகளிலும் 1061 இடங்களில் 25.ம்தேதி முதல் 29 ம்தேதி வரை நிலவேம்பு குடிநீரை

இலவசமாக வழங்க ஏற்பாடு! செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் தெரிவித்துள்ளார். முதலமைச்சர் ஜெயலலிதாவின் ஆணைப்படி, பொதுமக்களுக்கு மழைக்காலங்களில் ஏற்படும் காய்ச்சல் மற்றும் தொற்று நோய்களை கட்டுப்படுத்த மாவட்ட தலைமை மருத்துவமனைகள், அரசு மருத்துவமனைகள், வட்டம் மற்றும் வட்டம் சாரா மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் மழைக்கால சிறப்பு மருத்துவ முகாம்களில் சித்த மருத்துவ பிரிவின் மூலம் தமிழ்நாடு முழுவதும் 1061 இடங்களில் 25.ம்தேதி முதல் 29.ம்தேதி வரை 5 நாட்களுக்கு பொதுமக்களுக்கு நில வேம்பு குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

9 வகையான மூலிகை கலந்த நிலவேம்பு குடிநீர் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரித்து காய்ச்சல் மற்றும் தொற்று நோய்கள் வராமல் தடுக்கிறது. பெரியவர்கள் 30 மி.லி முதல் 50 மி.லி வரையும், 1 முதல் 12 வயது வரை உள்ளவர்கள் 10 மி.லி வரையும் 5 நாட்களுக்கு தினசரி அருந்த வேண்டும்.

அனைத்து பொதுமக்களும் தங்கள் அருகில் உள்ள அரசு சித்த மருத்துவப் பிரிவுகள் மற்றும் மழைக்கால சிறப்பு முகாம்களில் நிலவேம்பு குடிநீரை இலவசமாக பருகி காய்ச்சல்கள் மற்றும் தொற்று நோய்களிலிருந்து தங்களை தற்காத்துக் கொள்ளுமாறு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**புதிய காற்றழுத்தத் தாழ்வுநிலை: தமிழகத்தில் இன்றும் - நாளையும் மழை**



சென்னை: வங்கக் கடலில் தெற்கு அந்தமான் பகுதியில் இன்று புதிய காற்றழுத்தத் தாழ்வு உருவாக வாய்ப்பிருப்பதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ள நிலையில் இன்றும், நாளையும் கனமழை பெய்யும் என்று தெரிகிறது. தமிழகத்தில் கடந்த மாதம் ஆரம்பித்த வடகிழக்கு பருவமழை காரணமாக மழை கொட்டி கொண்டிருக்கும் நிலையில், தற்பொழுது புதிய காற்றழுத்த தாழ்வுநிலை காரணமாக இரு நாட்களுக்கு மழையும் அடுத்த 2 நாட்களுக்கு கன மழையையும் எதிர்பார்க்கலாம் என்று சென்னை வானிலை மைய இயக்குனர் ரமணன் கூறியுள்ளார். இதுகுறித்து அவர் அளித்த பேட்டியின் போது கூறுகையில்,

தெற்கு அந்தமான் கடல் பகுதியில் இன்று ஒரு குறைந்த காற்றழுத்தத் தாழ்வு நிலை உருவாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இது உருவாகும்பட்சத்தில் 26, 27 (இன்றும் - நாளையும்) ஆகிய தேதிகளில் நல்ல மழையை எதிர்பார்க்க முடியும். மேலும் 29,30 ஆகிய தேதிகளில் கன மழையையும் எதிர்பார்க்கலாம். சென்னையைப் பொறுத்தவரை 25ம் தேதி முதல் இரு நாட்களுக்கு மழை இருக்க வாய்ப்பில்லை. வானம் தெளிவாக காணப்படும். வரும் நாட்களில், புதிய காற்றழுத்தத் தாழ்வு நிலையின் போக்கைப் பொறுத்து மழையை எதிர்பார்க்கலாம் என அவர் கூறியுள்ளார்.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

# மேட்டூர் அணை நீர்மட்டம் 90 அடியை தாண்டியது



மேட்டூர், நவ. 26–

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையின் தீவிரம் குறைந்துள்ளதால் மேட்டூர் அணைக்கு நீரின் வரத்து குறைந்துள்ளது. எனினும், நீர்வரத்தை விட, டெல்டா பாசனத்திற்காக அணையில் இருந்து திறந்து விடப்படும் நீரின் அளவு குறைவாக இருப்பதால் அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து வருகிறது.

இதனால் நேற்று அணையின் நீர்மட்டம் 90 அடியை எட்டியது. இன்று காலை 90 அடியை தாண்டி, அணையின் நீர்மட்டம் 90.32 அடியாக உயர்ந்துள்ளது.

இன்று காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு விநாடிக்கு 6240 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. டெல்டா பாசனத்திற்காக

விநாடிக்கு 500 கன அடி தண்ணீரும், மேற்கு, கிழக்கு கால்வாய் பாசனத்திற்கு விநாடிக்கு 500 கன அடி தண்ணீரும் திறந்து விடப்பட்டுள்ளது. மொத்தம் அணையில் இருந்து விநாடிக்கு 1000 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

வருகிற 2016–ம் ஆண்டு ஜனவரி 28–ந்தேதி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் அளிக்கப்பட வேண்டிய நிலையில், தற்போது அணையின் நீர்மட்டம் 90.32 அடியை எட்டியுள்ளதால் இந்த ஆண்டு பாசன தேவை மற்றும் குடிநீர் தேவைக்கு போதுமான அளவு தண்ணீர் இருப்பில் உள்ளது என்று பொதுப்பணி துறையினர் தெரிவித்துள்ளனர்.

**சென்னை வந்தது வெள்ள சேதங்களை பார்வையிடும் மத்திய குழு: இன்று தொடங்கி 3 நாட்கள் ஆய்வு**

சென்னை, நவ.26-

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள சேதங்களை பார்வையிட மத்திய உள்துறை அமைச்சக இணை செயலாளர் டி.வி.எஸ்.என்.பிரசாத் தலைமையிலான மத்திய குழு நேற்று இரவு சென்னை வந்தது. இந்த குழு முதல்-அமைச்சர் ஜெயலலிதாவை இன்று சந்தித்து பேசிய பிறகு பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிடுகிறார்கள்.

தமிழ்நாட்டில் கடந்த சில நாட்களாக பெய்த கனமழையால் கடுமையான சேதங்கள் ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நிவாரணம் மற்றும் மறுசீரமைப்பு பணிகளை கவனிக்க முதல்-அமைச்சர் ஜெயலலிதா 39 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை அனுப்பிவைத்தார்.

இந்த அதிகாரிகள் அனுப்பிய சேத விவரங்கள் அடிப்படையில், எந்தெந்த சேதங்களுக்கு எவ்வளவு தொகை நிவாரணம் மற்றும் சீரமைப்புகளுக்கு முதல்கட்டமாக தேவை என்ற வகையில் சேத மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது. இதன் அடிப்படையில், முதல்கட்டமாக ரூ.8,481

கோடி நிதி உதவி அளிக்கவேண்டும் என்று பிரதமருக்கு கடிதம் எழுதிய முதல்-அமைச்சர் ஜெயலலிதா, முழுமையான சேதவிவரங்களை நேரில் பார்வையிட மத்திய குழுவை அனுப்பவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

முதல்-அமைச்சரின் கோரிக்கையை ஏற்று, உடனடியாக ரூ.939 கோடியே 63 லட்சம் கொடுத்து உத்தரவிட்ட மத்திய அரசாங்கம், மேலும் வெள்ள சேதத்தை முழுமையாக மதிப்பீடு செய்து கூடுதல் நிதி உதவியை பரிந்துரைக்க மத்திய குழுவை தமிழகத்துக்கு அனுப்பிவைப்பதாகவும் தெரிவித்திருந்தது.

இதன் அடிப்படையில், மத்திய உள்துறை அமைச்சக இணை செயலாளர் டி.வி.எஸ்.என்.பிரசாத் தலைமையில் வேளாண் அமைச்சக கூடுதல் ஆணையர் ஒய்.ஆர்.மீனா, நிதி அமைச்சக இணை இயக்குனர் எம்.எம்.சச்தேவா, குடிநீர் அமைச்சக முதுநிலை ஆலோசகர் ஜார்கர், சென்னையில் உள்ள மத்திய குடிநீர் அமைச்சக மூத்த மண்டல இயக்குனர் ரோஷினி, எரிசக்தித்துறை உதவி இயக்குனர் சுமித் கோயல், ஊரக மேம்பாட்டு அமைச்சக இயக்குனர் வி.சி.பேரா, பெங்களூருவில் இருக்கும் மத்திய நீர்வள அமைச்சக மேற்பார்வை பொறியாளர் என்.எம்.கிருஷ்ணன் உன்னி, சென்னையில் இருக்கும் சாலைபோக்குவரத்து அமைச்சக மண்டல இயக்குனர் டி.எஸ்.அரவிந்த் ஆகியோர் கொண்ட மத்திய குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்த குழுவினர் நேற்று இரவு சென்னை வந்தனர்.

இதுகுறித்து மத்திய குழுவின் தலைவர் டி.வி.எஸ்.என்.பிரசாத், 'தினத்தந்தி' நிருபரிடம் கூறும்போது, 'சென்னையில் இன்று (வியாழக்கிழமை) காலை முதல்-அமைச்சர் ஜெயலலிதாவை கோட்டையில் சந்தித்து பேச இருக்கிறோம். அதன்பிறகு, தமிழக அரசு வகுத்துதரும் பயணத்திட்டத்தின் அடிப்படையில், பாதிக்கப்பட்ட

பகுதிகளை சென்று பார்வையிடுவோம்' என்று தெரிவித்தார்.

இந்தக் குழுவினர் முதலில் சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் வியாழக்கிழமை ஆய்வுப் பணிகளை மேற்கொள்ள உள்ளனர். இதன்பின், வெள்ளிக்கிழமையன்று கடலூர் சென்று பாதிக்கப்பட்ட அனைத்துப் பகுதிகளையும் பார்வையிட உள்ளதாக அரசுத் துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையே, தமிழகத்துக்கு மத்திய குழுவினர் வரவை முன்னிட்டு, அனைத்துத் துறை செயலாளர்களுடன் தலைமைச் செயலாளர் கே.ஞானதேசிகன் புதன்கிழமை(நேற்று) மாலை ஆலோசனை நடத்தினார். இந்தக் கூட்டத்தில் வருவாய் நிர்வாக ஆணையாளர் அதுல்ய மிஸ்ரா உள்பட முக்கியத் துறைகளின் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

இன்று தொடங்கி மூன்று நாட்கள் ஆய்வு மேற்கொண்ட பின், அரசுத் துறை உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி விட்டு, மத்திய உள்துறை அமைச்சகத்திடம் தனது ஆய்வறிக்கையை இந்த குழு அளிக்கும். மத்தியக் குழுவின் ஆய்வறிக்கை அடிப்படையில் மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்யும் என்பது குறிப்பிடத்தக்கது.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 90 அடியை தாண்டியது



மேட்டூர், நவ. 26–

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையின் தீவிரம் குறைந்துள்ளதால் மேட்டூர் அணைக்கு நீரின் வரத்து குறைந்துள்ளது. எனினும், நீர்வரத்தை விட, டெல்டா பாசனத்திற்காக அணையில் இருந்து திறந்து விடப்படும் நீரின் அளவு குறைவாக இருப்பதால் அணையின் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து வருகிறது.

இதனால் நேற்று அணையின் நீர்மட்டம் 90 அடியை எட்டியது. இன்று காலை 90 அடியை தாண்டி, அணையின் நீர்மட்டம் 90.32 அடியாக உயர்ந்துள்ளது.

இன்று காலை 8 மணி நிலவரப்படி அணைக்கு விநாடிக்கு 6240 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. டெல்டா பாசனத்திற்காக விநாடிக்கு 500 கன அடி தண்ணீரும், மேற்கு, கிழக்கு கால்வாய் பாசனத்திற்கு விநாடிக்கு 500 கன அடி தண்ணீரும் திறந்து விடப்பட்டுள்ளது. மொத்தம் அணையில் இருந்து விநாடிக்கு 1000 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

வருகிற 2016–ம் ஆண்டு ஜனவரி 28–ந்தேதி டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் அளிக்கப்பட வேண்டிய நிலையில், தற்போது அணையின் நீர்மட்டம் 90.32 அடியை எட்டியுள்ளதால் இந்த ஆண்டு பாசன தேவை

மற்றும் குடிநீர் தேவைக்கு போதுமான அளவு தண்ணீர் இருப்பில் உள்ளது என்று பொதுப்பணி துறையினர் தெரிவித்துள்ளனர்.

## தொடர்மழையால் வெங்காய பயிர்கள் சேதம்: 1 ஏக்கருக்கு ரூ.1 லட்சம் இழப்பீடு வழங்க விவசாயிகள் கோரிக்கை



ராசிபுரம், நவ. 26–

கடந்த வாரம் பெய்த தொடர் மழையால் ராசிபுரம் பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் பயிரிடப்பட்டிருந்த வெங்காய பயிர்கள் அழுகி போய் சேதம் அடைந்தன. இதற்கு நஷ்ட ஈடு ரூ.1 லட்சம் வழங்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட விவசாயிகள் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்தனர்.

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட ஆர்.கவுண்டம்பாளையம், முத்துக்காளிப்பட்டி, குருக்கபுரம், சந்திர சேகரபுரம், முருங்கப்பட்டி, சிங்களாந்தபுரம், போடி நாயக்கன்பட்டி, வடுகம், பட்டணம், அணைப்பாளையம் உள்பட பல கிராமங்களில் நூற்றுக்கணக்கான விவசாயிகள் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர்களில் வெங்காயம் பயிரிட்டு இருந்தனர். இந்த வெங்காய பயிர்கள் கடந்த புரட்டாசி மாதம் பயிரிடப்பட்டது.

தற்போது விளைந்த நிலையில் இருக்கும் வெங்காயத்தை ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் விவசாயிகள் அறுவடை செய்து விற்பனை செய்வார்கள். இங்கு விளைவிக்கப்பட்ட வெங்காயம் கோவை, சென்னை, பெங்களூர் போன்ற முக்கிய நகரங்களுக்கு வியாபாரிகள் மூலம் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருவது வழக்கம்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு ராசிபுரம் பகுதியில் பெய்த தொடர்மழை காரணமாக ஏராளமான வெங்காய பயிர்கள் நீரில் அழுகி நாசமானதாக விவசாயிகள் கவலை தெரிவித்தனர். இதனிடையே அழுகிய பயிர்களுக்கு அரசு இழப்பீடு வழங்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஒரு ஏக்கர் நிலத்தில் வெங்காயத்தை பயிரிட சுமார் ரூ.50 ஆயிரத்திற்கு மேல் முதலீடு தேவைப்படுவதாக கூறும் விவசாயிகள், பயிர்கள் சேதமடைந்ததன் காரணமாக ஒவ்வொரு விவசாயியும் லட்சக்கணக்கில் நஷ்டத்தை சந்தித்து உள்ளதாக கூறினார்கள்.

ராசிபுரம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் மாவட்ட நிர்வாகம் அதிகாரிகளை கொண்டு ஆய்வு செய்து, சேதமடைந்த வெங்காய பயிர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு 1 லட்சம் ரூபாய் நிவராணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## தமிழக வெள்ள சேதங்களை பார்வையிட மத்திய குழு சென்னை வந்தது முதல்–அமைச்சர் ஜெயலலிதாவுடன் இன்று சந்திப்பு



சென்னை,

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வெள்ள சேதங்களை பார்வையிட மத்திய குழு நேற்று இரவு சென்னை வந்தது. முதல்–அமைச்சர் ஜெயலலிதாவை இன்று சந்தித்து பேசிய பிறகு பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிடுகிறார்கள்.

<u>மத்திய குழு</u>

தமிழ்நாட்டில் கடந்த சில நாட்களாக பெய்த கனமழையால் கடுமையான சேதங்கள் ஏற்பட்டது. பாதிக்கப்பட்ட இடங்களுக்கு நிவாரணம் மற்றும் மறுசீரமைப்பு பணிகளை கவனிக்க முதல்–அமைச்சர் ஜெயலலிதா 39 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை அனுப்பிவைத்தார்.

இந்த அதிகாரிகள் அனுப்பிய சேத விவரங்கள் அடிப்படையில், எந்தெந்த சேதங்களுக்கு எவ்வளவு தொகை நிவாரணம் மற்றும் சீரமைப்புகளுக்கு முதல்கட்டமாக தேவை என்ற வகையில் சேத மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில், முதல்கட்டமாக ரூ.8,481 கோடி நிதி உதவி அளிக்கவேண்டும் என்று பிரதமருக்கு கடிதம் எழுதிய முதல்–அமைச்சர்

ஜெயலலிதா, முழுமையான சேதவிவரங்களை நேரில் பார்வையிட மத்திய குழுவை அனுப்பவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

முதல்–அமைச்சரின் கோரிக்கையை ஏற்று, உடனடியாக ரூ.939 கோடியே 63 லட்சம் கொடுத்து உத்தரவிட்ட மத்திய அரசாங்கம், மேலும் வெள்ள சேதத்தை முழுமையாக மதிப்பீடு செய்து கூடுதல் நிதி உதவியை பரிந்துரைக்க மத்திய குழுவை தமிழகத்துக்கு அனுப்பிவைப்பதாகவும் தெரிவித்திருந்தது.

<u>சென்னை வருகை</u>

இதன் அடிப்படையில், மத்திய உள்துறை அமைச்சக இணை செயலாளர் டி.வி.எஸ்.என்.பிரசாத் தலைமையில் வேளாண் அமைச்சக கூடுதல் ஆணையர் ஒய்.ஆர்.மீனா, நிதி அமைச்சக இணை இயக்குனர் எம்.எம்.சச்தேவா, குடிநீர் அமைச்சக முதுநிலை ஆலோசகர் ஜார்கர், சென்னையில் உள்ள மத்திய குடிநீர் அமைச்சக மூத்த மண்டல இயக்குனர் ரோஷினி, எரிசக்தித்துறை உதவி இயக்குனர் சுமித் கோயல், ஊரக மேம்பாட்டு அமைச்சக இயக்குனர் வி.சி.பேரா, பெங்களூருவில் இருக்கும் மத்திய நீர்வள அமைச்சக மேற்பார்வை பொறியாளர் என்.எம்.கிருஷ்ணன் உன்னி, சென்னையில் இருக்கும் சாலைபோக்குவரத்து அமைச்சக மண்டல இயக்குனர் டி.எஸ்.அரவிந்த் ஆகியோர் கொண்ட மத்திய குழு நியமிக்கப்பட்டுள்ளது. இந்த குழுவினர் நேற்று இரவு சென்னை வந்தனர்.

இதுகுறித்து மத்திய குழுவின் தலைவர் டி.வி.எஸ்.என்.பிரசாத், 'தினத்தந்தி' நிருபரிடம் கூறும்போது, 'சென்னையில் இன்று (வியாழக்கிழமை) காலை முதல்–அமைச்சர் ஜெயலலிதாவை கோட்டையில் சந்தித்து பேச இருக்கிறோம். அதன்பிறகு, தமிழக அரசு வகுத்துதரும் பயணத்திட்டத்தின் அடிப்படையில், பாதிக்கப்பட்ட பகுதிகளை சென்று பார்வையிடுவோம்' என்று தெரிவித்தார்.

அனேகமாக மத்திய குழுவினர் மொத்தமாகவோ அல்லது குழுக்களாக பிரிந்து சென்றோ பார்வையிடலாம் என்றும், வருகிற சனிக்கிழமை வரை

சென்னை, காஞ்சீபுரம், திருவள்ளூர், கடலூர் போன்ற மாவட்டங்களில் வெள்ள பகுதிகளை பார்வையிட்டுவிட்டு, டெல்லிக்கு திரும்பி செல்வார்கள் என்றும் கூறப்படுகிறது.

## வெள்ளம் வடிந்த பகுதிகளில் நோய் பரவாமல் இருக்க ஜெயலலிதா நடவடிக்கை சுகாதாரத்துறை செயலாளர் பேட்டி



சென்னை,

வெள்ளம் வடிந்த பகுதிகளில் நோய் பரவாமல் இருக்க முதல்–அமைச்சர் ஜெயலலிதா உத்தரவின்படி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக சுகாதாரத்துறை செயலாளர் தெரிவித்தார்.

<u>சுகாதாரத்துறை நடவடிக்கை</u>

கடந்த 10 நாட்களுக்கு மேலாக பெய்த கனமழை காரணமாக சென்னை, கடலூர் உள்ளிட்ட பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்தது. தற்போது வெள்ளம் வடிந்த பகுதிகளில் நோய் பரவாமல் இருக்க தமிழக அரசு சார்பில் தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இது குறித்து சுகாதாரத்துறை செயலாளர் ஜெ.ராதாகிருஷ்ணனிடம் தினத்தந்தி நிருபர் கேட்ட கேள்விகளும் அதற்கு அவர் அளித்த பதில்களும் வருமாறு:–

கேள்வி:–மழை முடிந்து வெயில் அடிக்க ஆரம்பித்து விட்டது. இதைத்தொடர்ந்து காலரா, வாந்திபேதி, டெங்கு போன்ற தொற்று நோய்கள் பரவாமல் இருக்க சுகாதாரத்துறை என்ன நடவடிக்கை எடுத்து வருகிறது?

பதில்:–முதல்–அமைச்சர் ஜெயலலிதாவின் உத்தரவின்படி, சென்னையில் மட்டும் நாள் ஒன்றுக்கு சராசரியாக 236 மருத்துவ முகாம்கள் மூலம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. நடமாடும் மருத்துவ முகாம் மூலமும் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுதவிர மாநிலம் முழுவதும் சராசரியாக 1,116 முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. சராசரியாக ஒரு லட்சத்து 25 ஆயிரம் மக்கள் பயன் பெற்று செல்கிறார்கள்.

<u>நிலவேம்பு</u>

இந்த முகாம்களில் காய்ச்சல், வயிற்றுப்போக்கு, சறுக்கி விழுவதால் ஏற்படும் காயங்கள், சேற்றுப்புண் உள்ளிட்ட தோல் நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. தேவைக்கேற்ப டெட்டனஸ் ஊசிகளும் போடப்பட்டு வருகின்றன. 402 நடமாடும் மருத்துவ முகாம்கள் இயங்குகின்றன. 707 போலீரோ ஜீப்களில் டாக்டர்கள், செவிலியர்கள், சுகாதார ஆய்வாளர்கள், கிராம சுகாதார செவிலியர்கள், உதவியாளர்கள் என 4 ஆயிரம் பேர் நோய் தடுப்பு நடவடிக்கையில் ஈடுபடுவார்கள்.

இதுதவிர 2012–ல் முதல்–அமைச்சரின் அறிவுறுத்தலின்படி, டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்த சித்த மருத்துவ நிலவேம்பு குடிநீர்

வழங்கப்பட்டது. தற்போது 1061 சிறப்பு மருத்துவ முகாம்கள் மூலம் இன்று(நேற்று) முதல் 5 நாட்களுக்கு நோய் பரவாமல் இருக்க நிலவேம்பு குடிநீர் வழங்கப்படுகிறது.

பாதுகாப்பான குடிநீர்

கேள்வி:–தொற்றுநோய் பரவாமல் தடுக்க வேறு என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது?

பதில்:–உள்ளாட்சி அமைப்புகள், மெட்ரோ வாட்டர், குடிநீர் வாரியத்துடன் இணைந்து வெள்ளநீர் வடிந்த பகுதிகளில் கூடுதலாக குளோரின் மருந்து கலக்கப்பட்டு வழங்கப்படுகிறது. அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர் டேங்கர் லாரி மூலம் கடைக்கோடி மக்கள் வரை வழங்க, குளோரின் அளவு பரிசோதிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கழிவுநீர் வடிந்த பகுதிகளில் பிளீச்சிங் பவுடர் தூவப்படுகிறது. கொசுக்கள் உற்பத்தியை தடுக்க கொசு மருந்து புகை அடிக்கும் பணியும் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

கேள்வி:–அரசு மருத்துவமனைகளில் மருந்துகளின் இருப்புகள் எவ்வாறு உள்ளது?

பதில்:–முதல்–அமைச்சரின் உத்தரவுப்படி அனைத்து அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் தேவையான அளவு மருந்துகள் இருப்பில் உள்ளது. மருந்துகள், மாத்திரைகள், குளுக்கோஸ் மற்றும் பாம்புக்கடிக்கான மருந்துகள், ஊசிகள் தேவைக்கேற்ப வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் பதில் அளித்தார்.

அவ்வப்போது மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் விஜயபாஸ்கர் தலைமையில் ஆய்வு கூட்டமும் நடந்து வருகிறது.

**கார்த்திகை தீப விழா கொண்டாட்டம் கொழுக்கட்டை செய்வதற்கான பனை ஓலை விலை விண்ணைத்தொட்டது இல்லத்தரசிகள் ஆதங்கம்**



சென்னை,

கார்த்திகை தீபத் திருநாள் மிகவும் தொன்மை வாய்ந்த திருநாள் ஆகும். வீடுகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களில் விளக்கேற்றியும் ஆலயங்களில் சொக்கப்பனை ஏற்றியும் இந்த திருநாள் தமிழர்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. நேற்று கார்த்திகை தீபத் திருநாள் கொண்டாடப்பட்டது.

<u>பனை ஓலை கொழுக்கட்டை</u>

கார்த்திகை தினத்தன்று பனை ஓலையில் கொழுக்கட்டை செய்வது தமிழர்களின் மரபு ஆகும். குறிப்பாக தென் மாவட்டங்களை சேர்ந்தவர்கள் பனை ஓலையில் கொழுக்கட்டைகள் செய்து இறைவனுக்கு படைத்து வழிபடுவதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

சென்னையில் உள்ள தென் மாவட்டங்களை சேர்ந்த குறிப்பாக நெல்லை, தூத்துக்குடி பகுதிகளை சேர்ந்தவர்கள் தாங்கள் கொழுக்கட்டைக்கு பயன்படுத்தும் பனை ஒலை கிடைக்காமல் பெரிதும் அவதிப்பட்டனர்.

ஒருசில இடங்களில் பனை ஓலை விற்பனைக்கு வந்திருந்தாலும் அதன் விலை குறைந்தபட்சமாக ரூ.70–ம் அதிகபட்சமாக ரூ.140 வரையும் விற்பனையானது.

பல இல்லத்தரசிகளின் பெரிய குறை என்னவென்றால் கொழுக்கட்டை செய்வதற்கு ஆகும் விலையை விடவும் அதிகமாக பனை ஓலை விலை இருப்பதுதான். பனை ஓலை விலை விண்ணைத்தொட்டாலும், அரிதாக கிடைத்த பனை ஓலைகளை கூடுதல் விலையை பொருட்படுத்தாமல் அதனை பொதுமக்கள் வாங்கிச்சென்று அதில் கொழுக்கட்டை செய்து வழிபட்டனர்.

இல்லத்தரசிகள் குமுறல்

இதுகுறித்து சென்னை கொடுங்கையூரை சேர்ந்த இல்லத்தரசி ஒருவர் கூறுகையில், ‘ஒரே ஒரு பனை ஓலை குருத்து வாங்கினேன். இதற்கு ரூ. 70 ஆகிறது. இதை வைத்து 23 கொழுக்கட்டைகள் மட்டுமே செய்ய முடிந்தது. கொழுக்கட்டை செய்வதற்கு தேவையான அரிசி மாவு, வெல்லம், மூலப்பொருட்கள் விலையை விடவும் பனை ஓலை விலை அதிகமாக உள்ளது’ என்றார்.

## ‘கால்நடை வளர்ப்புக்கு நலவாரியம் அமைக்க வேண்டும்’; தமிழக அரசுக்கு கோரிக்கை

சென்னை,

ஆடு, மாடு கால்நடை வளர்ப்புக்கு நலவாரியம் அமைக்க வேண்டும் என்று தமிழக அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டு உள்ளது..

இதுகுறித்து தமிழ்நாடு யாதவ மகாசபை தலைவரும், இந்தியன் வங்கியின் முன்னாள் தலைவருமான எம்.கோபாலகிருஷ்ணன்

சென்னையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

<u>கால்நடை வளர்ப்பு நலவாரியம்</u>

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கினால் மிகப்பெரிய பொருட்சேதம் ஏற்பட்டுள்ளது. இதற்காக ரூ.5 லட்சம் நிதியை தமிழக அரசிடம் வழங்க உள்ளோம். யாதவர்களுக்கு இடஒதுக்கீடு தொடர்பாக ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி அம்பாசங்கர் கமிஷன் பரிந்துரையை செயல்படுத்தாததால், மாநிலத்தின் மூன்றாவது பெரிய சமுதாயமான எங்கள் சமுதாயத்தின் வளர்ச்சி பாதிக்கப்பட்டு உள்ளது. எனவே யாதவ இனத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க தமிழக அரசு உதவ வேண்டும்.

ஆடு, மாடு கால்நடை வளர்ப்பை பாரம்பரிய தொழிலாக கொண்டுள்ள யாதவர்களுக்கு கால்நடை நல வாரியம் ஒன்றை அமைத்து, அதன் தலைவராக யாதவ சமுதாயத்தை சேர்ந்த ஒருவரை நியமிக்க வேண்டும். சென்னை மாநகராட்சியில் பால் உற்பத்தியாளர்கள் நலன் கருதி வார்டுகள் தோறும் கால்நடை கூடங்களையும் அமைக்க வேண்டும் என்று மாநில அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளோம். யாதவ சமுதாயத்தை சேர்ந்த வக்கீலை ஐகோர்ட்டு நீதிபதியாக நியமிக்க வேண்டும் மதுவிலக்கை நடைமுறைப்படுத்துதல், வரும் சட்டமன்ற தேர்தலில் யாதவ சமுதாயத்தினருக்கு வாய்ப்பு அளிக்கும் அரசியல் கட்சியின் வெற்றிக்காக உழைக்கவும் முடிவு செய்து உள்ளோம்.

<u>மத்திய அரசுக்கு நன்றி</u>

விடுதலை போராட்ட வீரர் அழகு முத்துக்கோனுக்கு சிறப்பு அஞ்சல் தலை வெளியிட ஒப்புதல் அளித்துள்ள பிரதமர் நரேந்திர மோடி, மத்திய மந்திரிகள் ரவிசங்கர் பிரசாத், பொன்.ராதாகிருஷ்ணனன் உள்ளிட்டோருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். 2016 சட்டசபை தேர்தலுக்கு முன்பாக யாதவ மக்களின் பலத்தை காட்டும் வகையில் வரும் டிசம்பர் மற்றும் பிப்ரவரி மாதங்களில்

திருவண்ணாமலை மற்றும் மதுரையில் மாநாடு நடத்தவும் திட்டமிட்டுள்ளோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

உடன் பொதுசெயலாளர் ஆர்.பி.தர்மலிங்கம், பொருளாளர் கே.எத்திராஜ், இளைஞர் அணி செயலாளர் பி.வரதராஜன் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

**அந்தமானில் உள்ள மேலடுக்கு சுழற்சி குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக மாறும் நாளை முதல் 3 நாட்களுக்கு கடலோர மாவட்டங்களில் மிக கனமழை பெய்யும்**




சென்னை,

அந்தமானில் உள்ள மேலடுக்கு சுழற்சி குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக மாறுகிறது. இதன் காரணமாக நாளை (வெள்ளிக்கிழமை) முதல் 3 நாட்களுக்கு கடலோர மாவட்டங்களில் அனேக இடங்களில் கனமழை முதல் மிக கனமழை வரை பெய்யும் என்று வானிலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடகிழக்கு பருவமழை

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. கடந்த 4 வருடங்களாக தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை போதிய அளவுக்கு பெய்யவில்லை. இதனால் இந்த வருடமாவது வடகிழக்கு பருவமழை போதிய அளவுக்கு பெய்ய வேண்டும் என்று மக்கள் நினைத்தனர்.

ஆனால் மக்கள் நினைத்ததற்கு மேலாக கடுமையான மழை பெய்தது. தமிழ்நாட்டில் சென்னை, திருவள்ளூர், காஞ்சீபுரம், கடலூர் மாவட்டங்களில் பெரும்பாலான வீடுகளை மழை வெள்ளம் சூழ்ந்தது. பெரும்பாலான வீடுகளில் வெள்ளநீர் வடிந்த நிலையில் சில பகுதிகளில் மழை வெள்ளம் வீடுகளை சூழ்ந்த நிலையில்தான் உள்ளது.

இந்த நிலையில் பல நாட்களுக்கு பின்னர் சென்னை உள்பட பல மாவட்டங்களில் கடந்த 2 நாட்களாக வெயில் அடித்தது.

இன்றைய வானிலை குறித்து சென்னை வானிலை மைய அதிகாரிகள் கூறியதாவது:–

3 நாட்களுக்கு கனமழை

தென் மேற்கு வங்க கடலில் இருந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி வலு இழந்தது. கடந்த 2 நாட்களாக தெற்கு அந்தமான் பகுதியில் மேலடுக்கு சுழற்சி உள்ளது.

அது குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக அடுத்த 48 மணி நேரத்தில் அதாவது 27–ந் தேதி உருவாகும். இதன் காரணமாக தமிழ்நாட்டில் கடலோர மாவட்டங்களில் அனேக இடங்களில் கனமழை முதல் மிக கனமழை பெய்யும்.

பாபநாசம்

அடுத்த 24 மணி நேரத்திற்கு தமிழ்நாட்டில் சில இடங்களில் மழை பெய்யும். நேற்று காலை 8.30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பாபநாசத்தில் 10 செ.மீ. மழையும், மணிமுத்தாறு, அம்பாசமுத்திரம் தலா 3 செ.மீ. மழையும், திருச்செந்தூர், அறந்தாங்கி

தலா 2 செ.மீ. மழையும், ராமேசுவரம், சேரன்மகாதேவி, குன்னூர் தலா 1 செ.மீ. மழையும் பெய்துள்ளது. இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.

**கடல் காற்று பலமாக வீசும் என்ற காரணத்தால் காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் இருந்து 100 படகுகள் மட்டுமே மீன்பிடிக்க சென்றன**



சென்னை,

கடல் காற்று பலமாக வீசும் என்ற காரணத்தால் சென்னை காசிமேடு துறைமுகத்தில் இருந்து நேற்று 100 படகுகள் மட்டுமே கடலுக்குள் மீன்பிடிக்க சென்றன.

காசிமேடு துறைமுகம்

சென்னை காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் விசைப்படகுகள், பைபர் படகுகள் மற்றும் ஆழ்கடலுக்கு செல்லும் படகுகள் என 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படகுகள் உள்ளன. இவற்றில் சுழற்சி முறையில் மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்வது வழக்கம்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு கனமழை கொட்டி தீர்த்தது. மேலும் கடல் காற்று பலமாக வீசும் என்ற பயத்தில் ஆழ்கடல் பகுதிகளுக்கு வழக்கம்போல் மீனவர்கள் மீன்பிடிக்க செல்லவில்லை. இதனால் மீன்பிடி துறைமுகத்தில் படகுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

கடல் காற்று பயம்

இதுகுறித்து மீனவர்கள் சிலர் கூறியதாவது:–

காசிமேடு மீன்பிடி துறைமுகத்தில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட படகுகள் உள்ளன. குறைவான ஆழம் உள்ள பகுதிக்கு செல்லும் மீனவர்கள் காலையில் சென்றுவிட்டு, அன்றைய தினம் மாலையிலேயே வீடு

திரும்பிவிடுவார்கள். ஆழ்கடல் பகுதிக்கு மீன்பிடிக்க செல்பவர்கள் 7 நாட்கள், 5 நாட்கள் கழித்த பின்னரே வீடு திரும்புவார்கள்.

இவ்வாறு தினந்தோறும் 200–க்கும் மேற்பட்ட படகுகளில் மீன்பிடிக்க செல்வது வழக்கம். ஆனால் கடந்த சில நாட்களாக குறைவான படகுகளே மீன்பிடிக்க கடலுக்குள் செல்கின்றன. இதற்கு கடல் காற்று பலமாக வீசும் என்ற பயம்தான் காரணம். கடல் காற்று பலமாக வீசும் சமயத்தில் அலைகள் வழக்கத்திற்கு மாறாக ஆர்ப்பரித்து காணப்படும். அந்த சமயத்தில் படகுகள் கவிழ்வதற்கு வாய்ப்பு உள்ளது.

100 படகுகள்

மேலும் கனமழையும் பாதிப்பினை ஏற்படுத்தும். ஆகையால் உயிரை பனையம் வைக்க நாங்கள் விரும்பவில்லை. இருப்பினும் ஆழ்கடல் பகுதிக்கு செல்லும் படகுகள் 50 மற்றும் குறைவான ஆழம் உள்ள பகுதிக்கு 50 படகுகள் என 100 படகுகளே நேற்று மீன்பிடிக்க கடலுக்குள் சென்றன. மீதம் உள்ள படகுகள் கடற்கரையோரத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு நிறுத்தப்பட்ட படகுகளை சேர்ந்த மீனவர்கள் படகுகளை பழுதுபார்த்தல், வலைகளை கட்டுதல் உள்ளிட்டவற்றை செய்கின்றனர். கனமழை காலத்தில் மீனவர்களுக்கு பாதிப்புகள் அதிகம். ஆனால் எங்களுக்கு நிவாரணம் வழங்கப்படாதது வேதனை அளிப்பதாக உள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## கோவை கலெக்டர் அலுவலகத்தில் நிலவேம்பு கசாயம் வழங்கும் சிறப்பு முகாம் தொடங்கியது



கோவை

கோவை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நிலவேம்பு கசாயம் வழங்கும் சிறப்பு முகாம் தொடங்கியது.

## நிலவேம்பு கசாயம்

தமிழக முதல்–அமைச்சர் உத்தரவின் பேரில், மழைக்காலங்களில் ஏற்படும் காய்ச்சல் மற்றும் தொற்று நோய்களை கட்டுப்படுத்த சித்த மருத்துவ பிரிவு சார்பில் அரசு மருத்துவமனைகள், அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், சிறப்பு முகாம்களை அமைத்தும் நிலவேம்பு கசாயம் வழங்கப்பட்டு வருகிறது.

இதன்படி கோவை மாவட்டத்தில் உள்ள 53 அரசு சித்த மருத்துவ பிரிவுகளில் நிலவேம்பு கசாயம் பொதுமக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிலையில் நேற்று காலை கோவை கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள சித்த மருத்துவ சிகிச்சை பிரிவு கட்டிடம் முன்பு பொதுமக்களுக்கு நிலவேம்பு கசாயம் வழங்கும் சிறப்பு முகாம்

தொடங்கியது. இதனை கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் தொடங்கி வைத்தார். அப்போது அவர் கூறியதாவது:–

9 வகையான மூலிககள்

பொதுமக்களுக்கு வழங்கப்படும் நில வேம்பு கசாயத்தில், நிலவேம்பு, சந்தனம், பற்படாகம், சுக்கு, மிளகு, திப்பிலி உள்பட 9 வகையான மூலிகைகள் கலந்துள்ளன. இந்த குடிநீரை பருகும்போது, உடலில் உள்ள நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து காய்ச்சல் மற்றும் தொற்று நோய்கள் வராமல் தடுக்கிறது. இதனை பெரியவர்கள் 30 மில்லி முதல் 50 மில்லி வரையிலும், 1 முதல் 12 வயது வரை உள்ளவர்கள் 10 மில்லி வரையிலும் தினசரி 5 நாட்களுக்கு அருந்த வேண்டும்.

தற்காத்துக்கொள்ள வேண்டும்

தற்போது மழைக்காலமாக உள்ளதால் மாவட்டத்தில் உள்ள அனைத்து பொதுமக்களும் இதுபோன்ற முகாம்கள், அல்லது அருகில் உள்ள சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகளில் வழங்கப்படும் நில வேம்பு குடிநீரை பருகி காய்ச்சல் மற்றும் தொற்றும் நோய்களிலிருந்து மக்கள் தங்களை தற்காத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர்கூறினார்.

## பரங்கிப்பேட்டை பகுதியில் பலத்த மழை: ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் சேதம் விவசாயிகள் கவலை



பரங்கிப்பேட்டை

பரங்கிப்பேட்டை பகுதியில் பெய்த பலத்த மழையால் ஆயிரம் ஏக்கர் நெற்பயிர்கள் சேதமடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.


<u>நெற்பயிர்கள் மூழ்கியது</u>

பரங்கிப்பேட்டை மற்றும் அதனை சுற்றியுள்ள பஞ்சங்குப்பம், கரிக்குப்பம், சின்னகுமட்டி,பெரியகுமட்டி, கொத்தட்டை, புதுச்சத்திரம், சின்னாண்டிக்குழி, பெரியாண்டிக்குழி, பெரியப்பட்டு உள்பட பல்வேறு கிராமங்களில் விவசாயிகள் நடப்பாண்டில் ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்திருந்தனர். இந்த நிலையில் பரங்கிப்பேட்டை பகுதியில் கடந்த 10 நாட்களுக்கு முன்பு பலத்த மழை பெய்தது.

இதனால் ஏற்பட்ட மழை வெள்ளத்தில், விவசாயிகள் சாகுபடி செய்திருந்த நெற்பயிர்கள் அனைத்தும் மூழ்கியது. இதையடுத்து வயல்வெளிகளை சூழ்ந்திருந்த மழை நீரை வடிய வைக்க விவசாயிகள் தீவிர முயற்சி செய்தனர். இருப்பினும் மழை தொடர்ந்து பெய்து வந்ததால், தண்ணீரை விவசாயிகளால் வடியவைக்க முடியவில்லை. இதனால் நெற்பயிர்கள் அனைத்தும் தற்போது அழுகி சேதமடைந்துள்ளன. இதனால் விவசாயிகள் பெரும் கவலை அடைந்துள்ளனர். இது குறித்து விவசாயி ஒருவர் கூறியதாவது:– பெரும் செலவு செய்து விவசாயிகள் நெற்பயிரை நடவு செய்தனர். பயிர்கள் நன்கு வளர்ந்து வந்தநிலையில், பலத்த மழையால், அவைகள் அழுகிவிட்டன.

இதனால் எங்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதேபோன்று சாகுபடி செய்யப்பட்டிருந்த சவுக்கு மற்றும் தைலம் மரக்கன்றுகளும் பலத்த மழையால் சேதமடைந்துள்ளது. இதனால் விவசாயிகள் செய்வது அறியாது தவித்து வருகின்றனர். மழையால் பாதிக்கப்பட்ட எங்களுக்கு உரிய நிவாரண தொகையை வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## அருவியில் குளிக்க தடை நீங்கியதால் ஒகேனக்கல்லில் சுற்றுலா பயணிகள் உற்சாகம்



ஒகேனக்கல்லில் அருவியில் குளிக்க தடை நீங்கியதால் சுற்றுலா பயணிகள் உற்சாகமாக குளித்து மகிழ்ந்தனர்.

சீரமைப்பு பணி

தமிழகத்தின் முக்கிய சுற்றுலா தலங்களில் ஒன்றான தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு தமிழகம் மட்டுமின்றி கர்நாடகா, ஆந்திரா, கேரளா மாநிலங்களில் இருந்தும் அதிக சுற்றுலா பயணிகள் வந்து செல்கிறார்கள். கடந்த சில வாரங்களாக காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த கனமழை

காரணமாக ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து அதிகரித்தது. இதனால் அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதன்காரணமாக கடந்த 4-ந்தேதி முதல் ஒகேனக்கல் அருவிகளில் குளிக்க தடை விதிக்கப்பட்டது. பரிசல்கள் இயக்கத்திற்கும் தடை விதிக்கப்பட்டது. இந்த நிலையில் வெள்ளம் காரணமாக ஒகேனக்கல் அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்கும் இடங்களில் தடுப்பு சுவர்கள், பாதுகாப்பு வேலிகள் சேதமடைந்தன. அவற்றை வெல்டிங் செய்து சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டது.

உற்சாகம்

இந்த நிலையில் கடந்த சிலநாட்களாக காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் மழை குறைந்ததால் ஒகேனக்கல்லுக்கு தண்ணீர் வரத்து குறைந்தது. இதையடுத்து ஒகேனக்கல் அருவிகளில் குளிக்க விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டது. இதனால் மகிழ்ச்சி அடைந்த சுற்றுலா பயணிகள் நேற்று ஒகேனக்கல் அருவியில் குளிக்க திரண்டனர். அருவியில் உற்சாகமாக குளித்து மகிழ்ந்தனர்.

## வைகை அணையில் வெள்ள அபாய எச்சரிக்கை: முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கலெக்டர் ஆலோசனை



நிலக்கோட்டை

வைகை அணையில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டதை தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து கலெக்டர் ஹரிகரன் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கை

தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டியை அடுத்துள்ள வைகை அணையின் நீர்மட்டம் நேற்று முன்தினம் 66 அடியை தாண்டியது. இதையடுத்து மாவட்ட நிர்வாகம் தரப்பில் வைகை ஆற்றின் கரையோரம் வசிக்கும் மக்களுக்கு முதல் கட்டமாக வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

இதையடுத்து நிலக்கோட்டை தாலுகாவில் உள்ள அணைப்பட்டி பேரணையை திண்டுக்கல் மாவட்ட கலெக்டர் ஹரிகரன் ஆய்வு செய்தார்.

அப்போது பொதுப்பணித்துறை அதிகாரிகளிடம் வைகை ஆற்றுப்படுகையில் தற்போது செல்லும் தண்ணீரின் அளவு, அணையின் நீர்மட்ட விவரங்கள் குறித்து கேட்டறிந்தார்.

பின்னர் வைகை அணையின் நீர்மட்டம் தொடர்ந்து அதிகரித்து வருவதால் எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

குறித்து அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார். அப்போது வைகை ஆற்றின் கரைப்பகுதிகளில் உள்ள கிராமங்களில் வசிக்கும் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் தீவிர கண்காணிப்பில் ஈடுபடும்படி அவர் கூறினார்.

<u>உணவு பொருட்கள்</u>

மேலும் கண்மாய்கள், குளங்களுக்கு தண்ணீர் செல்லும் வாய்க்கால்களில் அடைப்பு ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டார். அத்துடன் பொதுமக்களுக்கு பாதிப்பு ஏற்படும் நிலையில், அவர்களை தங்க வைப்பதற்காக பள்ளிக்கூடங்கள், சமுதாய கூடங்களை தயார் நிலையில் வைக்கும்படி கூறினார். அத்துடன் அரிசி, பருப்பு உள்ளிட்ட உணவு பொருட்களை சேமித்து வைப்பதுடன், தீயணைப்பு படையினரை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும் என்றும் அவர் உத்தரவிட்டார். வெள்ள சேதங்கள் ஏற்படாமல் தடுக்கும் வகையில் வருவாய்த்துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கூறினார். அப்போது திண்டுக்கல் ஆர்.டி.ஓ. மனோகரன், தாசில்தார் காளிமுத்து, நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் ஜெயச்சந்திரன், முனியாண்டி உள்பட அதிகாரிகள் பலர் உடன் இருந்தனர்.

## பர்கூர் மலைப்பகுதியில் தொடர் மழை: தோட்டத்தில் தண்ணீர் தேங்கி மரவள்ளிக்கிழங்குகள் சேதம்



அந்தியூர்

பர்கூர் மலைப்பகுதியில் தொடர் மழையால் தோட்டத்தில் தண்ணீர் தேங்கி நின்றதால் மரவள்ளிக்கிழங்குகள் அழுகி சேதம் அடைந்தது.

<u>தொடர் மழை</u>

அந்தியூர் அருகே பர்கூர் மலைப்பகுதியில் தாமரைகரை, ஈரெட்டி, தேவர்மலை, வெள்ளிமலை, மடம், பர்கூர், தட்டகரை, ஒந்தனை, ஓசூர், கொங்காடை உள்பட பல்வேறு மலைக்கிராமங்கள் உள்ளன. இங்குள்ள விவசாயிகள் மரவள்ளிக்கிழங்கு, கம்பு, ராகி, மக்காச்சோளம் உள்பட பல்வேறு வகையான பயிர்வகைகளை உற்பத்தி செய்து வருகின்றனர்.

மேலும் கால்நடை வளர்த்தல் முக்கிய தொழிலாக உள்ளது. தற்போது பர்கூர் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதன் மூலம் அங்குள்ள ஏரிகள் மற்றும் வனப்பகுதியில் உள்ள தடுப்பணைகள் நிரம்பியது.

<u>மரவள்ளிக்கிழங்குகள் சேதம்</u>

இதனால் மரவள்ளிக்கிழங்கு பயிரிடப்பட்டுள்ள தோட்டத்தில் தொடர்ந்து தண்ணீர் தேங்கி நிற்கிறது. அதனால் சுமார் 1000–க்கும் மேற்பட்ட ஏக்கரில் பயிர் செய்துள்ள மரவள்ளிக்கிழங்குகள் அழுகி சேதம் அடைந்து வருகிறது.

இதுகுறித்து விவசாயிகள் கூறும்போது, ‘பர்கூர் மலைப்பகுதியில் அதிக அளவில் மரவள்ளிக்கிழங்குகள் பயிரிடப்பட்டுள்ளது. மரவள்ளிக்கிழங்குகள் அறுவடை செய்ய 10 மாதங்கள் ஆகும். தற்போது அறுவடை செய்ய வேண்டிய நேரத்தில் மழை பெய்து வருகிறது. அதனால் மரவள்ளிக்கிழங்கு தோட்டத்தில் அதிக அளவு தண்ணீர் தேங்கியதால் கிழங்குகள் எல்லாம் அழுக ஆரம்பித்து விட்டது. இதனால் ஒரு ஏக்கருக்கு ரூ.30 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக விவசாயிகள் அனைவரும் கவலை அடைந்துள்ளோம். எனவே பாதிக்கப்பட்ட பர்கூர் மலைப்பகுதி விவசாயிகள் அனைவருக்கும் அரசு உதவித்தொகை வழங்க வேண்டும்‘ என்றார்கள்.

## வடநெம்மேலி பண்ணையில் இருந்து முதலைகள் தப்பிக்கவில்லை இயக்குனர் தகவல்



மாமல்லபுரம்,

வடநெம்மேலி பண்ணையில் இருந்து முதலைகள் தப்பிக்க வில்லை என்று இயக்குனர் ஜாய் விட்டேகர் கூறினார்.

<u>முதலை பண்ணை</u>

மாமல்லபுரத்தை அடுத்த கிழக்கு கடற்கரை சாலை வடநெம்மேலியில் உள்ள முதலை பண்ணையில் ஆப்பிரிக்க முதலை, ஊசி மூக்குமுதலை, 5 அடிநீளம், 10 அடிநீளம் ராட்சத முதலை என பலவகைப்பட்ட 3 ஆயிரம் முதலைகள் உள்ளன. நாள்தோறும் ஆயிரக்கணக்கான சுற்றுலா பயணிகள் இங்கு வந்து கண்டுகளித்து விட்டு செல்வதுண்டு.

இந்த நிலையில் நேற்று இந்த முதலை பண்ணையில் இருந்து 50 முதலைகள் தப்பி கடல் வழியாக சென்றுவிட்டதாக 'வாட்ஸ் அப்' பில் தகவல் பரவியது. இதையடுத்து அங்கு செய்தி சேகரிப்பதற்காக

ஏராளமான பத்திரிகை, தனியார் தொலைக்காட்சி நிருபர்கள் சென்றனர். அப்போது முதலைகள் எதுவும் தப்பிக்கவில்லை எனவும், வீண் வதந்தி எனவும் தெரிய வந்தது.

இதுகுறித்து வடநெம்மேலி முதலை பண்ணை இயக்குனர் ஜாய் விட்டேகர் நிருபர்களிடம் கூறுகையில்:–

வடநெம்மேலி முதலை பண்ணையில் ஆயிரக்கணக்கான முதலைகளை நாங்கள் பராமரித்து பாதுகாத்து வருகிறோம்.

<u>தப்பிச்செல்ல வாய்ப்பு இல்லை</u>

முதலைகள் 7 அடி உயர சுவர்களுக்கு மத்தியில் உள்ள குடில்களில் அடைக்கப்பட்டுள்ளன. சுவரின் மேல் பாதுகாப்பிற்காக கம்பி வலைகளும் பொருத்தப்பட்டுள்ளன. இப்படி பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் எப்படி முதலைகள் தப்பிச்செல்ல வாய்ப்பு இருக்கும். மேலும் இங்குள்ள முதலைகள் நன்னீரில் வாழும் தன்மை கொண்டவை. கடல் நீரில் வாழும் தன்மை இதற்கு இல்லை. அப்படி கடலுக்கு தப்பி சென்றாலும் அந்த சீதோஷ்ண நிலை இதற்கு ஒத்து வராது. முதலைகள் இறந்து விடும். யாரோ சில விஷமிகள் வீண் வதந்தி பரப்பி விட்டிருக்கின்றனர். இங்கிருந்து முதலைகள் தப்பிச்செல்ல ஒரு சதவீத வாய்ப்பு கூட இல்லை. அந்த அளவுக்கு இங்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது, இவ்வாறு அவர் கூறினார்.

## குமரி மாவட்டத்தில் மழை: பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 25 நாட்களாக 74 அடியாக நீடிப்பு திற்பரப்பு அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை



குமரி மாவட்டத்தில் பெய்த மழையால் பெருஞ்சாணி அணை நீர்மட்டம் 25 நாட்களாக 74 அடியாக நீடிக்கிறது. திற்பரப்பு அருவியில் வெள்ளம் கொட்டுவதால், சுற்றுலா பயணிகள் குளிக்க தடை நீடிக்கப்பட்டுள்து.

பெருஞ்சாணி அணை

குமரி மாவட்டத்தில் பெய்த மழையின் காரணமாக அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து, அணைகள் நீர்மட்டம் வெகுவாக உயர்ந்து உள்ளது.

பெருஞ்சாணி அணையின் மொத்த கொள்ளளவு 77 அடி ஆகும். இதன் நீர்மட்டம் கடந்த மாதம் 29–ந்தேதி 74 அடியை எட்டியது. அன்று முதல் கடந்த 25 நாட்களுக்கு மேலாக அணையின் நீர்மட்டம் சிறிது உயர்வதும், குறைவதுமாக தொடர்ந்து 74 அடியிலேயே நீடித்து வருகிறது. நேற்று அணையின் நீர்மட்டம் 74.15 அடியாக இருந்தது.

மற்ற அணைகளில் தற்போது உள்ள நீர் மட்டத்தின் அளவு வருமாறு:–

பேச்சிப்பாறை 45.65 அடியாகவும், சிற்றாறு–1 அணை 15.67 அடியாகவும், சிற்றாறு–2 அணை 15.78 அடியாகவும், பொய்கை அணை 20.30 அடியாகவும் உள்ளது. முக்கடல் அணை முழு கொள்ளளவான 25 அடியையும், மாம்பழத்துறையாறு அணையின் முழு கொள்ளளவான 54.12 அடியையும் எட்டி, அதிலேயே நீடித்து வருகின்றன.

குளிக்க தடை

அணைகளில் திறந்து விடப்பட்ட தண்ணீர், திற்பரப்பு அருவியில் வெள்ளம் போல் கொட்டுகிறது. இதனால் திற்பரப்பு அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க பேரூராட்சி செயல் அலுவலர் ரெமாதேவி தடை விதித்தார். இந்த தடை நேற்று 7–வது நாளாக நீடித்தது.

திற்பரப்பு அருவிக்கு வந்த சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டதால், அருவியில் தண்ணீர் கொட்டுவதை பார்த்து சென்றனர்.

## தோவாளை மார்க்கெட்டில் மல்லிகை பூ விலை மேலும் ரூ.200 உயர்வு ஒரு கிலோ ரூ.1,200–க்கு விற்பனை



தோவாளை பூ மார்க்கெட்டில் நேற்று மல்லிகை பூ விலை மேலும் ரூ.200 உயர்ந்து காணப்பட்டது. இதனால் ஒரு கிலோ ரூ.1,200–க்கு விற்பனை செய்யப்பட்டது.

பூ மார்க்கெட்

நாகர்கோவில் அருகே தோவாளையில் பூ மார்க்கெட் உள்ளது. இங்கு தினமும் குமரி மாவட்டத்தில் இருந்து மட்டுமின்றி நெல்லை, மதுரை உள்பட பல இடங்களில் இருந்தும் பூக்கள் விற்பனைக்காக கொண்டுவரப்படுகிறது.

பூக்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்கப்படுகிறது. இதனால் மார்க்கெட்டில் எப்போதும் விவசாயிகள், வியாபாரிகள் என கூட்டம் அலைமோதும்.

மல்லிகை விலை மேலும் உயர்வு

இந்தநிலையில் நேற்று முன்தினம் ஒரு கிலோ ரூ.1000–த்திற்கு விற்கப்பட்ட மல்லிகை பூ, நேற்று மேலும் விலை ரூ.200 உயர்ந்து காணப்பட்டது. இதனால் ஒரு கிலோ ரூ.1,200–க்கு விற்பனை செய்யப்பட்டது.

மல்லிகை பூவின் விலை உயர்வு குறித்து பூ வியாபாரி விஸ்வநாதன் கூறுகையில் “ இன்று (நேற்று) புதன்கிழமை திருக்கார்த்திகை என்பதால் மல்லிகை பூவின் தேவை அதிகமாக இருந்தது. ஆனால் மல்லிகை பூவின் வரத்து மார்க்கெட்டிற்கு குறைவாக இருந்தது. இதனால் வியாபாரிகள் போட்டி போட்டு மல்லிகை பூக்களை ஏலம் எடுத்தனர். இதனால் தான் மல்லிகை பூவின் விலை உயர்ந்து காணப்பட்டது” என்றார்.

விலை விவரம்

மற்ற பூக்களின் விலை விவரம் வருமாறு:– பிச்சி ரூ.1,100–க்கும், முல்லை ரூ.800–க்கும், கனகாம்பரம் ரூ.350–க்கும், அரளிப்பூ ரூ.300–க்கும், ஸ்டெம்புரோஸ் ரூ.220–க்கும், பட்டன்ரோஸ் ரூ.180–க்கும், வெள்ளைசிவந்தி ரூ.150–க்கும், சம்பங்கி ரூ.150–க்கும், மருக்கொழுந்து ரூ.120–க்கும், சிவந்தி ரூ.120–க்கும், கொழுந்து ரூ.100–க்கும், கேந்தி ரூ.80–க்கும், மஞ்சள் கேந்தி ரூ.80–க்கும், வாடாமல்லி ரூ.70–க்கும், கோழிப்பூ ரூ.60–க்கும், மாம்பழ கேந்தி ரூ.60–க்கும், துளசி ரூ.30–க்கும், பச்சை ரூ.10–க்கும், தாமரை (100 எண்ணம்) ரூ.1000–க்கும், ரோஜா (100 எண்ணம்) ரூ.40–க்கும் விற்பனை செய்யப்பட்டது.

## குளித்தலை பகுதியில் உள்ள விதைப்பண்ணைகளில் இணை இயக்குனர் ஆய்வு



குளித்தலை பகுதியில் உள்ள விதைப்பண்ணைகளில் இணை இயக்குனர் ஆய்வு செய்தார்.

இணை இயக்குனர் ஆய்வு

குளித்தலையை அடுத்த கருங்கலாப்பள்ளி கிராமத்தில் விதைப்பண்ணை உள்ளது. இங்கு 40 ஏக்கரில் என்.ஆடுதுறை 49 விதை பயிரிடப்பட்டு உள்ளது. இதேபோன்று இனுங்கூர் வல்லகுளத்தில் 10 ஏக்கரில் வம்பன் 5 ரக உளுந்து பயிரிடப்பட்டு உள்ளது. இதேபோல் பாறைப்பட்டியில் நெல்விதை பண்ணை, இனுங்கூர் அரசு விதைபண்ணைகளை கோவை விதைச்சான்று மற்றும் அங்ககசான்று இயக்குநரக இணை இயக்குனர் பழனிச்சாமி பார்வையிட்டு ஆய்வு செய்தார். விளக்கம் அளித்தார்

அப்போது தரமான விதைகள் உற்பத்தி செய்ய விதைபண்ணை விவசாயிகள் தொழில்நுட்பத்தை கடைபிடிக்க வேண்டும் என்று கூறினார். தொடர்ந்து களை எடுத்தல், பூச்சி நோயில் இருந்து பயிரை எவ்வாறு பாதுகாக்க வேண்டும். அறுவடையின்போது ஈரப்பதம் 13

சதவீதம் வரும்வரை எவ்வாறு காயவைப்பது என்பது குறித்து விளக்கம் அளித்தார். இந்த ஆய்வின்போது அலுவலர்கள் கைலாசபதி, தண்டபாணி, கணேசன் உள்பட பலர் உடன் இருந்தனர்.

## வடகிழக்கு பருவமழையையொட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்த ஆலோசனை கூட்டம்



வடகிழக்கு பருவமழையையொட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. ஆலோசனை கூட்டம்

அரியலூர் மாவட்டம் செந்துறை வட்டாட்சியர் அலுவலக கூட்டரங்கில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்வது குறித்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் சரவணவேல்ராஜ் தலைமை தாங்கி பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

34 குழுக்கள்

அரியலூர் மாவட்டத்தில், வடகிழக்கு பருவமழையினால் ஏற்பட்ட இடர்பாடுகள் குறித்து தகவல்களை அறிந்து கொள்ள மாவட்ட நிர்வாகம் அரசு அலுவலர்களால் 34 குழுக்கள் அமைக்கப்பட்டு, அரியலூர், செந்துறை, ஜெயங்கொண்டம் ஆகிய இடங்களில் வருவாய் அலுவலர், உதவி கலெக்டர், திட்ட இயக்குனர்கள் மேற்பார்வையில் குழு உறுப்பினர்கள் குடிசை வீடுகள், ஆடு, மாடு போன்ற கால்நடைகள் இழப்பு, விவசாயிகளின் பயிர்சேதங்கள், மின்சார கம்பி, கம்பம் போன்ற பாதிப்புகள், நெடுஞ்சாலைத்துறை மற்றும் வளர்ச்சித்துறை மூலம் சேதமடைந்த சாலைகள், பள்ளிகளில் கட்டிடம் மற்றும் நீர் தேங்கி நிற்கும் இடங்கள், சமையலறைகள் மற்றும் உயர்நிலை, கீழ்நிலை நீர்த்தொட்டிகள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய இடங்களில் உள்ள இடர்பாடுகளையும், டெங்கு போன்ற சுகாதார கேடுகளை தடுக்கும் வண்ணம் ஆய்வு செய்து, உடனுக்குடன் மாவட்ட அலுவலகத்திற்கு தகவல் கொடுக்கும்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தூய்மைப்பணிகள்

இக்குழுவில் வருவாய்த்துறை அலுவலர்கள், வளர்ச்சித்துறை அலுவலர்கள், வேளாண்மைத்துறை அலுவலர்கள், நில அளவைத்துறை அலுவலர்கள், மருத்துவத்துறை அலுவலர்கள் மற்றும் இதரத்துறை அலுவலர்களும் குழுவிற்கு 5 நபர்கள் கொண்டு வாகனங்களுடன் ஆய்வு பணியில் மேற்கொள்வார்கள். பொதுமக்கள் தங்கள் இடர்பாடுகளை இக்குழுவினர்களிடம் தெரிவிக்க வேண்டும்.

மேலும் கடந்த சில தினங்களாக எனது உத்தரவின்பேரில் செந்துறை ஒன்றியத்தில் தூய்மைப்பணிகள் மேற்கொண்ட குழுக்கள் சிறப்பாக பணிகளை முடித்துள்ளது. அதேபோன்று அரியலூர் மாவட்டம் முழுவதும் அமைக்கப்பட்டுள்ள 34 குழுக்களும் பருவமழைக்கால பணிகளை

சிறப்பாக செய்து முடிக்கவேண்டும். இவ்வாறு அவர் கூறினார். அதிகாரிகள்

கூட்டத்தில், உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ராஜகோபாலன், செந்துறை வட்டாட்சியர் ராஜேந்திரன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் சரவணன், ஒன்றிய ஆணையர் பிரபாகரன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் வடிவேல் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## நிலவேம்பு கசாயம் வழங்கும் சிறப்பு முகாம்



அரியலூர் மாவட்டம் மீன்சுருட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் நிலவேம்பு கசாயம் வழங்கும் சிறப்பு முகாம் நடைபெற்றது. முகாமில் குண்டவெளி ஊராட்சி மன்ற தலைவர் பொய்யாமொழி தலைமை தாங்கி நிலவேம்பு கசாயத்தை பொது மக்களுக்கு வழங்கினார். ஒன்றிய கவுன்சிலர் மகேஷ், ஊராட்சி மன்ற தலைவர் ரேவதி தேவதாஸ்

ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக சுகாதார ஆய்வாளர் வேல்முருகன் வரவேற்றார். நிகழ்ச்சியில் வட்டார மருத்துவ அலுவலர் லட்சுமிதரன், சித்த மருத்துவர் ஜெயபாரதி ஆகியோர் கொசு உற்பத்தியை தடுக்கும் முறை பற்றி பேசினார்கள். நிலவேம்பு கசாயம் காலை 7 மணிமுதல் மாலை 5 மணி வரை குடிக்கலாம் என்றும், காய்ச்சல் உள்ளவர்களில் பெரியவர்கள் காலையில் 50 மில்லியும் மாலை 50 மில்லியும் மற்றும் சிறுவர்கள் 10 முதல் 20 மில்லிவரையும் குடிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டது. இதில் மருத்துவர் ஆர்த்தி, சுபாஷினி ஆகியோர் கலந்து கொண்டனர். முடிவில் ஜோதிமணி நன்றி கூறினார்.